வெளியீடு எண். 48

உ

திருச்சிற்றம்பலம்.

# திருக்கடவூருலா

## மூலமும் அரும்பதவுரையும்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்.

1941.

விலை ரூ. 0-4-0

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

[library stamp]

திருக்கடவூர்

ஸ்ரீ சுப்பிரமணியக் கவிராஜ மூர்த்திகள் இயற்றிய

# திருக்கடவூருலா

## மூலமும் அரும்பதவுரையும்.

---

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

24-வது மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

35-வது ஆண்டு நிறைவு விழா இவ்வாலயத்தில்

நடத்தியதன் நினைவு குறியாக

விஷு ஆண்டு கார்த்திகைத்திங்கள் திருவாதிரை நன்னாளில்

வெளியிடப்பெற்றது.

---

ஸ்ரீநிவாஸ பதிப்பகம், திருவையாறு.

1941

# இந்நூலிலடங்கியவை.


பக்கம்.

1. பதிப்புரை iii-iv
2. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் உருவப்படம்
3. முகவுரை v-viii
4. முதற்பதிப்பு மூலத்தின் ஆங்கில முன்னுரை ix-xi
5. சிறப்புப்பாயிரம் xii
6. இந்நூலாசிரியரின் தம்பி, தநயர், பேரர் கூறிய முருகன் தோத்திர முதலியன xiii-xiv
7. இந்நூலின் பொருட்சுருக்கம் xv-xxi
8. திருக்கடவூருலா மூலமும் அரும்பதவுரையும் 1-68
9. ஆதீன வெளியீட்டுக் குறிப்பு. க-உ

குருபாதம்.

திருச்சிற்றம்பலம்.

# பதிப்புரை.

திருக்கடவூருலா என்னும் இந்நூலானது, வித்தார கவியாற் பாடப்படும் தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களு ளொன்றுகிய சிறுகாப்பியமாகும். இந் நூலாசிரியராகிய ஸ்ரீ சுப்பிரமணியக் கவிராயரவர்கள், வில்வவனமெனப் பெயரிய திருக்கடவூர் வீரட்டானப்பதியின்கண், சைவ வேளாண்குடி யிற்றேன்றினவராவர். ஸ்ரீ அபிராமி அம்மை சமேத ஸ்ரீ அமிர்த கடேசப் பெருமான் திருக் கோயிலில் பரம்பரை ஓதுவார் குடும்பத்தினர் என்பது சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். இவர் கள் கி. பி. 19-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவராவர் என்பது இவர்கள் தம்பியார், புதல்வர், பேரர் முதலானவர்கள் பாடிய இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள முருகப்பெருமான் தோத்திரங் களாலறியக்கிடக்கும். இதன் மூலப்பதிப்பு கி. பி. 1917-ம் ஆண்டில் இவ்வாசிரியர் பேரர் திரு. அ. சாமிநாத ஓதுவா மூர்த்திகளுடைய நன் முயற்சியினுல் இப்போது மயிலாப்பூரி லிருக்கும் திரு. சம்புலிங்கம் பிள்ளையினுல் அச்சிடப்பட்டதா கும். இவர்கள் எங்கள் ஆதீனத்தில் பெரிதும் ஈடுபாடுடையர் ஆவர். இவர் செய்த பிறநூல்களாவன :— திருக்கடவூர்ப் புராணம், திருநள்ளாற்றுப் புராணம், மயிலைக்கோவை, மயிலையந்தாதி முதலியன. இவர்கள் சைவசமய ஆகமபுராண ங்களும் வேத வேதாந்தங்களும் உணர்ந்தவரென்பது இவரு டைய நூலால் இனிது விளங்கும்.

இந்நூல் திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ் விரிவுரை யாளர் வித்துவான் திருவாளர், இராம, கோவிந்தசாமி பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட அரும்பதவுரை குறிப்புரையுடன் திருக்கைலாய பரம்பரை நந்திமரபு மெய்கண்ட சந்தானத்து வரு தருமபுரவாதீனம் 24-வது குருமூர்த்திகளாக எழுந்தருளி

யிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய மகாசந்நிதானம் அவர்களின் 35-வது ஆண்டு நிறைவுவிழா இவ்வாலயத்தில் நடத்தப்பெற்றதன் நினைவு குறியாக வெளியிடப்பெற்றது.

இப்படிக்கு
மௌன, சோமசுந்தரத் தம்பிரான்
திருச்சி மலைக்கோட்டை
மௌனமடம் தருமபுரம் ஆதீனம்.

தருமபுரம்
3—12—41.

உ
குருபாதம்

## பதிப்பித்தார் சிறப்புப்பாயிரம்.

(அகவற்பா).

அம்பிகை பாகன் அருளுரு வண்ணல்
தெருளுற வடியர்கட் கொருதிரு வுற்றே
தருமையம் பதியுறை சற்குரு சண்முக
தேசிகப் பெருமான் செந்தமி ழாதிய
பல்கலைக் குரிசில் செல்லுறழ் கொடைக்கை
நம்பி யிருபா னன்கா வதுகுரு
இத்தலத் தவர்தம் மெய்த்திரு வாளன்
அருணெறி யொழுகு மன்பமர் மௌன
சோம சுந்தரத் துங்கமா முனிவரன்
ஒப்பில் புலவன் சுப்பிர மணியக்
கவிரா யன்புனை கடவூ ருலாவினைச்
சண்முக தேசிகர் தகுமுப் பானைந்
தாவது நிறைவிழா வணைந்தநற் போழ்தில்
அரும்பத வுரையொன் றணிபெற வாக்குவித்
தச்சிற் பதிப்பித் தளித்தன னாகலின்
இன்னவா றுணை யிட்டருள் புரியும்
நங்குரு மூர்த்தி நாட்பல கழிய
என்று நின்று நன்றுவா ழியரே.

இங்ஙனம்,
T. S. கலியாணசுந்தர தேசிகர்.

தருமபுரம்,
3–12–41.



உ

குருபாதம்.

# திருக்கடவூருலா

## மூலமும் அரும்பதவுரையும்.

---

திருக்கயிலாயபரம்பரைத்

திருநந்திமரபு மெய்கண்ட சந்தானம்

தருமபுர ஆதீனம்

*24-வது குருமூர்த்தமாக எழுந்தருளிய*

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்


*35-ம் ஆண்டின் நிறைவு விழா நினைவு குறியாக*

*விசு ஆண்டு கார்த்திகைத்திங்கள் 21-ம் நாள்*

*திருவாதிரை நன்னாளில் இந்நூல்*

*வெளியிடப்பெற்றது.*

---



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

௨௪-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்

உ

*கணபதி துணை.*

*ஸ்ரீ அபிராமியம்மைசமேத ஸ்ரீ அமிருதகடேசுவரப் பெருமான் திருவடி வாழ்க.*

# முகவுரை.

*திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.*

*திருச்சிற்றம்பலம்.*

**பாலனுக் காயன்று பாற்கட லீந்து பணைத்தெழுந்த**
**ஆலினுக் கீழிருந் தாரண மோதி யருமுனிக்காய்ச்**
**சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந்தடர்ந் தோடிவந்த**
**காலனைக் காய்ந்தபி ரான்கட வூருறை யுத்தமனே.**

*திருச்சிற்றம்பலம்.*

அண்டரும் பராவுறுந் தண்டமிழ் நாட்டிற் றம்புகழ் நிறீஇய வள்ளலையொப்பத் தெள்ளுதமிழ்ப் புலவரும் புகழுடம் பாகிய நூல்களை யாத்துத் தம்புகழை நிலைபெற வைத்தோராவர்.

*"தேடினு ரியாவ ரேகொ லெழுவகை யானுஞ் சீர்த்தி*
*நீடினு ரவரே யென்பர் நீணிலத் துயர்ந்த மாந்தர்" என*

ஈண்டுக் குறிக்கப்படும் எழுவகைச் சீர்த்தியினுள் பிரபந்த நிர்மாணமும் ஒன்றேயாகும். அப்பிரபந்தங்கள், சிறுகாப்பியம் பெருங்காப்பியமென விருவகையாம். கவி நால்வகையினர். அவர்கள், சித்திரகவி, வித்தாரகவி, மதுரகவி, ஆசுகவி எனப் படுவர். இந்நால்வருள், வித்தாரகவியாற்பாடப்படும் தொண் ணூற்றுறுவகைப்பிரபந்தங்களுள் உலாவெனும் பிரபந்தமு மொன்றாகும். இஃது உலாப்புறம் (புறவுலா) என வழங்கப் பெறும்.

இது, பேதைமுதல் பேரிளம்பெண் இறுதியாகவுள்ள ஏழு வகைப்பருவமகளிரும் கண்டு மயக்கங்கொளும் வண்ணம் நாய

கன் (தலைவன்) மறுகின்கண் திருத்தேரில் உலாவிவந்தான் என்று கலிவெண்பாவினாற் பாடப்படுவதாகும்.

இவ்வுலாவின், இலக்கணத்தினைப் பன்னிருபாட்டியல் வெண்பாப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கணவிளக்கப்பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்களிற் பரக்கக் காணலாம். பன்னிருபாட்டியலில் உலாவின் இயலானது பின் வருமாறு கூறப்பட்டுள்ளன.

1 "முதனிலை பின்னேழு நிலையுலா வெண்கலி"

2 "பாட்டுடைத் தலைவ னுலாப்புற வியற்கையும்
ஒத்த காமத் தினையாள் வேட்கையும்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே"

3 "பேதை முதலா வெழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா னொருவனைக்
காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே"

4 "குடிநெறி மரபு கோளல்கொடை விடியல்
நன்னீ ராடல் நல்லணி யணிதல்
தோன்னக ரெதிர்கோளல் நன்னெடு வீதியின்
மதகளி றூர்தல் முதனிலை யாகும்"

5 "ஆதி நிலையே குழாங்கோள லென்றெடுத்
தோதிய புலவரு முளவென மொழிப",

6 ஏழு நிலையு மியம்புங் காலை
பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத் தாதல்
நோக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே" என்பனவாம்.

உயிர்களில், ஆண் பெண்ணென்னும் பேதமின்றென்பர். உடலால் அவ்விருதிறனாகப் பகுத்துணரக்கிடக்கின்றது என்பது ஆராய்ச்சியாளர் அறுதியிடும் முடிவு. உயிர்களாகிய பசுக்களைத்

தலைவியாகவும், உயிர்த்தலைவனாகிய ஆண்டவனை நாயகனாக வும் கொண்டுரைப்பதென்பது உள்ளுறையாகும். ஆண்டவனுக்குப்பசுபதி யெனும் பெயரும் இதனை வலியுறுத்தாநிற்கும். இவ்விலக்கணமுற்றவமைந்த பெற்றிமைத்தாய இத்திருக்கடவூருலா வென்பது

> "பூமன் சிரங்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை
> மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மா வழுவூர்
> காமன் குறுக்கை யமன்கட வூர்இந்தக் காசினியில்
> தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே"

எனக்கூறப்படும் அட்டவீரட்டங்களுளொன்றாகிய திருக்கடவூர் வீரட்டானப் பதியில் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ அமிர்தகடேசுரப் பெருமான் பொருளாக இற்றைக்குச் சற்றேறக்குறைய **96** ஆண்டுகட்கு முன்னர், இவ்வூர், திரு. சுப்பிரமணியக் கவிராயர் அவர்களால் பாடப்பட்டதாகும். இந்நூலிலுள்ள கண்ணிகள் **458** ஆகும். முதலில் காப்பு வெண்பாவும் இறுதியில் நூற் சிறப்பு வெண்பாவும் கூறப்பட்டுள்ளது.

இவர் குலவிச்சை கல்லாமற் பாகம்பட்டவர்போலுமெனத் தெரிகின்றது. இவர் இளவலும் எச்சமும் கவிராயர்களாகக் காணப்பட்டுள்ளார்கள். ஆகலின்; அவர்களியற்றியனவாயுள்ள சில பாடல்கள் இதன் மூலப்பதிப்பில் பதிக்கப்பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் பெருமானாகிய ஓதுவார் மூர்த்திகள் தலவிசேடத்தினை முன்னர் விதந்துகூறிப் பின்னர்க்குழாங்கூறிப் பேதை முதலிய பருவமாதர்களைப் பின்னர்க்கூறுகின்றனர்.

இந்நூற்கண், சிவபரத்துவத்தினை வேத சாத்திர புராண முதலிய வரலாறு கொடுநிறுவுவதும் சிலேடையாகவுள்ள வடிகளில் செம்பொருள் கொள்ள வைப்பதும், அடியாரிடத்துள்ள பேரன்பினைப் பெறச் சீருறச்சிறப்பிப்பதும், பருவமாதர் இயல்பிற்கேற்ப, வருணிப்பதும், படித்தின்புறற்பாலனவாம்.

இந்நூலின் மூலப்பிரதியின் வழுக்களை யொருவாறு களைந்து இன்றியமையா இடங்கட்கு அரும்பதவுரை எழுதிச் சேர்க்

கப்பட்டுள்ளது. இதற்கோருரை விரிவாக வரையப்படின் நன்ருகும். அவ்விரிவுரையினுற்ருன் இந்நூல் நன்கு விளங்க அறிதற்கேதுவாகும்.

ஒன்றுக்கும்பற்ரு அடியேனை யோருபோருட்டாத் திருவுளம்பற்றி, இவ்வரும்பதவுரை முதலியன வரையுமாருணையிட்டருளியத் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து **24**வது குருமூர்த்தமாகவெழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பண்டார சந்நிதிகளின்திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

இங்ஙனம்

திருவையாறு,
**3—12—41.**

வித்துவான், **இராம. கோவிந்தசாமி பிள்ளை,**
*தமிழ் விரிவுரையாளர்,*
*அரசர் கல்லூரி.*

# FOREWORD

**Ula** is one of the ninety-six "**Prabandhams**" in Tamil, which along with **Kalambagam, anthathi, Pillai Tamil** and **Kovai** is included in the syllabus for the beginner in the study of Tamil literature. This kind of poetical composition is classified under the broad divisions of **Thodar-Nilai-Cheyyul** with a continuity of action running through the whole work, and of **Virundu** a piece with a new theme. The metre of the poem is **Nerisai-kali Venba.** The subject matter of an **Ula** is as follows: A youthful hero of noble birth full of the glory arising from meritorious and mighty deeds, goes through the city on a procession with all the paraphernalia pertaining to his position and greatness. Ladies of all ages throng at the sides of the streets to see the procession The women between the years of five and forty-two are divided into seven kinds according to age ; and one from each stage of life is represented as hurrying to look at the beloved hero. Her mental experience at the sight of him is described. The work as a whole is a study of the growth of woman's personal graces and psychic faculties. The evolution of the woman's attitude towards the object of her love, her emotional and social life, her ideals, her associations, her occupations, her recreations are all brought forth with vividness and fidelity to nature. The main topic of the poem is of course, the hero, his greatness

and his valour. If the **Ula** is in honour of God, it treats of His majesty and His manner of salvation. Some of the masterpieces of this kind are the canonical **Ula** of Seramanperumal Nayanar, a divine and unique poem, the **Ula** of Irattayar, the twin poets, an inspired poem, and the historical **Ulas** of Koothan exhibiting wonderful poetic skill. Minakshisundaram Pillai's **Thiruvidaimaruthur ula** is the elaborate and finished jewel of a great and dexterous literary workman. Some others are chaste, simple and brief. **Thirukkadavur ula** belongs to this last kind.

The author of this book, Subramanya Kavirayar was a native of Thirukkadavur. His other literary offsprings are **Thirumayilaikovai**, **Thirumayilai anthathi** both referring to Mylapore, **Thirukkadavur-puranam** and **Thirunallatruppura nam.** He belongs to the **othuvar** sect of vellalas. His family is a well-known and respectable one, whose members are the hereditary chanters of the Tamil Vedas in the local temple of immortal fame. He had two sons; one of them Somasundara Swamigal took up orders and was ordained a Thambiran, and the other Amirthalinga Othuvar was ordained to tend the sacred fire at home. The latter left two sons; Swaminatha Othuvar, the elder, combined in him the work of a guru in the Board school of the village with his hereditary work in the temple, and Kumaraswami Othuvar the second, has left behind him Arumuga Othuvar,

who follows on the wake of his uncle as a teacher and chanter.

The **Ula** was written about 80 years ago. The author, besides being a man of letters, was an attractive and humorous speaker. His poems bear the marks of a careful writer with a delicate ear. Their rhythm is melodious and their diction dignified and pure. The poet not only composed his works along the lines of the old classics and grammar, but besprinkled them with the doctrines of his sect. Bhakthi to guru, God and saints, and the characteristics of Pati, pasu, and pasam are treated in a judiciously brief but clear way.

Some days ago, M. R. Ry. Swaminatha Othuvar Avl., came to me for bringing the Ula out in the vehicle of print. When I saw that he was taking efforts, too strenuous for his age of 63, I could not but undertake to help him. By complying with his word, I had the fortune to place the book in the hands of students of Tamil and be nearer to my God's grace. My sincere thanks are due to M. R. Ry. C. V. Jambulingam Pillai Avl., of Mylapore who kindly looked after the correction of proofs and printing.

*"மாரிமாட்டென் ணாற்றுங் கொல்லோ வுலகு."*

Shiyali.<br>
20—2—17. } **P. A. Muthuthandavaraya Pillai.**

உ

கள்ளவாரணை துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கடவூருலா.

## சிறப்புப்பாயிரம்.

தரங்கம்பாடி

**மகா-ள-ள-ஸ்ரீ. ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்கள்**

இயற்றியது.

உலாவுறுங் கெண்டை யொளிதிகழ் மரைக்க
  ணுவப்புற வமர்தர மடவார்
குலாவுறும் வதன நேருறக் குடையுங்
  கூந்தலார் மணமருக் கடவூர்
புலாவுறு மென்பு கோத்தணி முக்கட்
  புராரிமால் கொளவுலாப் பனுவ
னிலாவுறு மதிய மென்னவிங் கியற்றி
  நெடும்புகழ் நிலவினன் யாவன். 1

வால்புகழ் தழீஇ யப்பதி யுதித்த
  வாலிய சுத்தசை வத்தன்
பால்புரை நீறுங் கண்டியுந் தரித்துப்
  பரம்பரற் றொழுதெழுங் குணத்தன்
மால் கெழு மயக்க மொருவிய சிந்தை
  மன்னவர் பலர்வியப் புறுவான்
சால்பினன் சுப்ர மணியனெ னுமத்
  தடம்புயக் கவிவலான் மாதோ. 2

அன்னநல் லுலாவை யச்சரங்கேற்றி
  யனைவரும் படிப்பதற் கிசையப்
பன்னுறுங் கீர்த்தி பெற்றவ னன்னோன்
  பாலகன் சோமசுந்தரற்குக்
குன்றெனப் பின்னர்த் தோன்றிய அமுர்த
  லிங்கவேள் குலவிய மதலை
மன்றகம் பரவுஞ் சுவாமிநா தேந்த்ரன்
  மறைதனை யோதுவான் றுனே. 3

## வெண்பா.

ஆதியுலாப் பெற்ற வமலன் றிருக்கடவூர்
நாதனுலாத் தானிங்கு நல்கினு—ேைதுபுகழ்ச்
செல்வ வனத்தான் றிருச்சுப் பிரமணிய
வில்வ வனத்தான் வியந்து.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் திருநள்ளாறு
**மடபதியும் இந்நூலாசிரியர் தம்பியுமாகிய திருப்பனந்தாள்**

### ஸ்ரீமத்-சிதம்பர சுவாமிகள் இயற்றியது.

முருகன்றுதி.

அமுதத்தினை விழைவுற்றொரு பகலிற்சுர ரசுரப்படை
யணையுற்றதி யில்மத்தெனு மலைமீதே
யரவக்கயி றெனவைத்ததி லிசையிற்கடை பொழுதிற்கடை
யனவொற்றெழு காளத்துயிர் நலியாதே
வமரர்க்கருள் விமலர்க்கொரு மனுவைச்சொலி யதினுட்பொரு
ளவர்பெற்றிட வருளிச்செய்த குருநாதா
வடியர்க்கருள் புரியப்பனி நிழலுற்றிரு சடையர்க்குமை
யவளுக்குள மகிழச்சிறு மகவாகி
அசுரர்க்கிளை மடியக்கயி லயிலொட் டிமயவர்க்கருள்
செய்துத்தம குணதீரா
அறிவிற்கறி வெனநிற்பினு மறிதற்கரிய தோர்மெய்ப்பொரு
ளகுதிப்படி யுநவத்தொடு மயின்மீதே
கமலத்திரு வதனச்சிறு பவளக்கனி யிதழ்பெற்றொளிர்
கனிமெச்சிட வருமற்புத வடிவோனே
கவலைப்படு மனம்விட்டொரு கணநிற்பத நினைவைக்கொடு
கவிசெப்பிட வரமெற்கருள் முருகோனே. 1

கனககிரியோதுலங்கு மமுதகுடமோ சிறந்த
கமலமுகையோ சிவந்த யிளநீரோ
கருதரியயோகி நெஞ்ச மனன்மெழுகதாக வெந்து
கரையவொரு வோபொதிந்த சிமிழோமால்
மனதுடைய பேர்கள்வந்து பரவிநிதமே வணங்கு
மதன கொலுபீடபிம்ப வரையோவென்
மகுடமுடியோசுருங்கு விடையொடியவே வளர்ந்த
மதகரிகளோவிரண்டு முலைதானே
வினவுரிசை மாதர்கொங்கை யினையதெனவே யணைந்து
மதில்வருவதான துன்ப மறியாதே
வினிதுங்கரிகனிந்து பரவுபிளவூடமுந்தி
மடியுமது போல்விழுந்து மடியாதே
யுனதடியர் பால்விளங்கு முபயசரணார விந்த
மடியன் மனதாரவென்று தருவாயோ

வொளிரு மணிமாடவண்ட முகடளவியே நிறைந்த
பனசையினில் வாழ்வுகந்த முருகோனே. 2

சித்தத்திற்குந் துக்கத்தைச் செய்தத்திக்கிச் சைப்பட்டெட்டுத்
திக்குட் பற்குப்பற்கஞ்சி யொருகோடி
துத்தியத்தைத்திக்கச் செப்பிதுத்துக்கெட்டுசுத்தச்சித்தத்தைச்
சிற்றுப்பட்டென்று வசை பேசி
கத்திக்கத்திச் செத்துச்செத்துக் கஷ்டப்பட்டு பத்திப்பைக்குள்
கட்டுட்டைந்து திக்கத்தொன்று மறியாதே
சுத்தப் பித்தர் கொத்தித்திப் பித்திக்குள் சொக்கத்தைப்
பக்கத்திற்றந்த முருகோனே. 3

**திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம், திருவாரூர்**
**இராஜன் கட்டளை மடபதியும், இந்நூலாசிரியர்**
**தநயருமாகிய திருக்கடவூர்**

## ஸ்ரீமத்-சோமசுந்தர சுவாமிகள் இயற்றியது.

ஆய்க்கப்பற்குப் புற்கைத் தண்ணீர் கொடார் பணமத்தனையு
பாய்க்கப்பற்குப் புற்றதுபோற் கிடந்த பகிரிணமாங்
காய்க்கப்புக்குப் புக்கிடையார்தமை துதிக்காதருள்வாய்
வாய்க்கப்புக்குட் புறங்காட்டா பனசைவரும் வள்ளலே.

**இந்நூலாசிரியர் தநயர், திருக்கைலாய பரம்பரைத்**
**தருமபுரவாதீனம் திருக்கடவூர் தேவஸ்தானம்**

## ஸ்ரீமத்-அமுர்தலிங்க ஓதுவாமூர்த்தியவர்கள் இயற்றியது.

வம்பன்வலிடும்பன் வெகு வஞ்சநெஞ்சன் கொடிய
மாபாவி பொல்லாதவன்
வறிஞனறி வில்லாத முழுமூட னுனதுதிரு வடிமலரை
நினையாதவன்
நம்பு விசுவாச மில்லாதவன் செய்திடும் நன்றிகொன்
றவனுலுத்தன்
ஞாலத்தினு மண்டகோ ளத்தினுந்தேடின் நானொருவ
னல்லாமலே
வும்பர் நரராதியா யெண்ணிறந்திடு முயிர்களிலோ
ருயிர்கள் கண்டதுண்டோ
வோகோகிடைப்ப தரிதான பொருள்காணொருவர்கை
விடுவார்களோ
செம்பவள மேனியான் மைந்தவெனை விடிலுனைச் சிறு
பிள்ளை யென்று சொல்வார்
தென்கடவை யம்பதி தனைசூழ்ந்திடவளர்ந் தருள்செய்
சிங்கார வடிவேலவா.

உ

திருச்சிற்றம்பலம்

# இந்நூலின் பொருட் சுருக்கம்

திருக்கடவூர் வீரட்டானத்து எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அமிர்தகடேசப் பெருமான், திருமால் முதலிய தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்து, அக்கடலினின்றுந் தோன்றிய தேவாமிருதத்தினை, ஒரு கடத்திலடைத்துக்கொண்டுவந்து, பண்டு வில்வவனமெனப் பெயரிய இவ்வூரின், வில்வக்காட்டின் மத்தியில், அக்கடத்தினைச் செப்பமாவைத்து நீராட்டிப் போந்து எடுக்க, அக்கடத்தின்பாலுள்ள அமிருதமானது அருளுருவாகிய சிவலிங்கவடிவாய், மூவுலகும் ஊடுருவிநிற்ப அத்தேவர்கள் வெருவி போற்றுதல் புரிய, அருள்புரிந்த நிலைமையால் அமிர்தகடோற்பவர் (அமிர்தகடேசர்) எனத் திருப்பெயர் பெற்றமையும், அப்பெருமானை, வாலகிலியர், வியாசர், கபிலர், முதலிய சீமுறு துறவறப்பெரியர் பூசித்துக் கருவகற்றி யுய்ந்தமையும், விசாலை நகரில் வாழ்ந்த இரத்தினாகரனென்னும் வணிகன் உலகவின்பத்தினை வெறுத்து இப்பெரும்பதியினைப்புக்கு, மூன்றே நாளில் உயிர் துறக்கப்பெற்றுத் தன்மாட்டு வந்திறந்த புலியுடன் சிவசாரூபம் பெற்றமையும், மார்க்கண்டேயமுனிவர் பிச்சியினை வைத்து மலர்பறித்துப் பூசித்து என்றும் இறவாவரம் பெற்றமையும், இவர் பொருட்டு, வந்த இயமனை யுதைத்துக் கொன்றமையும், பூமிதேவி உயிர்ப்பொறை யாற்றாது தேவருடன் வந்து வேண்ட சிவசின்னம் பூண்ட சிவனடியார்களைத் தீண்டாதே யென ஆணையிட்டருளி யவ்வியமனை யெழுப்பியருளினமையும், இதனால் அமிருதகடேசருக்குக் காலாரி (காலசங்காரமூர்த்தி) எனத் திருப்பெயர் போந்தமையும், கோமதி யாற்றங்கரையில், விசுவசித்து வேள்வி புரிந்த பெருமன்னன் இளவல் பிரமதி யென்பவன், விசுவசு முனிவரான் பெருஞ்சாபமேற்று நோயுற்றுச் சிவதலயாத்திரை புரிந்து இவ்வூரையணுகி வழிபாடாற்றிக் கடவூரானருளான்

அந்நோயுஞ் சாபமும் ஒருவப்பெற்றுத் திருக்கோயில் பணியும், திருவிழாச்சிறப்பும் செய்வித்தமையும், இவ்வூர்ப்பரமனை தேவர் முனிவரர் முதலியோர் சேவித்துத் தோத்திரம் புரியு நாட்களிலொருநாள், எல்லாம் வல்ல இவ்விறைவன், நற்பணியாதிய பூண்டு, ஏற்றுயர்கொடி யெங்குமாட, பல்வகை வாச்சியங்கள் ஒலிப்ப, சிவகுமாரர்கள் மூடிகத்திலும் கலாப மயிலிலும் எழுந்தருள, திருமால் பிரமன் இந்திரன் சந்திரன் முப்பத்து முக்கோடி தேவர் பதினெண்கணங்கள், அரிகர குமரனுர், முதலினோர் அர அர வென்று ஆர்ப்ப, தந்தை தாளொடும் பிறவித்தாளெறிந்து நிருத்தர் இருதாளைச் சேர்ந்த சண்டேசுரர், சமயகுரவர் பெருந்தகை சிறுத்தொண்டர் முதலிய ஏனைய நாயன்மார்களும் எழுந்தருள, வைதீக சிவமறையவர், ஆதிசைவர், பிரமதிமன்னன், செல்வமுறுந்தலத்தினர் **ஞானத்தமிழ் பாடும் நாவலர்** முதலினோர் புடைசூழ்ந்து நெருங்கிவர, காமனைப் பொடிசெய்த கண்ணுதற்கடவுள் திருத்தேரில் உலாப்போந்தமையும், மகளிர் குழாம் வந்து சேவித்தமையும், அம்மகளிர் ஆண்டவனுடைய அவயவத்தழகிலீடுபட்டமையும் பிறவும் சிலேடை நயமும் உண்மையலங்காரச் சிறப்பும் ஆதியன, 1-முதல் 195-வது வரையிலுமுள்ள கண்ணிகளிற் காணப்படுஞ் செய்திகளாகும்.

## பேதை

பேதைப் பருவத்தாளொருத்தியின் நிலைமையான செயல் முதலியன வற்றினைப் பருவத்திற்கேற்பச் சிறப்பித்தமையும், பருவவிளையாட்டயரும் அப்பேதையானவள், ஆண்டவன் திருமறுகில் திருத்தேர் உலாப்போதலைக் காணவந்தமையும், வந்த வந்நங்கை இறைவன் றிருக்கரத்திலுள்ள மானைப்பிடித்து விளையாடக் கொடுவெனத் தாயரைக் கேட்ப, அத்தாயர் அம்மான் நம்மா லெய்தற்கரிய தென்றியம்பி, அம்மகடன்னேடு தம்மாளிகை யெய்தினர். ஆண்டவனும் அம்மறுகினை விட்டு மற்றைமறுகினைக் குறுகினமையும் 196 முதல் 241 வரையிலுமுள்ள கண்ணிகளில் குறிக்கப்படுவதாகும்.

## பெதும்பை

பெதும்பையாளொருத்தி கையிற் கழங்கேந்தி மானேந் தொருவன் மறைக்கண்டம் **ஒன்றும்**, திருமால் புவி யிடந்துங்காணுத பொற்ரு **ளிரண்டும்**, கவினியொளிரும் விழி கள் ஒரு **மூன்றும்**, திவ்விய நளின மனைய கரம் **நான்கும்**, வளர்தவளப் பெற்றமுவந்த பெருமான் திரிபதகையுற்ற சடிலமுடி ஓர் **ஐந்தும்**, எற்றுதிரை மோதுங்கடலால முன்னு கர்வோன் சைவத்தோதுஞ் சமயவிதம் ஓர் **ஆறும்**, கீதமொழி தும்புரு நாரதருஞ் சொற்சுவையாகப்பாட, எம்பெருமான் கேட்கும் இசை **யேழும்**, கொம்பில் மருவு குயில்போல மதுரப்பசுந்தேன் பருகும் அரிபோலப் பாடி அருகுதொறும் ஏமந்தைவீச இசைந்தமணி அவிரக் காமர்கழங்கு ஆடுங் காலத்தில்,பலதிறவருட்டிருவிளையாடல்களையுடைய பரமனூர் மங்குற்குலந்தவழும் மாடமணி மறுகிற் றுங்கத்திருத்தேர் மேல் தோன்றினுக, அப்பெதும்பையானவள், அப்பரமனைப் பார்த்துப்போய்க் கும்பிட்டு, தலையால் வணங்கி, உலையின் மெழுகாயுருகி, கடன்முகட்டில் எழும் உதய சூரியன்போன்ற திருவுருவில் இடப்பக்கத்தின்கண் மகிழ்ந்துறையும் மலைமகளை யாரென்று வினவினுள்.

உடனே தாய்மார்கள், பிருங்கி முனிவன் பொருட்டு, அபி ராமியம்மையார் அருந்தவமாற்றி, இவராகத்தில் ஓர் பாதியை யடைந்தாள் எனவுரைப்ப, அதனைக்கேட்ட அந்நங்கையார் அவ்விறைவன் அழகினை முற்ற நோக்கி நிற்ப, வேருெரு வீதி யினை அடைந்தான். அந்நிலையெய்திய அவளை, தாயர் தாமரை கரத்தாற்ருங்கி அணைப்ப, அந்நோய் தணந்திட்டாள் என 242 முதல் 287 வரையிலுமுள்ள கண்ணிகளிற் கூறப்படுஞ் செய்தியாகும்.

## மங்கை

மங்கைப் பருவத்தாளொரு நங்கையானவள் (இவளைப் பற்றிய வருணனைகள் மிகப் படித்தின்புறற்பாலனவாம்) தன்னையலங்கரித்துக்கொண்டு அருந்தவர்க்கு மாலாக்கி அவ் வேள் சலாமிட்டிரங்க வளர்கொங்கையளாய் மாணிக்கம்

பதித்த ஆணிக்கனகமேடையின்கண், சேடியர் தம்மோடு செறிந்து, பணியுலகின் மன்னன் சிரத்தின் மணியும், அரிகரத்தின் மின்னும் வளையீன்ற வெண்மணியும், துன்னும் திகையரவச் செம்மணியும், திக்கெட்டு மேவும் புகர்முகத்தின் தந்தத்தின் மேவும் தவளமுத்தும், விண்டு நிலவி விரவிக் கலந்தொளிவீச தாமரை மலரனைய தன்கையிற் பொற்பந்தினைக் கொண்டு கைகள் சிவப்பத் திருவன்னாள் பந்தாடலைப்பார்த்த பாவையராகிய பூவையர்கள் பார்த்து வியந்து, இப்பூமியின் கண் உன்னைப் போற்றற்கு யாருளர்? ஒருவருமிலர். அறிவாரியாரும் இலராகலின், நினக்கிணை நீயேயாகுவை! கனமாகிய கூந்தலையுடைய மங்காய் என விளித்து, உன்னருமை, அந்திநிறத்து அண்ணலன்றி இவ்வறிவால் யாமறியவல்லேமல்லேம் என்று, பாங்கியர் பகரக்கேட்டு மனமகிழ்ந்திருக்கும்போழ்தில் துன்னும் பிறையமுதமாகிய நுண்ணிய திவலையினைத் துளிப்ப அதனை, நஞ்சையுடைய நாகமானது நாவினால் நக்கிப்பருகிக் களிக்கும் சிறப்பினையுடைய கடவூர்ப்பிரான் தோரணவீதிக் கட்டோன்றினான். மங்கையானவள் கையிற் பந்திருப்பக் கூந்தல் குலைய, வியர்வை நுதலிற்றோன்ற, இடை துவள, சிலம்புகள் சிலம்ப மடவார் புடைசூழ, ஒருமயில்போல் வந்து சடையர் எழின் முழுதுநோக்கி முழவுத் திரள்புயமும், தன்முலையும் பார்த்தாள். தியங்கி மனமுருகி நெட்டுயிர்ப்புற்றாள். அருகே நின்ற அன்னையரும், அருமைச் சேடியரும் வருந்தற்கவெனக்கூறி மார்போடணைப்ப, அவருட்சிலர் இறைவனை நோக்கிச் சிறப்பித்து விளிப்பாராய், நீவிர் மங்கையர்பொருட்டுப்பலவிதவல்லலுற்றுழன்றீர்! அங்ஙனமிருப்ப மழுவாளரே! இவள்மேல் பழியுண்டோ? வண்தார் இவளுக்குதவின் குற்றமோ எனக் கேட்பக் கொடுப்பார்போல் மற்றை வீதியில் சென்றார் சிவபிரானார். மன்மதன்,பாணங்களை மடமங்கையுடலெங்குமுய்த்தான் என 288 முதல் 348 வரையிலுமுள்ள கண்ணிகளிற் கூறப்பட்டுள்ளது.

## மடந்தை

இப்பருவப்பெண்ணானவள், எழில் மீக்கூர்ந்து அரற்பொருதோனாகிய ஐங்கணையாளன், இவளது பாதமிரண்டினையும் பற்றி என்பால் இரதியுருவின் மேம்பட்ட திருவுரு

வுடையையென விரகங்கொளவுதிக்கும் மெல்லியலாய் மையல் பெருக்கு மருந்து, இரசகுளிகையாய இவற்றினையொப்பவளா ய்ப் பல்வகை வனப்பும் பாரிப்பவளாய் உளள். ஆகலின், இந் நங்கையானவள், தம்மோடொத்த சாயலினையுடைய தைய னல்லாரொடுந் தடாகத்தில் நீராடச் சார்ந்து, நீராடித் தடங்கரையின்மீதேறி, தடாகத்தினை நன்கு நோக்கினாள். அக்குளத்தின் தண்டாமரையின் பொகுட்டிற் றேனையுண்டு வண்டுவைகுதலையும், தூய களிப்புறு ஞிமிறு சூழ்வதையும் குவளைமலர், செந்தாமரை மலர், செவ்வல்லிப்பூ அதினின்று ண்டாம் பெருமணம் ஆகியவற்றினையும் பார்த்தாள்.

அவற்றுட் கருநீலம் இறைவன் திருமிடற்றினையும், செந் தாமரை நெற்றியையும், செங்கழுநீர் திருக்கரத்துத் தீயினை யும், இந்நீர், சடைக்கங்கை நீரையும், பவளக்காடு சடைக் காட்டினையும் ஒக்குமெனவெண்ணியிருக்கும் எல்லைக்கண், கோடிசூரியப்பிரகாசம்போல ஒளிவீசும் பெருந்தேர்மிசைக் கடவூர்ப்பெருமான் கவினத் தோன்றினான். இம்மடந்தையு மங்குற்றாள். ஆண்டவனையணுகிக் கும்பிட்டாள்.

தேவ தேவரே ! அடியேன்மீது சிறிது இரங்கலாகாதா ? மலைமகட்கியானெவ்வேனோ? கங்கையாகிய அந்நங்கையினைப் புரையேனோ ? தாருகவனப்பன்னியர்தம் கரங்களைப்பற்ற வில்லையா ? பாதகமும் பாராமல் அவர்தமை விழையவில் லையா ? மன்மதன் துன்பத்தினை மாற்றியருளவில்லை ஆகலின் ஈது உமக்குத்தகாது என்று வெதுப்புற்றிரங்கி நெட்டுயிர்ப் புடன் நின்றாள். வேறொன்றும் நினைந்திலள். அன்று காப்பவ னைப்போல் அம்மையப்பன் புன்னகை புரிந்து அம்மறுகுவிட்டு அயன் மறுகணைந்திட்டான். காமனும் கடுங்கணையினைச் சொரிந்துடலைத்துளைத்திட்டான். பாங்கியர், தாயர் முதலாயி னோர், தம்மாளிகையிலுய்த்து மலர்ப்படுக்கையிற் சேர்த்து சைத்தியோபசாரஞ் செய்ய வத்துயர் நீங்குவாளாயினள் என. 349 முதல் 404 வரையிலுமுள்ள கண்ணிகளிற் காணப்பட்ட செய்திகளாகும்.

## அரிவை

இப்பருவமுறும் பெண்ணொருத்தி, காமன் கருவூலமாய், துன்னரிய நற்றவர்தாம் பேரின்பம் நாடாமற் சிற்றின்ப

முற்றுத்திளைக்கு மொருகோதையாய் இன்னோரன்ன பலவகை வனப்புமீக்கூர்ந்தவளாய் உள்ளவள், கூந்தன்மகளிர் குலாவி வர உவமையிலளாய் மாணிக்கம் பதித்த மணி மேடையி லிவர்ந்து இலக்குமியொத்த மின்னனையார்களாகிய பாடினி மார்கள் வீணையேந்தி வந்து பண்ணொடு பாட்டினைப் பாட அதனைக்கேட்டு மகிழ்ந்து அன்னவர்க்களவறிந்து ஆடையும், பொன்னும், அருங்கலமும் அன்போடளித்து, அம்மேடையில் அமர்ந்த அமயத்தின்கண் ஆலமருந்திய அண்ணலார் அவ்வீதி யின் மாட்டணைதலும், இவ்வரிவையானவள் இறைவனைக் குறுகி திங்கட்சடையும், மான்கரமும், அரிவைபாகமும், தேவர் போற்றுறுந் திருவடியும் கண்களிப்பக்கண்டு தன்னையுநோக்கி இறைவன் அடிகளிற்பணிந்தாள். பக்கலுடைப்பராசத்தி யன்றி ஏனைமகளிரை எண்ணிப்பார்க்கமாட்டீரோ? தவயோ கம் அவமாமென்று நாணுற்றனிரோ எனப்பலவாறு கூறிக் கொன்றைத்தொடையினைக் கொடுத்துதவமாட்டீரோவென வெம்பியயர்ந்தாள். இத்துயர்கண்ட எழிலுறு மகளிர்கள் இவளையேந்தி இல்லத்திற் கேகினர். மதனனும் அம்பினை யேவினன். பனிநீர் சொரிந்து தென்றல்வரச் சிவிறியால் வீசத்தெளிந்தாள். இறைவனும் ஏனை வீதியில் ஏகினன் என 405-முதல் 437 வரையிலுமுள்ள கண்ணிகளிற் கண்ணிய செய்தியாகும்.

## தெரிவை

இப்பருவத்துறு ஒப்பில் நங்கையின் வனப்புப் பலபடி யாகப் பாராட்டப் பெற்றுள்ளது. செப்பரும் வனப்புடை இப்பெண்ணணவள் மதியணிவேணிப் பெருமான் கைலைமலை யெனக் கூறுந்தன்மைத்தாய் மேகந்தவழும் மேனிலைமாடத் தின்கண், மீனத்திடையுறும் வானத்தவிர்மதியொப்ப, மகளிர் சூழ்ந்து அடிபரவச்செங்கமல மலர்புரையும் மெல்லடிசெவப்ப இடைநோவ, பெட்டையனமென மெல்ல மெல்ல நடந்து வந்து ஆண்டுப்பொருந்திய அழகிய ஆசனத்தினையடைந்து மகளிர் வினவ, மன்மதனூலாகிய கொக்கோகத்தின் கூறுபாட்டினைக் கூறும் அமயத்தில் முச்சகங்காக்கு முதல்வனார் திருத்தேர் மீது மறுகிடைக்குறுகலும், நிறைகோலையொத்தொழுகும் நெஞ்சின ளாகிய அத்தெரிவையும் ஏனை மாதர்களும் வந்துகண்டனர்,

கண்டு தெரிசித்தார்கள் விரகவேதனை யுற்ருரிலர் (உள்ளடக்கிக்கொண்டிருந்தனர்போலும்) என, 437-முதல் 450 வரையிலுமுள்ள கண்ணிகளிற் கூறப்பட்ட செய்தியாகும்.

## பேரிளம்பெண்

அம்மகளிருள் பருவமுற்ற பேரிளம் பெண்ணொருத்தியானவள் ஆண்டவனுர் ஈண்டிய எழிலில் ஈடுபட்டவளாய் போடப்பட்டவளையல்கள் கழலப்பெற்றுப் பாரில் பதைபதைத்து விழுந்தாள். நேரிற்கண்ட, செவிலியானவள் அப்பேரிளம் பெண்ணினைச் செங்கையிஞலணைத்து, பவளக்கால் கோத்த படுக்கையின்கண் படுக்கச்செய்து, வெண்சாமரை வீசச் சரீரம் வெதுப்புற்று, தென்றற்காற்றிஞல் ஒருவாறு திளைத்து, மார்க்கண்டர் பொருட்டு மனமிரங்கிவந்த சீர்க்கொண்டல் சீரடியைச் சிந்தித்து சிந்தையின்கண் நிறைந்த களிப்புற்ருள். உலகின்கண் உறுதியான அறமும்,செல்வமும், கீர்த்தியும், வளமும் நிலைநிற்பச் சிவபெருமான் திருத்தேர் நிலை நின்றது. கொவ்வைக்கனியொத்த அதரத்தினையும் கற்கண்டு போன்ற இனிய மொழியினையும் உடைய காரிகையார்க்கு இன்னருளையிசைத்து முனியார் கடையூரான் தேவர் முதலிஞேர் முன்னுங் கடவூரான் எங்கட்குரிமையானவூரான் ஆகிய அபிராமியம்மையோடமரும் அமிருதகடேசுவரப்பெருமான் உலாவந்தருளிஞன் என 451 முதல் 458 வரையிலுமுள்ள கண்ணிகளிற் காணப்படுவதாகும். ஆங்காங்குள்ள நயமான பகுதிகளை யன்பர் படித்தின்புறுவார்களாக.

குருபாதம் முன்னிற்க.

உ

திருச்சிற்றம்பலம்.

கள்ளவாரணன் கழலிணைகாக்க.

# திருக்கடவூருலா.

காப்பு.

(நேரிசை வெண்பா)

மருவுலா வுங்கடவூர் வாழும் பெருமான்
றிருவுலா விண்ணப்பஞ் செய்யக்—கிரிமரபில்
இக்குஞ் சரக்கன்றே யென்னு மொழியீன்ற
கைக்குஞ் சரக்கன்றே காப்பு.

(இ. ள்) மரு உலாவும் கடவூர் வாழும் பெருமான்-நறுமணம் கமழும் பொழில் சூழ்ந்த அட்டவீரட்டதலங்களுள் ஒன்றாகிய கடவூர் என்னும் பெரும்பதியில், கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அமிர்தகடேசப்பெருமான் திருவடிகட்கு, திருவுலா விண்ணப்பம் செய்ய-வித்தார கவியாற்பாடப்படும் தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுளொன்றாகிய திருவுலா வெனப்பெயரிய சிறுகாப்பியத்தினால் விண்ணப்பஞ் செய்வதற்காக, கிரிமரபில்-பர்வதராசவமிசத்தில் திரு அவதாரஞ் செய்தருளிய, இக்கும்-கரும்பின் சாறும், சரக்கு அன்று ஏ எனும் மொழி-இனிப்பாகிய ஒரு பொருள் அன்றாம் என்று சொல்லும் தரத்ததாகிய இனிய மொழிகளையுடைய உமையம்மையார், ஈன்ற-தோற்றுவித்தருளிய (பெற்றருளிய) கை குஞ்சரம் கன்று ஏ- துதிக்கையினையுடைய யானைமுகக்கடவுளாகிய கள்ளவாரண விநாயகப்பெருமானே, காப்பு-இந்நூல் இடையூறின்றி முடிய காவல் செய்தருளுவாராக என்பதாம்.

உ

கணபதி துணை.

# திருக்கடவூருலா.

## தல விசேடம்.

1 நீர்பூத்த பூவில் நிலாவுந் திருமுயங்கு
மேர்பூத்த பூணாகத் தெங்கோனுந்-தார்பூத்த
வண்ணக் கிரீட மகபதியும் விண்ணவரும்
எண்ணற்ற தானவரு மெய்தியே-மண்ணிற்
சிறந்தபா லாழி சிதறக் கடைந்து
பிறந்தவமு தங்கடத்திற் பெய்து-மறந்தவிர
நல்குமிட மீதென்று நாடித் திரள்வில்வம்
புல்லும் வனத்திற் புடைபோந்து-மல்கும்
5 அமுத கலசத்தை யாங்கிருத்திக் கீழ்பாற்
குமுதத் தடமொன்று கோலி-விமலமாம்

---

1 நீர்பூத்த பூவில் நிலாவும்திரு-நீரினிடத்துண்டாகிய செந்தாமரை மலரில் வாழும் இலக்குமிதேவி. முயங்கும்-கூடும். ஏர்-அழகு, ஆகம்-மார்பு. எங்கோன்-திருமால், (முதலடியவர் ஆகலின்)

2 வண்ணம் கிரீடம் மகபதி பலவகையிரத்தினங்களும் பதிக்கப்பட்டதால், பல நிறமுடைய முடியணிந்த யாகபதியாகிய தேவேந்திரன், தானவர்-அசுரர்.

3 மண்-பூவுலகு. பால்ஆழி-பாற்கடல். ஆழி-வட்டமுடையது, ஆழமுடையது எனப்பொருளாம், கடம்-குடம், பெய்து-பாற்கடல் கடைந்ததால் உண்டாகிய தேவாமிர்தினைக்குடத்திலடைத்து. மறம்-அச்சம். தவிர-நீங்க.

4 இது-ஈது என நீண்டது. நல்கும் இடம்-தரும் இடம். நாடி-ஆராய்ந்து. திரள்-கூட்டம். வில்வவனம்-ஊரின் பெயர்களிலொன்று. போந்து-வந்து.

5 மல்கும்-நிறையும். அமுதகலசம்-அமுதகடம். அங்கு-ஆங்கென நீண்டது. அவ்விடம் குமுதம்-அல்லி. தாமரையும் விரவுதல் கொள்ககோலி-எல்லைப்படுத்தி. விமலம்-தூய்மை.

அப்புனலுண் மூழ்கி யமரர் முதலெவரும்
ஒப்பி லமுதகடத் தூடணுகிச்-செப்பியிடும்

ஆங்கவரிற் கார்மா லனைவோரு முண்பதற்கு
வாங்கி யமுத மகிழ்ந்தெடுப்ப-வோங்கி

இலிங்க வுருவா யிலகி யவர்க்கு
நலங்கொ ளமுதம் நயந்து-பலன்பெறுமா

எண்கா னுகரு மியல்பு தருமிறையோன்
பண்கால வேயூதும் பவனத்தான்- மண்காலும்

அண்ணல் மனமுருகி யாயிர மாண்டளவும்
எண்ணில் விரத மினிதாற்றி-நண்ணி

யரக்கர் பெரும்போரு மாகியு மன்றே
துரக்க வரமுதவுந் தொல்லோன்-விரத்தியரில்

---

6 மூழ்கி-விதிப்படி நீராடி. அமரர்-தேவர்கள். (இறவாதவர்கள்) எவரும்-உம்மை முற்றுமை. ஒப்பு இல்-உவமையில்லாத, செப்பி-கூறி. இடும்-அளிக்கும். செப்பியிடும்-கூறும் எனலும் ஆம்

7 அங்கு அவரில்-அவ்விடத்தவர்களுள். கார்மால்-கரிய நிறமுடையவிட்டுணு. அனைவோரும்-எல்லாரும். உண்பதற்கு-அருந்துவதற்கு. அமுதத்தினை மகிழ்ந்து வாங்கி எடுப்ப எனக்கூட்டுக. ஓங்கி-உயர்ந்து.

8 இலிங்கம்-சித்திரித்தல் இலகி-விளங்கி. அவர்க்கு-அத்தேவர் முதலியவர்கட்கு. நலம்-இன்பம். நயந்து-விரும்பி. சீலம்-ஒழுக்கம். மருவி-பொருந்தி.

9 பலன்பெறும் ஆறு எண்கால்-பலனைப்பெறும் வகையாக எண்ணுமிடத்து. (அவர்கட்கு), நுகரும் இயல்பு தரும் இறையோன்-அருந்தியின்பம் அநுபவிக்கும் தன்மையினை என்றும்அருளுபவன். பண்-இராகம். வேய்-புள்ளாங்குழல். பவனத்தான்-திருமால்.

10 மண்காலும் அண்ணல்-பிரமன், ஆண்டு-வருடம் எண்ணில் விரதம்-அளவில்லாத சிவ விரதம். ஆற்றி-முடித்து. நண்ணி-நெருங்கி.

11 அரக்கர்-இராட்சதர். ஆகியும்-உண்டாகியும். துரக்கம் வரம் உதவும்-துரக்க முதலிய பதவிகளைப்பெறும் வரத்தினைக்கொடுக்கும். தொல்லோன்-பழையன் (புராணன்) விரத்தியர்-துறவிகள்.

வால கிலியர் கபிலர் மறைவகுத்த
சீல வியாசர்முதற் சீரியோர்-சால
மருவி யருள்கூர வந்தித் தருச்சிப்பக்
கருவகற்றி யாங்கவரைக் காப்போன்-பிரவஞ்ச
வாழ்க்கை யருவருத்து மாயாத பேரின்ப
வேட்கை யுவந்து மிகுந்தறிவில்-வாழ்க்கைநக
உந்தும் விசாலை யணிநகரி லோர்வணிகன்
இந்த்ரநிக ரத்நாகர னென்போன்-வந்து
தெரிசித்து மூன்று தினம்வைகி யாங்குத்
துரிசற் றுடலந் துறப்பப்-பரிவுற்றுத்
தன்னுருவ மீந்து தனதுலகி லேகுதற்கு
மின்னும் விமானம் விரைந்துதவி-யன்னோன்பால்
வேடன் பகழியால் வீழு முழுவைக்குங்
கூட விமானங் கொடுத்திட்டோன்-நீடு

---

12 வாலகிலியர்-பிரமன் மானசபுத்திரனாகிய கிருது என்பவனுக்குக் கிரியையிடம் பிறந்த அறுபதினாயிரவர். கபிலர்-ஒரு முனிவர். மறை-வேதம். கூர-மிக. வந்தித்து-வணங்கி.

13 கரு-பிறப்பு. பிரவஞ்சம் (பிரபஞ்சம்)-உலகம்.

14 அருவருத்து-வெறுத்து. மாயாதபேரின்பம்-முத்தி. வேட்கை-ஆசை. உவந்து-விரும்பி (மகிழ்ந்து) இல்வாழ்க்கை-இல்லறமாகிய வாழ்கை. நகம்-பூமி. வேட்கையுவந்து-அறிவு மிகுந்து எனக் கூட்டு.

15 உந்தும்-நடாத்தும். விசாலை-கங்கைக்கரைக்கண்ணுள்ளதோர் பட்டணம். நிகர்-ஒத்த. இரத்நாகரன்-வணிகன் பெயர். வந்து-கடவூருக்கு வந்து. ஆங்கு-அவ்விடத்தில்.

16 வைகி-கூறிய முறைப்படி வதிந்து. துரிசு-குற்றம். உடலம்-சரீரம். துறப்ப-உயிர் விட்டு நீங்க. பரிவு-அன்பு.

17 தன் உருவம்-சிவசாரூபம். தனதுலகு-சிவலோகம். ஏகுதற்கு-செல்லுதற்கு. அன்னோன்பால்-அவனிடத்தில்.

18 பகழி-அம்பு. உழுவை-புலி. கொடுத்திட்டோன்-தருவோன். நீடும்-தவமிகும்.

மிருகசிப னீன்ற மிருகண்டன் மேனு
ளொருமைந்த னின்றி யுயங்கி-யருமந்த

20 பூசனை யன்பிற் புரிய மனமகிழ்ந்து
பேசுமீ ரெட்டுப் பிராயத்தில்-மாசற்ற

போத மிகுந்த புதல்வன் றருகுவமோ
வாதனோ யார்கோடி யாயுள்பெருங்-காதலனை

யீயவோ கூறென் றிசைப்ப வதுகேட்டுத்
தூயசிவ ஞானத்தின் சூழ்ச்சிதனை-யாயவரும்

நன்மகவு தாவென்று நாடி யனையமுனி
புன்மை யகலப் புகலவே-யன்ன

வரமீந் தருளி வரத்தினு லந்த
வுரவோன் மகிழ வுதித்து-விரவிய

---

**19** மிருகண்டுயேன் மிருகசிபன் இருவரும் ஒருவர். இவன் மார்க்கண்டன்-பாட்டன். மிருகண்டன்-மார்க்கண்டன்-பிதா. மேல் நாள்-முன்னொருகாலத்தில். அருமருந்தன்ன என்பது அருமந்த வெனமரூ உவாயிற்று. உயங்கி-வருந்தி.

**20** ஈரெட்டுபிராயம்-பதினாறுவயது. மாசற்றபோதம்-சிவஞானம்.

**21** தருகுவம்-கொடுப்போம். ஓவாத-ஒழியாத. நோய்-பிணி. ஆர்-நிறைந்த. காதலன்-புதல்வன்.

**22** ஈயவோ-கொடுக்கவா. கூறு-சொல்லுவாய். இசைப்ப-கூற. சூழ்ச்சி-ஆராய்ச்சி. ஆய-ஆய்வதற்கு. வரும்-தோன்றும்.

**23** நன்மகவு-நல்லபிள்ளை. "பெறுமவற்று ளியாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட் பேறல்ல பிற" (குறள்.) நாடி-ஆராய்ந்து. அனையமுனி-மிருகண்டு. புன்மை-பிள்ளைப்பேறில்லாக் குறை.

**24** அருளி-அருளியதால். அவ்வரத்தினுல் எனக்கொள்க. அந்த உரவோன்-அத்தவவன்மையுடையன். விரவிய-உலகியல் நிலையில் கலந்துபின் உணர்ந்த.

மார்க்கண்டன் வில்வ வனமகிமை யைக்கேட்டுக்
கார்க்கண்டந் தீரக் கனிவிஞல்-யார்க்கும்

குறையகற்றக் கீழ்த்திசையிற் கூபமுண் டாக்கிச்
செறியும் நிருதி திசையில்-வெறிகமழும்

பிச்சிநறும் போதாற் பெரிதுவந்து பூசிப்ப
மெச்சிய வன்பால் மிகுந்தகற்றி-யச்சிகரம்

போன்ற மறலி புரள முனிந்தடியா
லூன்றி யருந்தவனை யுய்வித்து-மாண்டு

பிறவாது நித்தியமாம் பேறு முதவி
யிறவாத வின்பத்தை யீந்தோன்-தறுகட்

சமன்மாளப் பூமான் றளர்ந்து பொறையாற்
கமலா சனத்திறையோன் கண்ணுற்-றிமையோர்

பெருமானே யாற்றேன் பெரும்பார மென்னத்
திருமால்பா லாங்கவனுஞ் சென்று-பரிவா

---

25 வில்வனமகிமை-கடவூர்ச்சிறப்பு. கார்க்கண்டம்-அச்சமுடையதத்து (வயது எல்லை) தீர-ஒழிய. யார்க்கும்-யாவருக்கும்.

26 குறை-குறைபாடு. அகற்ற-போக்கிக்கொள்ள. கூபம்-கிணறு. நிருதி திசை-தென்மேற்கு. (கோணத்திசை). வெறிகமழும்-மணம் வீசும்.

27 பிச்சி நறும்போதால் பெரிதுவந்து பூசிப்ப - பிச்சியினது நல்ல பூவினைக்கொண்டு மிகமகிழ்ந்து பூசித்தலால். மெச்சிய-கொண்டாடிய. அன்பால்-அன்பினுல். மிகுந்து-மேற்கொண்டு. அகற்றி-காலமுடிவு கருதி வந்து பாசத்தால் பிணித்த இயமனை நீக்கி. சிகரம்-மலை.

28 மறலி-இயமன். முனிந்து-கோபித்து. அடியால்-திருவடியால். ஊன்றி-மிதித்தழுத்தி. அருந்தவன்-செயற்கருந்தவமுடைய மார்க்கண்ட முனிவன். உய்வித்து-பிழைப்பித்து.

29 நித்தியமாம்பேறு-சிரஞ்சீவி பதம். இறவாதஇன்பம்-அழியாத முத்தி. ஈந்தவன்-வீரட்டானேசுரர். தறுகண்-அஞ்சாத்தன்மை.

30 சமன்-நடுவு நிலையாளன். (இயமன்). பூமான்-பூமிதேவி. பொறை-சுமை. கமாலாசனத்திறையோன்-பிரமன்.

31 இமையோர் பெருமான்-பிரமன். பெரும்பாரம்-பெருஞ்சுமை. சென்று-போய். பரிவு-வருத்தம் (அன்புமாம்)

விதனை யுரைப்ப விரங்கி யவனுங்
கதமொழியுங் காலங் கருதித்-துதிசெய்து
பின்ன ரியம்பப் பெரிய கரும்பகட்டின்
மன்னவ னுய்ய வரமுதவி-யின்னுஞ்
சிவசின்னம் பெற்றுரைத் தீண்டாதே தீண்டி
லவசின்ன முன்போ லடையுந்-தவிரென்று
ஞால முழுதும் நடுங்க வுயிருண்ணுங்
காலனுக்கு மேனாட் கழறினோன்-சாலப்
பொலிந்த விதேகமாம் பொன்னினகர் மன்னன்
சிலம்படுத்த கோமதி தீரத்தில்-பலன்புரிய
எண்ணும் விசுவசித்தி யாக மினிதியற்றி
நண்ணு மிரவலர்க்கு நற்றானம்-பண்ணும்
பொழுதில் விசுவ வசுவாம் புனிதன்
முழுது முணர்ந்த முனிவன்-பழுதி

---

32 இதனை-இயமன் மாண்டதால் உலகத்துயிர்களைக்கொன்று குவிப்பார் இன்மையால் பூமிதேவியாருக்கு பெரும்பாரமாகிய இச்செயலை. கதம்-கோபம். ஒழியும்-நீங்கும்.

33 இயம்ப-விண்ணப்பஞ்சொல்ல. பெரிய கரும் பகடு-பெரிய கருமை நிறம் பொருந்திய எருமைக்கிடாய். மன்னவன்-எமதருமராசன். உய்யவரம்-பிழைத்துயிருண்டாகும் வரத்தினை. இன்னும்-மேலும்

34 சிவசின்னம்-விபூதி, உருத்திராக்கம், ஐந்தக்கரம். அவசின்னம்-அவமானம் (அழிவு). தவிர்-தவிர்ப்பாய்.

35 கழறினோன்-இடித்துரைத்தவன். சால-மிகவும்.

36 விதேகம்-தேகநீங்கியநிலை (தேகநீங்கியபின்னடைவது.) பொன்னினகர் மன்னன்-இந்திரன். சிலம்பு-மலை. கோமதி தீரம்-கோமதியாற்றங்கரை. பலன்-பிரயோசனம்.

37 விசுவசித்தியாகம்-ஒருவகை வேள்வி. இரவலர்-யாசகர்கள் தானம்-தாரைவார்த்துக்கொடுப்பது. (உதகபூர்வமாய் வழங்குவதென்பர் வடநூலார்)

38 முனிவன்-வெறுத்தவன். முழுதும்-யாவும். பழுது-குற்றம்.

லரச னிளவல் பிரமதியை யன்புமிகு
பெரிதினிய கோதானம் பெற்றுப்—புரிவிற்

றனதூரி லெய்துங்காற் ருவிச் சுரபி
புனித முனிபாற் புகாமல்-நனியகல

வந்த முனிவ னகம்வெகுண்டு சாபத்தை
யிந்தப் பிரமதிபா லெய்தவே-நொந்து

குரவ னருள்பெற்றுக் கோமதி யாற்றங்
கரையகன்று கங்கைசூழ் காசி-விரவும்

பருப்பதங்கா ளத்தி பரவியே கம்பம்
புரத்திற் சிறந்த புலியூர்-திருத்தோணி

யானபதி வெண்கா டடைந்தன்பிற் சேவித்து
வானுயரும் வில்வ வனமேவித்—தானங்கள்

---

39 அரசன் இளவல்-இராசாவின் தம்பி.(சகோதரன்) விசுவசு முனிவன் பிரமதி இவர்களைப்பற்றி புராணத்திற்கண்டு கொள்க. கோதானம்-பசுத்தானம்.(கொடை) புரிவு-அன்பு.

40 தாவி-தாண்டி. சுரபி-பசு. நனி அகல-மிகவுந்தூரத்தில் நீங்கிவிட.

41 அந்த முனிவன்-விசுவசு. வெகுண்டு-கோபித்து. பிரமதி-அரசன். நொந்து-வருந்தி.

42 குரவன்-குரு. அகன்று-நீங்கிவிட்டு. கங்கை-ஒரு புண்ணிய நதி. காசி-ஒரு சிவ திருப்பதி. இது இறந்தால் முத்திதருந் தலம்.

43 பருப்பதம்-ஒரு திருப்பதி. ஸ்ரீ சைலம். காளத்தி-பாம்பும் யானையும் பூசித்தலால் இப்பெயர் வந்தது. பரவி-இங்குள்ள தலங்களை பரவிப் போற்றி. ஏகம்பம்-காஞ்சிபுரம் புலியூர்-சிற்றம்பலம்.(இக்காலத்துச் சிதம்பரம் என வழங்குவது)

44 தோணியானபதி-சீகாழி. வெண்காடு-திருவெண்காடு சேவித்து-வழிபட்டு. வானுயரும் வில்வவனம்-இவ்வுலாவின் திருப்பதியாம். தானங்கள்-பூதானகோதான முதலியவையாம்.

45 செய்து புவனன் றிசையி லொருபகழி
யெய்துந் தூ ரத்தோ ரிலிங்கத்தை-யுய்யும்

பிதிட்டை புரிந்து பெருங்கோ புரமு
மதிட்டிரளும் மாளிகையு மற்றும்-விதித்திட்டு

மாகமுத வீரா றுமாக மருந்தேற்றி
யாகமத்திற் றப்பாம லர்ச்சிப்ப-ஓகையால்

வன்னவை டூர்ய வரதன்ன மேவு
மின்னற்சா பந்தவிர்க்கு மெம்பிரான்-பொன்னவையி

லாட்டினுன் மன்னுயிரை யாட்டினு னிம்மூவர்
பாட்டினுன் வானோரிற் பாட்டினுன்-பூட்டிலக

---

45 பவனன் திசை-வாயுதிசை (தென் மேற்குத்திசை). ஒரு பகழி எய்தும் தூரம்-ஒரு அம்பினைக்கோத்து விடுத்தால் எவ்வளவு தூரம் செல்லுமோ அவ்வளவு தூரம். ஓர் இலிங்கம்-ஒப்பற்ற சிவலிங்கவுருவம். உய்யும்-யாவரும் பூசித்துக் கடைதேறும்.

46 பிதிட்டை-பிரதிட்டை. மதிட்டிரள்-மதில்கள். விதித்திட்டு-முறைப்படியமைத்து.

47 மாகம்-மாசிமாதம். மருந்து-அட்டபந்தன மருந்து.(அமுது) ஆகமம்-சிவாகமங்கள். தப்பாமல்-சொல்வழு முதலிய தவிராமல். அர்ச்சிப்ப-அருச்சனை புரிய. ஓகை-மகிழ்ச்சி.

48 வன்னம்-நிறம். வைடூர்ய வரதன்ன மேவு மின்னற்சா பந்தவிர்க்கு மெம்பிரான்-வைடூர்ய வரதனிடத்து மேவிய துன்பந்தரத்தக்க சாபத்தைப்போக்கிய பிரான். இது முதல், தல விசேடத்தில் மூர்த்தியைப்பற்றிக் கூறுவனவற்றைக் காண்க. பொன் அவை-கனகசபை.

49 ஆடல்-கூத்து. ஆட்டினுன்-ஆட்டுவிப்பவன். இம்மூவர்-ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர். பாட்டு-தேவாரப் பாட்டு. வானோர்-தேவர். இல்-இடத்து. பாடு-பெருமை (உழைப்பு). பூட்டு-மாட்டுதல். இலக-விளங்க.

50 மேருவினைக் கோட்டினான் வெய்யபுரம் வீட்டினான்
பூரியர்க்குப் பாசவலை பூட்டினான்-கார்பொலியுங்
கண்டத்தான் கற்றைமதித் துண்டத்தான் முக்கியவே
தண்டத்தான் வேழக்கோ தண்டத்தான்-பண்டெரிய
நோக்கினா னந்துயர நூக்கினான் மூவுலகு
மாக்கினா னெவ்வுருவு மாக்கினான்-வீக்கியிடு
மின்பயிலு மேனியான் வேணியா ருய்யவிட
முன்பயிலு மன்புடைய முக்கணான்-பொன்பிரிய
மஞ்சு நிறத்தா னனத்தினான் காணாத
வஞ்சு நிறத்தா னனத்தினான்-நெஞ்சுலவு
55 கற்பனையாங் கங்கை கமலத்தா னத்தணியுங்
கற்பனையாங் நங்கை கமலத்தான்-பொற்கிரியி

---

50 கோட்டினான்-வளைத்தவன். கார்பொலியும் கண்டத்தான்-நீலகண்டத்தான். பூரியர்-இழிந்தவர். வீட்டினான்-அழித்தவன். வெய்யபுரம்-திரிபுரம்.

51 மதித்துண்டம்-பிறைமதி. துண்டம்-பிளப்பு (பிறை). வேதண்டம்-கைலைமலை. வேழக்கோதண்டத்தான்-மன்மதன். வேழம்-கரும்பு. கோதண்டம்-வில்.

52 நம் துயரம்-நம்முடைய துன்பங்கள். நூக்குதல் -பொடித்தல். எவ்வுருவும் - எல்லா வடிவங்களையும். ஆக்கினான்-படைத்தவன்.

53 வேணியார் உய்ய-தேவர்கள் பிழைப்ப. விடம்-முன்பு. அயிலும்-முன்னர்விடத்தினை யுண்ணும். முக்கணான் - சிவபெருமான். பொன்-இலக்குமி. பிரியம்-அன்பு (காதல்).

54 மஞ்சு-மேகம். அனத்தினான்-பிரமன். அஞ்சு நிறத்து ஆனனத்தினான்-ஐவகை நிறங்களுடைய ஐம்முகக்கடவுளாகிய சிவபெருமான். நெஞ்சுஉலவல்-அன்பர்கள் உள்ளத்தின் கண் உலாவுதல்.

55 கற்பனை-படைத்தல்(பொய்). கம்-தலை. கமலம்-தாமரைப்பூ,, இது பொருளாகு பெயர். நத்து-சங்கு. நந்தென்பதன் விகாரம்.. கற்புஅனை-கற்புத்தாய். அன்னையென்பதன் இடைக்குறை. கமலம்-நீர். கிரி-மலை. இல்-இருக்கை.

லுற்ற பதங்க வுருவினு னேரெண்கா
லுற்ற பதங்க வுருவினன்-சர்ப்பா
பரணத்தான் வேளைப் பயந்தோனம் பொற்சா
பரணத்தான் வேளைப் பயந்தோன்-சரணத்தி
லற்சிக்க மேவி யருள்செய்வோ னம்பாச
வற்சிக்க மேவி யருள்செய்வோன்-பொற்பிலக
வாரத் தலகி லணுகினன் காணும
லாரத் தலைகி லணுகிபவா-னேரி
60 லரிந்த வனுசாப மகற்றுவான் சோதி
விரிந்த முடியரசன் மேனாட்-புரிந்து
மலியும் விழாவயருங் காலத்தில் வானோ
ரிலகவிட பத்துவச மேற்றி-நிலமுண்ட
பூவைநிறத் தான் புனிதமல ரோன்முதலாந்
தேவ ரெவரும் திரண்டுதின-மேவிக்

---

56 பதங்க உவிருனன்-வெள்ளிய நீறு பூசிய அழகினையுடையவன். அன்றி, சூரியன் போன்ற செவந்த உருவுடையவன் எனவும் பொருள் கொள்ளலாம். பதங்கம்-இரசம். பதங்கன்-சூரியன். எண்கால் உற்ற பதங்கம்-சரபப்புள், சரபப்பறவைக்கு எண்காற்பறவையென வழங்குவதுண்டு.

57 சர்ப்ப ஆபரணம்-சர்ப்பாபரணம்-பாம்பணி. வேள்-மன்மதன், முருகன். பயந்தோன்-ஈன்றோன், பயப்படும்படி செய்தவன். சரணம்-அடிகள். பொன்சாபம்-மேருவில்.

58 அர்ச்சித்தல்-அற்சித்தல்-நாமங்கூறல். மேவி-பொருந்தி, விரும்பி. பாசம்-மலம். வற்சிக்க-நீக்க, விடுக்க. பொற்பு-அழகு.

59 பவான் - கடவுள். அலகு-எண்.
59,60 ஆகிய 2, கண்ணிகட்கும் வரலாறு விளங்கவில்லை

61 விழா-திருநாள். அயர்தல்-நடத்துதல். வானோர்-தேவர்கள். இடபம்துவசம் -இடபம் வரைந்த கொடி. (கொடியேற்று திருநாள் குறிக்கப்படுகின்றது.)

62 பூவை நிறத்தோன்-காயாம்பூப்போன்ற கரியநிறமுடைய திருமால். காயா என்பது இக்காலத்துக் காசாவென வழங்குகின்றது. புனிதம்-தூய்மை. மலரோன்-பிரமன். திரண்டு-கூடி.

குலாவு முனிவோருங் கொண்டாடி யேத்த
வுலாவுதிரு நாளி லொருநாள்-நிலாவுசீர்
வீறு படைத்தசிவ வேதியர் பூசிப்பக்
கூறும் விதியினுற் கொண்டருளி-யீறிலாச்
சோதி வெயில்வீசத் துன்றுநவ ரத்தின
வேதிகையிற் சேவிப்ப வீற்றிருந்து-போதனுர்
நாவில் மறவாத நான்மறையு மூவராந்
தேவர் நவிலும் திருப்பாட்டும்-மாவழுதி
பூசல் புரியப் பொருள்கவரும் மாணிக்க
வாசகர் சொற்றதிரு வாசகமும்-பேசுமுறை
கேட்டு மலந்தீரக் கீதம் பலபாடக்
கோட்டும் புருவக் கொடியன்னு-ராட்டயரப்
பண்டிமவான் போற்றப் பருவத் திருவோடுங்
கண்டருளி வாளரவக் காப்பணிந்து-விண்டு

---

63 முனிவோர்-இருடிகள். கொண்டாடியேத்த-இறைவன் திருவிளையாடல்களைப் பாராட்டித்துதிப்ப. உலாவு திரு நாளில் ஒரு நாள்-பவனிவருந்திருநாட்களுள் ஒரு திருநாள்.

64 வீறு - பெருமை. சிவவேதியர்-சிவப்பிராமணர். விதி-கட்டளை, ஆணை. கொண்டருளி-ஏற்றருளி.

65 சோதி வெயில் - சோதியாகிய ஒளி துன்றுதல் - செறிதல் நவரத்னம்-நவமணி. (நீலம், வயிரம், பதுமராகம், கோமேதகம், முதலியனவாம்) வேதிகை-மேடை, ஆசனம். போதன்-பிரமன்

66 நான்மறை-இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பனவாம். திருப்பாட்டு-தமிழ்மறை, தேவாரம். வழுதி-பாண்டியன்.

67 பூசல்-சண்டை, போர். சொற்ற-திருவாய்மலர்ந்தருளின. பேசுமுறை-ஓதும் ஒழுங்கு.

68 மலம் தீர-பாசம் நீங்க. பல கீதம்-பலவகைப் பண்கள். கோட்டும்-வளைந்த (வளையும்) கொடி-பூங்கொடி. அன்னர்-மகளிர்கள். ஆடு அயர-ஆடல் புரிய.

69 இமவான்-பனிமலையரசன். பருவத்திரு-அபிராமியம்மை. அரவக்காப்பு-அரவகங்கணம். வாள்-ஒளி. விண்டு-மலை

70 நுதலுக் கெதிரென்று நோக்கிச் சடையின்
மதியைக் கவுரி மறைக்கும்—விதமுற்றுச்

செய்ததே வன்றித் திரிபதகை தன்கொழுநன்
மெய்யிற் றழுவாத வெற்பளிக்கும்—தையல்

புரிந்தவித மோவென்னப் பொன்முடியாற் சோதி
பரந்த கிரீடம் பரித்து-விரிந்தரவம்

வெம்மியுணர் வோர்பால் விளங்கும் பரிதியென
வம்பொனுதற் பட்ட மலங்கரித்துப்-பைம்பொனிலத்

தேவர் துதியும் திருத்தொண்டர் மெய்த்துதியும்
தாவில் முனிவோர்க ளந்துதியும்-மேவி

75 இருவர் கரவீணை இன்னிசையு மென்மேற்
பெருகு திருச்செவியிற் பேணி—விரவிற்

கவருங் கதிர்வீசுங் காமர் குழையு
மவிரும்பொற் றோடு மணிந்து—குவலயத்திற்

---

70 எதிர்-ஒப்பு. நுதல்-நெற்றி. மதி-சந்திரன். கவுரி-பார்வதி தேவியார். விதம்-வகை.

71 திரிபதகை-கங்கை. கொழுநன்-நாயகன். வெற்பு-மலை.

72 சோதிபரந்த கிரீடம்-ஒளிபரவிய மகுடம். பரித்து-தாங்கி. (தரித்து.)

73 வெம்மி-வெம்மையுற்று. பரிதி-சூரியன். நுதல்பட்டம்-நெற்றிப்பட்டம். பைம்பொனிலம்-சுவர்க்கலோகம்.

74 தேவர்-சுரர்கள். திருத்தொண்டர்-நாயன்மார்கள். மெய்த்துதி-உண்மையருட்பாட்டாகிய போற்றுதல்கள். தா இல்-கேடில்லாத.

75 இருவர்-தும்புரு, நாரதர் எனுமிவர்கள். பேணி—விரும்பியேற்று. விரவுதல்-கலத்தல்.

76 கதிர்-ஒளி. காமர்-அழகு. குழை-காதணி. அவிரும்-விளங்கும். பொன்தோடு-அழகியதோடு, மகளிர் அணியும் காதணி. குவலயம்-பூமண்டலம்.

பண்டு முனியும் பயோததியி லாலமெனக்
கண்டு விபுதர் கலங்காமல்—மண்டியெழி
லேதஞ்சற் றில்லா திலகு மணிமிடற்றை
மாதங்கப் பூணால் மறைத்தருளி—யாதரவா
யந்திரத்திற் றேவ ரரிபிரம ராதியோர்
மந்திரமாம் வெற்பில் வரியரவம்—பந்திக்குந்
தன்மையெனத் திண்டோளிற் றங்க நவரத்ன
மின்னவிலக் கேயூர மீதணிந்து—கன்னவிலும்
பொற்பதக்க மோடு புரிநூல் மனங்கவரும்
பொற்கிரிமார் பகத்திற் புனைந்து—வற்புற்ற
கொன்றைப்பூ மாலை குவளைப் புதுமாலை
மன்றற் பொலிகூ விளமாலை—துன்று
நவரத்ன மாலை நவசந்த்ர மாலை
யிவையத் தனையுமாங் கிட்டுத்—தவிராத

---

77 பண்டு-பழங்காலத்தில். முனியும்-கோபிக்கும். பயோததி-பாற்கடல். ஆலம்-ஆலகால விடம். விபுதர்-தேவர்கள். மண்டுதல்-நெருங்கல். எழில்-அழகு.

78 ஏதம்-வருத்தம் (குற்றம்). சற்று-சிறிது. மிடறு-கழுத்து. தங்கப்பூண்-பொன்னாபரணம். ஆதரவு-பற்று, அன்பு.

79 அந்திரம் (அந்தரம்)-ஆகாயம். மந்திரமாம்வெற்பு-மந்திரகிரி. வரிஅரவம்-கீற்றுக்களையுடைய வாசுகியெனும் பெரும் பாம்பு. (ஆதிசேடனுமாம்). பந்திக்கும்-சுற்றும்.

80 திண் தோள்-வலியதோள். மகாமேருகிரியை வில்லாக தலால் இங்ஙனம் கூறினார். மின்நவில-மின்போலச்சூழ. கேயூரம்-வாகுவலயம். (தோளணி). கல்நவிலும்-கற்கள் பதிக்கப்பெற்ற.

81 பொற்பதக்கம்-மார்பிலணியும் அணி. புரிநூல்-முப்புரிநூல். பொற்கிரி-மேருமலை. புனைந்து-அலங்கரித்து. அற்பு-அன்பு.

82 மன்றல்-மணம். கூவிளம்-வில்வம். துன்று-செறிதல்.

83 நவரத்னமாலை-நவமணிமாலை. நவசந்த்ர மாலை-ஒருவகை மாலை. இவை அத்தனையும்-இவைமுற்றும்.

செவ்வா யதரமுஞ் சீர்பவ ளம்போல
வவ்வான் பயந்த வணங்கன்னுன்-பௌவத்தி
லால நுகரு மரனுர்பா கத்திருத்திச்
சீலவரை மார்பிற் சிறந்ததெனச்—சாலக்

கதம்பத்தி லெண்மடங்கு கந்திப்ப வாகத்
ததும்பத் திருச்சாந்து சாத்திப்—பொதிந்திலகு

சிந்தா மணியு மிருநிதியுஞ் செம்பொற்பூ
மந்தார நேரு மலர்க்கரத்தி—லுந்தித்

திருந்து மணியீன்று சீறு முரகம்
பொருந்துங் கடகம் புனைந்து—மருங்குலராக்

கச்சிற் பொலிந்து கவின்கொள்ளச் சேர்க்கலுறுஞ்
செச்சைநிறப் பட்டுச் சித்திரித்து—மெச்சிப்பே

ராற்ற லவுண ரழிவதற்கா யன்றுநுகர்
பாற்கனுக் கிந்தப் பகிரண்டந்-தோற்றுவிக்கு

84 அதரம்-இதழ், (உதடு) வான்-அமுது. பயந்த-கொடுத்த. அணங்கு-உமை. பௌவம்-கடல்.

85 ஆலம்-முன்னர் வந்துளது. வரை-மலை.

86 கதம்பம்-வாசனைப்பொடி. எண்மடங்கு - எட்டுமடங்கு. கந்திப்ப-வாசனை வீச. ஆகம்-மார்பு. ததும்ப-நிறைய சாந்து-சந்தனம்.

87 சிந்தாமணி-நினைத்தவற்றைக்கொடுக்குமணி. இரு நிதி-சங்கநிதி, பதுமநிதி. மந்தாரம்-ஐவகைத்தருக்களில் ஒன்று. நேரும்-ஒக்கும்.

88 மணி-மாணிக்கம். சீறும் உரகம்-சீறுகின்றபாம்பு. உரக கடகம்,பொருந்துங்கடகமெனக்கூட்டுக. மருங்குல்-இடை.

89 அராக்கச்சு-பாம்பாகிய கயிறு, இடுப்பிற்கட்டும் கயிறு கவின்-வனப்பு. செச்சை ஈண்டு,சிவப்பு அல்லது, உதய சந்திரன் ஆம். சித்திரித்து-அலங்கரித்து.

90 அவுணர்-அசுரர். ஆற்றல்-வன்மை. அன்று-அக்காலத்தில், பாற்கன்-ஒருதேவன் (பிரமன்). பகிரண்டம்-உலகு.

மந்த வுதரத் தணிவுதர பந்தனமார்த்
திந்த நிலமுதலா மெப்புவியுந்-தந்தருளிப்
போதுலா வுங்கடவுள் போயிரந்து வந்திக்குஞ்
சேதுலா வுங்கமலச் சேவடியின்-மீதழகு
கூரக் கனகாவிற் கோலக் கனகமணி
வீரக் கழலார்த்து வில்விலக-நாரணனா
மன்றறிய வொண்ணாத வம்போ ருகத்துளமின்
மின்றவிழ மேன்மேல் விளங்குமொளி-துன்றியிடத்
துய்ய நவரத்னம் சுற்றும் பதித்திட்டுச்
செய்யும் பசும்பொற் சிலம்பணிந்து-மையிற்
கரவா தவிரும் கசிந்துருகித் தேன்கற்றைத்
திருவா சிகைமேற் றிருத்தி-இரவகல
வேந்தெழிலிற் றோன்று மிளைஞர் தமைப்போலக்
காந்துலகங் கண்ணாற் கண்டருளிப்-பூந்தருநீ

---

91 உதரம்-வயிறு. உதரபந்தனம்-அரையிற் கட்டும் ஒருவகையுடை (அணி) ஆர்த்து-கட்டி. இந்தநிலம்-இவ்வுலகம், எப்புவியும்-எல்லாவுலகங்களும். தந்தருளி-படைத்து.

92 போதுலாவுங் கடவுள்-பிரமன். வந்திக்கும்-வணங்கும். சேது-செம்மை (செவப்பு நிறம்), கமலம்-தாமரை.

93 கனகா-பொன்துலை. கோலம்-அழகு. நாரணன்-நாராயணன் என்பதன்றிரிபு. கனகம்-பொன்,

94 அம்போருகம்-நீரிற்றோன்றுவது. காரணவிடுகுறியாய்த் தாமரை மலருக்காயிற்று. மின்-மின்னல். தவிழ-தவிர (நீங்க) மேன்மேல்-அடுக்கு. துன்றியிட-செறிய, (நெருங்க)

95 துய்ய-துய்தான (பரிசுத்தமான). சுற்றும்-சுற்றிலும். பசும்பொன்-இயற்கைகுன்றாப்பொன்.

96 கரவாது-ஒளியாது. அவிரும்-ஒளிவிடும், தேன் வண்டு. கற்றை-தொகுதியாகிய மலர் மாலை. திருவாசிகை-வட்டமாக வளைக்கப்பட்டது, இறைவன், இருக்கையின் மேற் பொருத்தப்படுவது. திருத்தி-அழகுபெறவமைத்து.

97 எழில்-எழுச்சி, அழகு. இளைஞர்-காளைப்பருவமுடைய ஆடவர். காந்து உலகம்-ஒளியுடைய உலகம். கண்டருளி-பார்த்து.

ளங்கண் விசும்பி லமரர் குழாங்களிப்பத்
தங்கத் திருவாடு தண்டேறிச்-செங்கனகப்

பொற்பிலகி யந்தப் புயலுலா வைச்சிறந்து
பற்பலவாய்ப் பாவை பயிலாத-வற்புதமாந்

திண்சிகர முற்ற திருவா யிலையணைந்து
வண்சிகரப் பொற்றேரில் வந்தேறி-விண்பரவத்

துன்றியுவ ணப்புட் டுளங்கவே நெட்டுயிர்க்கும்
வென்றியிட பத்துவச மீயோங்கச்-சென்றறியாத்

திக்களவு நீழல் சிறக்கக் கவிக்கும்பூச்
சக்கரவா ளக்கவிகை சார்ந்தெடுப்ப-மிக்கமரர்

கண்டு வியப்பக் கனகக் கவின்காட்டித்
தெண்டிரையிற் பீலித் திரள்வீச- மண்டியபா

98 அம்கண்-இடமகன்றது. அமரர் குழாம்-தேவர் கூட்டம். தங்கம் திருஆடுதண்டு-பொன்மயமாகிய திருவாவடுதண்டு எனும் மரம். (வாரை)

99 இலகி-விளங்கி. அந்தம்-அழகு. புயல்-மேகம். சிறத்தல்-மேம்படல். பயிலாத-பழகாத, (விளையாடல் புரியாத) அற்புதம்-ஆச்சரியம்.

100 திண்சிகரம்-வலிய மலைபோன்ற கோபுரம். அணைந்து-எழுந்தருளி வந்து. வண்சிகரம்-வளப்பமுற்ற கலசம் அமைக்கப்பட்ட உச்சி. விண்பரவ-தேவர்கள் போற்றுதல் புரிய. விண்-ஆகுபெயர்.

101 உவணப்புள்-கருடப்பறவை, (பெரியதிருவடி.) துளங்க-நடுங்க. நெட்டுயிர்ப்பு-பெருமூச்சு. வென்றி-வெற்றி, இடபத்துவசம்-இடபம் வரைந்த கொடி. மீ-மேல். சென்று. அறியாத-போய் எல்லையளவு காணமுடியாத.

102 கவிக்கும்-மறைக்கும் பூச்சக்கரவாளக்கவிகை-சக்கரவட்டப்பூக்குடை, (பூச்சக்கரவட்டக் குடையெனவும் வழங்கும்.)

103 மிக்கு அமரர், கண்டுவியப்ப-அமரர்கள் அனைவரும், பிரமன்மாற்கரிய காட்சி கிடைத்ததேயெனக்கண்டு விம்மிதமுற. கனகக்கவின்-பொன்னொத்த மேனியின் அழகு. தெண்திரை-தெளிந்த அலைகள். பீலிதிரள்-ஆலவட்டங்கள்.

லோத முயர்ந்திலகி யொண்டரள மென்றுபுரள்
மாதங்கப் பொற்சா மரையிரட்ட-நாதமிகுந்
துந்துபி பேரி துடிகாக ளந்தொனிக்கு
முந்திய வீணை முழாமுதலாய்-நந்திபுரி
மத்தளத் தோடு தடாரி வலம்புரியா
மித்தகைய மேள மெடுத்தொலிப்ப-வத்தியெனு
மூடிகத்திற் றோன்றி முனிவர் பரிவினொடு
மாடற் கலாப மதிலேறப்-பாடுந்
தரும்நூல் துளபந் தரித்த பிரானின்
றிருஞ்சிறையப் புள்ளூர்தி யேற-விரிஞ்சன்
றனியெகின மேறத் தவள விறந்தோயப்
பனிவரையிற் றோன்றும் பகட்டின்-முனியும்
வயிரப் படைசேர் மகவா னிவரச்
செய்நற் றபனனொன்று சேவிற்-பயில

---

104 பால் ஓதம்-பாற்கடல். ஒள் தரளம்-ஒளி பொருந்திய முத்துக்கள். மா-பெரிய. தங்கம்-பொற்காம்பு. பொன்-வனப்பு. நாதமிகும்-ஒலிமிகும்.

105, 106 இவ்விரு கண்ணிகளிலும் வாத்திய விசேடங்கள் வந்துள்ளன. அவையாவன:—துந்துபி, பேரி, துடி, காகளம் (எக்காளம்). வீணை, முழா, மத்தளம், தடாரி, வலம்புரி என்பனவாம்.

107 முனிவர்-சிவ குமாரர்கள், (மூத்தபிள்ளையார், இளைய பிள்ளையார்). மூடிகத்தில்-பெருச்சாளி வாகனத்தில். ஆடல்-வென்றி. கலாபம்-மயில்.

108 துளபம் தரித்தபிரான்-திருமால். றின்று-நீலபெற்று. இரும் சிறையபுள்-பெரிய இறகுகளையுடைய கருடன். விரிஞ்சன்-பிரமன்.

109 தனி எகினம்-ஒப்பற்ற அன்னப்பறவை. தவளம்-வெண்மை. பனிவரை-இமயமலை பகடு-ஐராவதயானை, (இந்திரன் ஊர்தி). முனியும்-பகைவரைக்கோபிக்கும்.

110 வயிரப்படை-வச்சிராயுதம். மகவான்-இந்திரன். இவர-ஏற. தபனன்-சூரியன். ஒன்றுதல்—ஒத்தல் (பொருந்துதல்). சே-இடபம் (எருது). பயில-நன்றாக.

வுருத்திரர்தா மேற வுயர்ந்த விமானத்திற்
றிருத்தகு சந்திரனுஞ் செல்ல-விருட்கடியும்

பன்னிருவ ராதித்தர் பல்கு நவரத்னப்
பொன்னவிருந் தேரிற் போயிருந்தே-மின்னிற்

றுலங்கு கனலோனேர் சோதிமத மாபோ
லிலங்கும் பொருதகரி லேற-விலங்க

லெனப்பணைத்த மேதி யிளம்பகட்டி லாவி
தினத்தெவிட்டாக் காலனூர் செல்ல-மனத்தறமே

115 நாட்டு நிருதி நரவா கனமேற
வேட்டவரு ணன்மகர மீதேறக்-கோட்டிரலை

மீதிற்கா லேற விளங்குமணி புட்பகத்திற்
சோதிக் குபேரனூர் தோனறியே-போதஞ்

சமானம் பகராத் தவம்புரியுந் தக்கோர்
விமானங்கள் மீதில் விளங்கச்-சுமாலகசுப்

111 உருத்திரர்-ஏகாதசருத்திரர்கள். உயர்ந்த விமானம்-உயர்ந்த பல்லக்கு (சிவிகை) கடியும்-போக்கும்.

112 ஆதித்தர்-சூரியர். பல்குதல்-மிகுதல். தேர்-ஓராழித்தேர். பாயிருந்து-பரவியிருந்து. மின்னில்-மின்போல.

113 கனலோன்-தீக்கடவுள். மதமா-யானை. இலங்கும்-விளங்கும். தகர்-ஆட்டுக்கிடாய். விலங்கல்-மலை.

114 பணைத்தமேதி-பெருத்த எருமை. பகடு-கிடாய். ஆவி-உயிர் காலன்-இயமன். இவன் தென்றிசைக்கோன். மனத்து அறம்-மனத்துக்கண் மாசிலனுதல்.

115 நாட்டுதல்-நிலைபெறவைத்தல். நரவாகனம்-புருடவூர்தி. மகரம்-மகரமீன் வாகனம். கோடு-கொம்பு. இரலை-மான்.

116 கால்-வாயுதேவன். புட்பகம்-புட்பகமெனப்பெயரிய விமானம். இது குபேரனுக்குரியது. போதம்-ஞானம்.

117 சமானம்-ஒப்பு. தக்கோர்-துறவறப் பெரியார்கள். "தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச், செல்வருஞ் சேர்வது நாடு"—என்பது (குறள்.) சுமாலக சுப்பேரன்-நல்ல மாலையினைத்தரித்த நல்ல உடலுடையவன் (மதன்)

பேரன் சிரமுருக்கும் பெம்மான் றனியகன்ற
மாரன் சிறுகான் மணித்தேரை-யூரச்
சுவணச் சிறையுவணத் தோன்றற்கும் வேணித்
தவளப் பிறையான் றனக்கு-முவகையாம்
மைந்தன் சுவேத மதகரியின் மீதேற
விந்தைகண் டிந்திரனு மீதேறச்-சந்ததமுந்
தீங்கு பிறவே சிவத்துரோ கம்புரியு
மாங்கவரை யெல்லா மடவந்தோ-னிங்கு
ஞமலி முதுகேற நன்பொற் றருநாட்
டமரர் பலரு மருங்குவரத்-தமர
வரிபாடுங் கந்திருவர் மாகதர்கந் தர்வர்
கருடர்சித் தர்கணங் கூடப்-புருட
ரனகூறுஞ் செங்க ணர்க்கரு நாகர்
மனமேவு மாகாச வாச-ரினமூன்

---

118 சிரம்-வெகுகாலம்(நீண்ட நாட்கள்.) முருக்கும்-கெடுக்கும். தனி-தனிமை. சிறுகால்-தென்றல் காற்று. ஊர-செலுத்த.

119 சுவணம். (சுவர்ணம்)-பொன். தோன்றல்-மாயன். வேணி-கபர்த்தமெனுஞ் செஞ்சடை. உவகை-மகிழ்ச்சி.

120 மைந்தன்—ஐயனார் (அரிகரகுமரன்). சுவேதம்-வெண்மை. மதகரி-யானை. விந்தை-வியப்பு. சந்ததம்-எப்பொழுதும்.

121 சிவத்துரோகம்-சிவநிந்தனை. புரியும்-செய்யும். பிறதீங்கு-பஞ்சமகாபாதங்கள். அடவந்தோன்-வைரவக்கடவுள்.

122 ஞமலி-ஞாளி. (நாய்) நன்பொன் தருநாடு-சுவர்க்கலோகம். மருங்கு-நாற்பக்கம். தமரம்-ஒலி.

123 கந்திருவர்-இசைபாட்டுக்களை யிசையுடன் இசைப்பவர் (யாழோர் எனப்படுவர்). கந்தருவர்—தேவசாதியிலோர் வகையினர். மாகதர்—நின்றேத்துவோரும், இருந்து ஏத்து வோரும். புருடர்-கிம்புருடர்.

124 அனகூறும்-அவ்வாறே, தேவகணத்தில்வைத்துக் கூறப் படும். செங்கணர், கருநாகர் இவர்களும் தேவகணத்து வரே. மனம்-உள்ளம். மேவும்-பொருந்தும். ஆகாசவாசர் ஆகாயத்தில்வசிப்பவர். இனம்-கூட்டம். இனம் மூன்று-வானவர், மக்கள், நரகர் ஆயவர் இனமாம்.

றுதியா யெல்லோரு மன்பி லரகரவென்
றோதிவே லாவலைய மொத்தொலிப்பக்-கோதில்
மணலா லிலிங்கம் வகுத்து மதவனச
விணரலர்ச் சிப்பதனை யெண்ணா-துணர்வின்றி
மிண்டுபுரி யத்தன்பால் மேவும் பிதாவின்கால்
கண்டஞ்செய் திட்ட கரத்தோனும்-கொண்டா
டனமுயர்த்தோன் போற்று மரன்பாகத் தன்னை
வனமுலைப்பால் வெள்ளத்தின் மாந்திப்-புனையுமதி
கூடற் பதியரசன் கூனிமிர மேனாளிற்
பாடற் பதிகம் பகர்ந்தோனு-மீடுரையா
வஞ்சொற் பசுங்கிளியா மற்றோர்பாற் பன்னிக்குச்
சஞ்சரிக மாரலைக்குந் தண்டலையில்-மஞ்சுமிக

---

125 அன்பு இல்-அன்பே இருக்கை. அரகர-சிவநாமம். வேலா வலயம்-பூமி, கடலாற் சூழப்பட்டது. கோது-குற்றம்.

126 மணலால் இலிங்கம் வகுத்து-மண்ணியாற்றங்கரையின் மணலினால் இலிங்கவுரு வமைத்து மதவனசம்-மகரந்தப் பொடியொடு கூடிய தாமரைமலர். இணர்-பூங்கொத்து. அதன்-அவ்வுண்மை நிலையினை. உணர்வு இன்றி-தன்னறிவு இல்லாமல்.

127 மிண்டு-செருக்கு, (மிண்டுமனத்தவர்) கண்டம்-துண்டித்தல், கரம்-கை. கண்டஞ்செய்திட்ட கரத்தோன்-சண்டேசுரநாயனார். கொண்டாடல்-உலகத்தவரால் அளவைகளான் அறிந்து மேற்கொள்ளல்.

128 அனம்உயர்த்தோன்-பிரமன். (அன்னக்கொடியன்) அரன்-தோணியப்பர். அன்னை-திருநிலை நாயகி. வனம்-அழகு, மாந்தி-பருகி. புனையுமதி-எல்லாரும் புனைந்து கூறுமதி.

129 கூடற்பதி-மதுரைநகர். அரசன்-நின்றசீர் நெடுமாறனார், (கூன்பாண்டியனார்) மேல் நாள்-பண்டொருநாள். பகர்ந்தோன்-ஞானசம்பந்தர். ஈடு-ஒப்பு. உரையாத-சொல்ல முடியாத.

130 பால்பன்னிக்கு-பால்போலுமினிய சொற்களைப் பேசும் பரவை நச்சியாருக்கு. சஞ்சரிகம்-வண்டுகள். ஆர்தல்-நிறைதல். அலைக்கும்-அலையச்செய்யும். தண்டலை-சோலை. மஞ்சு-மேகம்.

மண்டியூர் கோளிலியில் மாதேவ ரைப்பாடிக்
குண்டையூர் நெல்லுக் கொணர்ந்தோனும்-பண்டு [லகிற்
றுய்ய திருநீறு தோன்றப் புனைந்தோரை
வெய்யவ ரென்று வெகுள்சமண-ருய்யாமற்

கற்பனை யாய்க்கடலுட் டள்ளித் தனைச்சேர்ந்த
கற்புணையா கப்பாடக் கற்றவனு-மிற்றுதியா

வாழ்வு தருவான் மருவிக் குருவிந்த
நீழ லுகந்த நிமிலன்பாற்-றாழவே

யாறாத மால்கொண் டழுந்துந்தன் கண்ணீர்போன்
மாறாமற் பாட்டுரைக்க வல்லோனும்-கூறு

மனுநூல் விதியால் மலைநாடு காத்துப்
புனித நெறியே புரிந்து-தனைநிகரு

---

131 மண்டி-நெருங்கி. கோளிலி-திருக்கோளிலி என்னுந்தலம். திருக்குவளையென வழங்குகின்றது. குண்டையூர் நெல்லுக் கொணர்ந்தோன்-சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

132 புனைந்தோர்-சைவசமயிகள். வெய்யவர் என்று-பூச்சாண்டிக(கொடியவர்க)ளென்று. உய்யாமல்-கடைத்தேறுதபடி.

133 கற்பனை-சூழ்ச்சி. கற்புணை-கற்றோணி. பாடக்கற்றவன்-திருநாவுக்கரசு சுவாமிகள். துதி-தோத்திரம்.

134 வாழ்வு தருவான்-வாழ்வினைத் தரும்படி. வாழ்வு-பேரின்பம். மருவி-பொருந்தி. குருவிந்த நீழல்-குருந்தமர நிழல். நிமலன்-குருவடிவானவன். (தூய்மையானவன்). தாழ-வணங்க.

135 ஆறாத-தணியாத. அழுந்தும்-பதியும். மாறாமல் பாட்டுரைக்கவல்லோன்-மாணிக்கவாசக சுவாமிகள். ஆண்டவனை யடிபடவும், குதிரையாளாகவரவும், கோவையெழுதவும் செய்தமையால் வல்லோன் என்றார்.

136 மநுநூல்-ஒருவகை அறங்கூறுநூல். மலைநாடு-சேரநாடு (கொங்குநாடு). புனிதநெறி-சைவநெறி. தனைநிகரும்-தனக்குத்தானே ஒப்பாகும்.

மூதண்ட கூட முகடளா வுஞ்சிகர
வேதண்ட மெய்த மிகவிரும்பித்-தீதகல
விள்ளாகா வாய விமலன்றாண் மேவுவான்
வெள்ளானை மீதில் வியந்தேறி-யெள்ளாமல்
முன்றொண்டை வாய்ப்பரைவ மோகிப்பச் சோக [முறும்
வன்றொண்ட ஞேடேகு மன்னவனு-மன்று
140 கரந்து மகவைக் கனிவினில் வெவ்வே
றரிந்து கறிக ளமைத்துச்-சுரும்பரின
மார்க்குஞ்செங் காட்டிலகு மத்தனூர் சித்தத்துக்
கேற்பச் சுவையமுத மீந்தோனுஞ்-சேர்க்கு
மரவா பரண மணியும் பெருமான்
கரவா னுரோகஞ்செய் கண்ணில்-வெருவியே
வீங்கும் பரிவாற் றனது விழியிடந்து
வாங்கி யணிந்த வனசரனும்-பாங்குபெறு

137 மூதண்டமுகடு-அண்டத்தின் உச்சி. அளாவும்-கலக்கும். (தொடும்)சிகரம்-முடி. வேதண்டம்-கைலை. தீது-பிறப்பின் தீமை.

138 விள்ளல்-கூறல். விமலன்-சிவபெருமான். தாள்மேவு வான்-திருவடிகளை விரும்பிப்பணிவான். ஒள்ளாமல்-ஒளி யாதபடி.

139 தொண்டைவாய்-கொவ்வைக்கனியொத்த அதரம். வன் றொண்டர்-ஆளுடைய நம்பிகள். (தம்பிரான்றோழர்) ஏகு மன்னவன்-சேரமான்பெருமாணயனூர்.

140 மகவு-சீராளதேவர். கனிவு-தொண்டர்பால்வைத்த உள் ளக்கனிவு. சுரும்பர்-வண்டு.

141 செங்காடு-திருச்செங்காட்டங்குடி. அத்தனூர்-உத்திரா பதியார். அமுதமீந்தோன்-சிறுத்தொண்ட நாயனூர்.

142 அரவாபரணமணியும் பெருமான்-காளத்தியப்பன். கரவு-ஒளித்தல். உரோகம்-பிணி. வெருவி-அச்சங்கொண்டு.

143 வீங்கும்பரிவு-பேரன்பு. இடந்து-பறித்து. (தோண்டி) வனசரன்-கண்ணப்ப நாயனூர். பாங்கு-தன்மை (குணம்).

ஞால முழுது நவின்றேத்துந் தண்டலையில்
வாலரியுஞ் சாகினியு மாவடுவுங்-கீலமாய்
மண்டுங் கமரில் மடுப்பக் கரைந்துருகிக்
கண்டத்தை யீருங் கரத்தோனும்-விண்டுருகி
யாரிய னுக்கிரவி லாலவா லத்தின்முளை
வாரி யனம்புரக்கும் வல்லோனும்-போரிசையும்
வல்லரக்கி தாமம் வளையத் தலைசாய்ந்த
செல்வப் பனந்தாட் சிவலிங்கம்-மல்கிய
சீரிற் பொலியத் திகையாமற் றன்கண்ட
மீரக் கயிற்றினு லீர்ந்தோனு-மேர்பெற்ற
நீறுபுனை யக்கண்டு நேராமற் றன்கரத்து
மாறில்படை யோடு மடிந்தோனுங்-கூறு
மினைய ரெவரு மிவர்போலத் தொண்டு
புனையுமவ ரும்பரவிப் போத-முனிவகன்று

144 தண்டலை-ஒரு சிவ திருப்பதி வால் அரி-வெள்ளிய அரிசி. சாகினி-கீரை. கீலம்-துவாரம்.

145 கமர்-பிளப்பு (வெடிப்பு). கரைந்துருகல்-நைந்துருகல் (அரற்றி நைதல், கண்டம்-கழுத்து. ஈர்தல்-அரிதல். கரத்தோன்-அரிவாட்டாய நாயனுர்.

146 ஆரியன்-அடியராகவந்த சிவபெருமான். ஆலவாலம்-பாத்தி. முளை-நென்முளை. அனம்-அன்னம் (சோறு). வல்லோன்-இளையான்குடிமாற நாயனுர்.

147 வல்லரக்கு-தாடகை. தாமம் வளைய-மாலை சூட்ட. பனந்தாள்-திருப்பனந்தாள்.

148 திகைத்தல்-மயங்கல். தன்கண்டம்-தன்கழுத்து. ஈர-பிளப்ப. கயிற்றினுல் ஈர்ந்தோன்-குங்கிலியக்கலய நாயனுர். ஏர்பெற்ற நீறு-சுந்தரமாகிய திருநீறு.

149 புனையக்கண்டு-தரித்தலைப்பார்த்து நேராமல்-ஆராயாமல். மாறு-பகை. மடிந்தோன்-மெய்ப்பொருளுயனுர்.

150 இனையர்-இத்தன்மையர். எவரும்-எல்லாரும். தொண்டு புனையுமவர்-ஏனைய நாயன்மார்கள். பரவி போத-துதித்து வர.

கைத்வ மின்றிக் கருமந் தவறாத
வைதீக மேவு மறையோரும்-வெய்தி

னுருக்கு நவநீத முற்று மனுவா
லிருக்குங் கபாலத்தி னீக்குந்-திருக்கம்பை

யாறுலா வும்பதியி லன்றபிடே கித்துலகில்
வீறுலா வுங்கருணை வேதியரு-மீறில்

பெருமான் சிவாலயத்துட் பெய்திரவி யங்கள்
மருவாது கட்டளையில் வைகித் திருவிழா

வாரா தனையாவு மன்பாக வேயாற்றும்
பேராண்மை யுள்ள பெருந்தவனு-மேரான

வில்வ வனமொன்று மேவித்த நாண்முதலாய்
மல்குங் கடவூரில் வாழ்வுற்றுச்-செல்வமுறுங்

---

151 கைதவம்-வஞ்சகம். கருமம்-விதிக்கப்பட்ட செயல்கள், (அநுட்டானங்கள்). வைதீகம்-வேதசம்பந்தமாயுள்ளது. மறையவர்-பார்ப்பனர். வெய்து-வெம்மையுடையது (வெப்பம்).

152 உருக்கும்-உருகச்செய்யும். நவநீதம்-வெண்ணெய். மனு-மந்திரம். கபாலம்-மண்டை ஓடு. நீக்கும்-போக்கும். கம்பையாறு-கம்பாநதி.

153 பதி-நகர், கோயில். வீறு-கெம்பீரம். வேதியர்-வேதமோதிய அந்தணர். ஈறு-இறுதி, முடிவு.

154 திரவியம்-பொருள், (பூசைப்பொருள்). கட்டளை-அளவு, (படிக்கட்டளையுமாம்) வைகி-பொருந்தி. மருவாது-பொருந்தாமல். திருவிழா-திருநாள், (உற்சவம்).

155 ஆராதனை-பூசித்தல். பேராண்மை-அரியசெயல். பெருந்தவன்-பெரும் தவமுடையவன். இவன் பிரமதி என்பவன் ஆம். ஏர்-அழகு.

156 மேவித்த-பொருந்தி வளரச்செய்த. மல்கும்-நிறையும். செல்வம்-பெருந்திரு, ஆக்கம்.

தானத் தவருந் தலத்தோருந் தக்கசிவ
ஞானத் தமிழ்பாடும் நாவலருங்-கானச்
சுவைதோயும் விஞ்சையருஞ் சொற்ற பரத
மெவையு மறிந்தோ ரெவருந்-தவளமணி
சேரும் புளகமுலைச் செங்கட் கிளிமழலை
யாரு மொழித்தே வடியாளும்-பாரிலுறு
வெள்ள மெனப்பரந்து மேவி யராவின்முடி
துள்ளு மினியெனவே துன்னிவர-வெள்ளிப்
பொருமத னாகம் பொடிபடுத்த வெங்கண்
வரியரவம் பூண்டபிரான் வந்தான்-விரதமாய்
மாலாழி நீத்தோன் மகவுக்குப் பால்வளரும்
பாலாழி யீன்ற பரன்வந்தான்-சால

---

157 தானத்தவர்-கோயில் விசாரணைக்குரியவர். தலத்தார்-பதியிலுள்ளவர்கள். சிவஞானத்தமிழ்-சிவஞானத்தினைத்தரும் தமிழ் நூல்கள்: அவை தேவார முதலிய திருமுறைகளாம். நாவலர்-ஓதுவார் மூர்த்திகள். கானம்-இசை, பாட்டு.

158 தோயும்-நிறையும். விஞ்சையர்-வித்தியாதரர். பரதம்-பாவம், இராகம், தாளம் ஆகிய மூன்றும், கூடியது. நாட்டியமுமாம். எவையும்-பலவகையாயவைகளும். தவளமணி-முத்து.

159 புளகம்-மகிழ்ச்சி. மழலை-பொருள் விளங்கா மொழி. (கொஞ்சிப்பேசு மொழியுமாம்) மழலைமொழி ஆரும்எனக் கூட்டுக. தேவடியாள்-உருத்திரகணிகையர். பார்-பூமி.

160 வெள்ளம்-கடல், மிகுதி. இனி, அராவின்முடி துள்ளும் என துன்னிவர என முடிக்க. துன்னி-நெருங்கி. எள்ளி-இகழ்ந்து.

161 பொருமதன்-போர்புரிந்த மன்மதனார். ஆகம்-உடல். பொடிபடுத்த-சாம்பராக்கின. பிரான்-கடவூர்ப்பெருமான். வந்தான்-நேரில் வந்தருளினான்.

162 மால்-உலகியல் மயக்கம். ஆழி-கடல். நீத்தோன்-புலிமுனி. மகவு-உபமன்யர். பாலாழி-பாற்கடல். "பாற்கடலீன்ற பிரான்" என்பது பல்லாண்டு.

மதிக்கு நதிகுலத்தில் வந்தோர் மரபி
லுதிக்கு மொருவனும் வந்தான்-றுதிப்ப
வுலகெலா மென்னு முரையென்ற செம்பொன்
மலைகுலா வும்புயத்தான் வந்தா-னிலமுழுதுங்
165 கீண்ட மருப்புடன் கிள்ளும் பல்சிரமும்
பூண்ட கனகப் புயன்வந்தான்-றாண்டும்
புரமன் றெரிமூளப் புன்முறுவல் செய்த
வரத னருள்கூர வந்தான்-பரவிப்
புகழும் பவளப் புரிசடையான் வந்தான்
மகிழுங் கடவூரான் வந்தா-னிகரிலா
வாராருஞ் சூலத்தான் வந்தான்வந் தானென்று
சீரார் திருச்சின்னஞ் செப்பக்-காராகத்
தேய்ந்த மருங்குற் றிலத மதிற்கவுரி
யேய வொருபாகத் தெங்கோமான்-வாய்ந்தவெழிற்

---

163 சால மதிக்கும்-மிக மதிக்கப்பெறும். நதிகுலம்-நதிவமிசம். வந்தோர்-வேளாளர். ஒருவன்-சிவபிரான். இவ்வரலாறு புராணத்திற் காண்க.

164 துதிப்ப...வந்தான். என்ஆம்-யாதாம். செம்பொன்மலை-மேருமலை குலாவும்-விளங்கும்.

165 கீண்டல்-கிண்டல், கிளருதல். மருப்பு-பன்றியின் தந்தம், (ஏனத்தெயிறு) பல்சிரம்-பலதலைகள். பூண்ட-மாலையாகத் தரித்த. தூண்டும்-யாண்டும் செல்லும்.

166 புன்முறுவல்-புன்சிரிப்பு, (சிறுநகை). வரதன்-வரமருள்பவன். அருள்கூர-அருள்மிக.

167 பவளம் புரிசடை-பவளம்போலும் முறுக்குகளையுடைய செஞ்சடை. மகிழும் கடவூரான்-பாட்டுடைத் தலைவன், (காப்பியத்தலைவன்).

168 வார்-நீள், நேர்மை. சூலத்தான்-முத்தலைச் சூலப்படையுடையான். திருச்சின்னம்-எக்காளம்.

169 தேய்ந்த மருங்குல்-சிறுத்த இடை. திலதம்-பொட்டு (திலதமது பகுதிப்பொருள் விகுதி). இல்-இருக்கப்பெற்ற. கவுரி-பார்வதியம்மையார். காராக ஏய-கருமையாகப் பொருந்தப்பெற்ற. ஒருபாகத்தெங்கோன்-ஒருபாகத்தினையுடைய அர்த்தநாரீசுரன்.

கேதனங்க டுன்னக் கிளருமனத் தோட்கடவிச்
சோதி மணிமறுகிற் றேன்றுதலும்-போதனுர்
தங்கு முலகிற் குழாங்கள் புளகமுலை
திங்கள் வதனத் தெரிவையருஞ்-செங்கண்மால்
மேவியவை குந்தத்தில் மின்னாரும் பொன்னிலத்தில்
வாவுங் கயற்கண் மடவாரும்-பூவிற்
சிறந்த திருவுந் திசைமுகத்தோன் றங்கும்
புறந்தவளக் கோகநகப் பூமீ-துறைந்திலகி
யெண்ணெண் கலையு மியற்று மொருஞானப்
பெண்ணு மியக்கர் பெதும்பையரு-நண்ணி
மரகத வாள்வீச வண்ணப்பூ ணேந்து
முரகர் பதியி லுகந்த-வரிவையரும்
பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீருக
மாதரையில் வைகும் மடவாருஞ்-சீதநிலாப்

---

170 கேதனம்-கொடி. கடவி-செலுத்தி. மறுகு-வீதி. போதன்-பிரமன்.

171 உலகு-சத்தியலோகம். குழாம்-கூட்டம். திங்கள் வதனம்-சந்திரன்போன்ற முகம். தெரிவையர்-மகளிர்கள். செம் கண் மால்-திருமால்.

172 மின்னார்-மின்னல்போன்ற ஒளியுறு மகளிர்கள். பொன்னிலம்-சுவர்க்கலோகம். வாவும்-பாயும். மடவார்-தெய்வலோகப் பெண்கள்.

173 திரு-இலக்குமி. திசைமுகத்தோன்-நான்முகன். கோகநகம்-தாமரை. தவளம்-வெண்மை. இலகி-விளங்கி.

174 எண்ணென் கலை-அறுபானுன்கு கலைகள். ஞானப்பெண்-சரசுவதி தேவியார். இயக்கர் பெதும்பையர்-யட்சசாதிமகளிர்கள்.

175 மரகதம்வாள்-மரகதமாகிய வாட்படை, மரகதமாகிய ஒளி. ஏந்து-தரித்த. உரகர்பதி-நாகலோகம்.

176 பேதைமுதலாப் பேரிளம்பெண்ணீருகவுள்ளவர், பேதை-பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்ணென எழுவராவர். மாதரை-பெரியபூமி.

பில்குந் தவளப் பிறைதவழு மாடத்து
மல்குங் கனகமணி வாயிலினும்—பல்கிரணப்

பத்திபா யாதெங்கும் பரக்கு நவரத்னச்
சித்திரக்கூ டத்துஞ் சிறுதென்ற-லுற்றுலவும்

வேனிலா முற்றத்து மேடையினுங் கோபுரத்தும்
பானிலா வெள்ளம் பரப்பதென-வானிமிரு

மண்டபத்து மொண்டரள வண்ண விமானத்துந்
தெண்டிரைகள் போலச் செறிந்தீண்டிக்-கொண்
[டலைக்கண்

டாடும் மயிலினீட் டம்போலா டுங்குயிலின்
கோடுஞ்செய் பைங்கிளியின் கூட்டம்போ—லூடு

புரிவா ரெதிர்தர நிற்பார் புரங்கள்
திரிவா ருருகி நயப்பார்-கருவிழியாற்

காணு தவர்போற் கரப்பா ரகலாத
நாணு பரணம் நழுவுவார்—வேணிப்

புனல்மாது மோர்பாற் பொலிந்த புளகத்
தனமாதும் போலத் தரையி-லினிது

177 பில்கும்-துளிக்கும்.

178 சித்திரகூடம்-அழகியகூடம். சிறு தென்றல்-தென்றல் காற்று.

179 முற்றம்-வாயில். நிலா வெள்ளம்-நிலாப்பரப்பின் மிகுதி.

180 வான்நிமிரும் மண்டபம்-விண்ணளவும் உயர்ந்தமண்டபங்கள். திரை-அலை. ஈண்டி—நெருங்கி. கொண்டல்-நீருண்ட மேகம்.

181 மயிலின் ஈட்டம்-மயிற்கூட்டங்கள். குயிலின்கோடும்-குயிலின் கூட்டங்களும். ஊடு—நடு.

182 புரிவார்-செய்பவர். புரம்-உடல். திரிவார்-அசைவார்கள். நயப்பார்-விரும்புவார்.

183 கரப்பார்-மறைப்பவர்கள். நாண் ஆபரணம்—நாணமெனும் அணி. வேணி-சடை.

184 புனல்மாது-கங்கை. ஓர்பால்-இடப்பக்கம். மாது-உமையம்மையார்.

பிறந்தோ மிலேயென்பார் பெண்பிறப்பி லீச
சிறந்தோ ரிவரெனமுன் செல்வார்—மறங்கத்து

மெண்டோளுந் திங்க ளிலகுஞ் சடாமுடியுந்
தண்டார் கமழுந் தடமார்பும்—கண்டு

வணங்குவார் வில்வேள் மலரம் பாலாக
முணர மிகநெட் டுயிர்ப்பார்—பிணங்குவார்

மாதவர்தம் பள்ளியர்க்கு மால்கொண் டலேயுமிவ
ரேதின்று நோக்கா ரெமையென்பார்—சீதரனூர்

மோகினியா யன்றுவர மோகித் துருகுமிவர்
யோகியர்போ லச்செல்வ ரோவென்பார்-மேகலேயும்

வண்ணத் தரள வளேயு மகன்றயர்வார்
சுண்ணமுலே யிற்றினஞ் சூடுவார்—கண்கவர

---

185 பிறந்தோம் இலே-தோன்றினேமில்லே. ஈச-சிவபெருமானே. இது விளியாம். சிறந்தோர்-சிறப்பாகக் கூறப்படுபவர். மறம் கத்தும்-மறம் கூறும்.

186 எண்-எட்டு. சடாமுடி-சடாமகுடம். தண்தார்-குளிர்ச்சி பொருந்திய மாலே. கமழும்-மணம் வீசும். தடம்-விசாலம்.

187 வணங்குவார்-வழிபாடு புரிபவர்கள். வில்வேள்-மன்மதன். ஆகம்-அகமென்பதன் நீடல், மனம் என்பது பொருளாம். நெட்டுயிர்ப்பு-பெருமூச்சு.

188 மாதவர்-முனிவர். பிணங்கல்-மாறுபடல். நோக்கார்-நம்மை நோக்கார். என்பார்-என்றுசொல்லுமவர்கள். சீதரன்-திருமால்.

189 மோகினி-யாவரையும் மோகிக்கச்செயும் பெண். அன்று-அக்காலம். மோகித்துருகுமிவர்-சிவபெருமாஞகிய இவர். செல்வரோ-போவாரோ; போகமாட்டார் என்றபடி. மேகலே-அணி.

190 வண்ணம்-அழகு. வளே-வளேவாயுள்ளது, வளேயல். அகன்று அயர்வார்-நீங்கப்பெற்று தளர்பவர். சுண்ணம்-ஒருவகை நறுமணப்பொடி. கவர-பற்ற.

நோக்குவா ரிங்கு நுவலுவார் தங்காத
லாக்குவார் போதினு லர்ச்சிப்பார்—தேக்கமிகு

நீரிற் படிந்தாலு நில்லாத காமத்தீ
யாரிப் புவிமீதி லாற்றுவரொன்—றேரிலகு

மாதரார் தம்மோ டுரைப்பார் வடியாத
காதல்வே லைக்குட் கலங்குவார்-பூதரமாம்

வாகிலணி யுந்தார் மாதேவ ரின்றுதவிற்
சோக மிலையெனவே சொல்லுவா—ராக

195 முருகி விகாரத்தா லுள்ளந் தளர்ந்து
பரிவுற்ற மாதர் பலரி—லொருபேதை

## பேதை.

சற்று மழலைத் தவளப் பசுங்கிள்ளை
சிற்றின்ப நல்குஞ் சிறுபூவை—பற்றி

---

191 நுவலுவார்-சொல்லுவார்கள். காதல்-அன்பு. போது-பூக்கள். தேக்கம்-தேங்கியிருத்தல்.

192 படிதல்-மூழ்குதல். நில்லாத-தணியப்பெருத. காமத்தீ-காமாக்கினி. ஆற்றுவார்-தணிப்பவர். ஆர்-யாவர்? ஏர்-வனப்பு. இலகும்-விளங்கும்.

193 வடியாத-வற்ருத. காதல்வேலை-காதற்கடல். பூதரம்-மலை.

194 வாகு-தோள். மாதேவர்-சிவபெருமான். உதவின்-கொடுப்பின். சோகம்-தளர்வு.

195 விகாரம்-காமவிகாரம் (விகாரம்-வேறுபாடு). உள்ளம் தளர்ந்து-மனத்தளர்ச்சியெய்தி. பரிவுற்ற மாதர்-வருந்திய அல்லது விரும்பிய மகளிர்கள். பலரில்-பலருள். ஒருபேதை ஒரு பேதைப்பருவத்துப் பெண்ணுனவள்.
பேதை-ஏழுவயதுப் பெண்.

196 கிள்ளை-கிளி. நல்கும்-கொடுக்கும். பூவை-நாகணவாய்ப் புள்.

விலைபகரா மாணிக்கம் வேலைபடா முத்தந்
துலையில் நிறுத்துலவாச் சொன்னங்-குலவப்
பிழியாத செந்தேன் பிறித்தாலைக் கேற்பக்
கழியாத மென்மதுரக் கன்ன-லெழுநிலாக்
காணி லுவந்து களியாச் சிறுமஞ்ஞை
பாண்வண்டு கிண்டாப் பதுமமுகை-பூணுஞ்
200 சடரா ரமும்வளையுந் தத்துந் திரையிற்
படரா திலகும் பவள-மிடையுமிள
மாவிற் றளிர்கோதி மாமதனன் றன்னைவரக்
கூவி யுலவாக் குயிற்பேடு-நாவினுற்
பாலிற் கலந்த பசும்புனலை வேருக்கா
தேல நடக்கு மிளவன்னஞ்-சாலவே
யாறுத மால்கொண் டகமெலியு நல்லாரைச்
சீறுத தென்றற் சிறுகன்று-வீறுதரு

---

197 விலைபகரா மாணிக்கம்-விலைகூறமுடியாத மாணிக்கம். வேலைபடா முத்தம்-கடலிற்றோன்றாத முத்து. துலை-தராசு. சொன்னம்-தங்கம். குலவி-பொருந்தி.

198 பிழியாத-பிழியப்படாத. செந்தேன்- செவ்விய தேன். ஏற்ப-இசைய. கழித்தல்-தோகை (இலை)யை அகற்றல். கன்னல்-கரும்பு. நிலா-சந்திரன்.

199 சிறு மஞ்ஞை-சிறு மயில். பாண்-பாட்டு. கிண்டல்-கிளறல் பதுமமுகை-தாமரைமொக்கு (அரும்பு).

200 ஆரம்-முத்து. வளை-சங்கு. திரை-கடல் (ஆகுபெயர்). படராது-படராமல். மிடையும்-நெருங்கும்.

201 மாவின்தளிர்-மாமரத்தின் இளந்தழை. பேடு-பெண்.

202 பாலிற்கலந்தபுனலை-பாலொடு சேர்ந்த நீரினை, பாலொடு நீரைக்கலப்பது இயற்கைபோலும். வேருக்காது-பிரிக்காது. ஏல-இசைய.

203 ஆறுத-தணியப்பெறுத. மால்-மயக்கம். அகம்-மனம். சீறுதல்-கோபித்தல். தென்றல் சிறுகன்று-இளந்தென்றற் காற்று.

பொன்வண்ணம் பூணும் புயத்திளைஞர் தாமிகவுந்
தன்வண்ணங் காட்டிற் றளர்வரென-மின்வண்ணக்
காரிற் பொலியக் கரந்து நறுங்காயைச்
சோர முடிக்குஞ் சுரிகுழலாள்-போரியற்றி
வாட்டா விழிக்கடையில் வள்ளைக் கொடியழகு
காட்டா தணிகுதம்பைக் காதினாள்-ளீட்டுபுகழ்
ஞாலத்தி லாடவரை நாடி யமர்புரிவோர்
வேலொத் திலகு விழியினாள்-சால்புற்ற
லாறு பொற்றரள மாலை புனையுமுலைப்
பாறு மின்மழலைப் பண்ணினாள்-தேனுகராப்
புட்குலவும் பாணத்தாள் பொன்முடியும் பொற் [கிரியும்
வெட்கு மெனவுரத்தின் மீளாம-லுட்கரந்து
மேவித் தவளநிலா வீண்டிலகுந் தண்டரளக்
கோவைக் கிசையாத கொங்கையாள்-பூவையர்கால்

---

204 புயம்-தோள். இளைஞர்-காளைப்பருவத்தினர். தளர்வர்-சோர்வர்.

205 கார்-மேகம் கரந்து-மறைத்து. சுரிகுழல்-நெறிப்பினையுடைய கூந்தல் (நெறிப்பு-நெளிவு.)

206 வாட்டல்-வருத்தல். வள்ளைக்கொடி-காதுக்குவமை. குதம்பை-இளம்பருவ மகளிர் காதிலணியும் கனமான ஒருவகை வளையம். ஈட்டுபுகழ்-புகழ் ஈட்டு எனமாறுக.

207 ஆடவர்-வீரர். வேல்-வேற்படை.

208 வானாறு-கங்கை. பால்நாறும்-பால்மணம்வீசும்.

209 தேனுகராப்புள்-வளையல். பாணம்-கை. பொன்முடி-பொன்னாலாகிய மகுடம். பொன்கிரி-பொன்மலை. வெட்கும்-நாணும். உரம்-மார்பு. மீளல்-திரும்புதல்.

210 விண்டு-தோற்றி. தரளம்கோவை-முத்துமாலை. இசையாத கொங்கையாள்-கொங்கைகள் அரும்பப்பெறாதவள். (ஏழு வயதுடையவளாகலின்) பூவையர்-மகளிர்கள்.

*நீல நிறைவிலகு நீள்கனக நூபுரத்தை*
*யால முமிழு மரவென்பா-ளோலவொலி*

*யேய்ந்தமக ராலயத்தி னெய்தியெழு ஞாயிறுபோ*
*லாய்ந்தவொளி வட்ட மதுநோக்கி-வாய்ந்தொளிரு*

*தன்னிழலை யொத்தாள் சதபத் திரவதன*
*கன்னி யிவளென்று காட்டுவா-ளன்னையருங்*

*குற்றே வலையாற்றுங் கோதை யருமன்றி*
*மற்றோ ருழியின் மருவிலா-ளற்புதமா*

*வாவி யதனி லரக்காம் பலைநோக்கித்*
*தாவுந்தீ யாமெனமேற் சாத்திலாள்-மேவியே*

*தூரிகையாற் றீட்டுஞ் சுவணநிறக் கிள்ளைதகக்*
*காரிகையீர் பற்றுமெனக் காட்டுவாள்-வாரிமணற்*

*சிற்றில் வளைத்துச் செழுங்குவளை மாடமுங்*
*கற்றை நிலாத்தவழ் காத்தலமுந்-தெற்றிகளு*

---

**211** நீலம்-நீலக்கல் (நீலமணி) நிறை-உட்செறிவு. நூபுரம்-சிலம்பு. ஆலம் உமிழும்-நஞ்சு கக்கும். ஓலம்-அலை.

**212** மகராலயம்-கடல். ஞாயிறு-சூரியன். ஒளிவட்டம்-ஒளியினையுடைய வட்டவடிவினை. நோக்கி-பார்த்து. வாய்த்து-வாய்க்கப்பெற்று (விளங்கி).

**213** சதபத்திரம்-நூறு இதழ்களையுடைய தாமரை, வதனம்-முகம். காட்டுவாள்-சுட்டிக்காண்பிப்பாள்.

**214** குறு ஏவல்-சிறு அலுவல். ஆற்றும்-செய்யும். கோதையர்-பணிப்பெண்கள். ஒருழி-ஓரிடம். மருவிலாள்-பொருந்தாதவள் (போகாதவள்).

**215** ஆவி-தடாகம். அரக்குஆம்பல்-செவ்வல்லி. தாவும்-தாண்டும். மேல்-தலை (உடல்).

**216** தூரிகை-சித்திரம் வரையும் கோல். தீட்டும்-எழுதும். சுவணநிறக்கிள்ளை-பொற்கிளி. காரிகையீர்-விளி. பற்றும்-பிடியுங்கள்.

**217** சிற்றில்-சிறுவீடு. வளைத்து-கோலி, (செய்து) மாடம்-உபரிகை. கற்றை-தொகுதி காத்தலம்-பொழிலிடம்.

மத்தாணி யும்மா டரங்குஞ் செழுங்கமல
வித்தார மென்கரத்தால் வேறமைத்து-நித்திலமுந்

துய்யமணலுஞ் சொரிந்திட்டுப் பொற்றசும்பிற்
செய்ய கதிர்மணியாந் தீயடுப்பிற்-பெய்தினிய

பாலடிசி லட்டுப் பரிவிற் கலம்பரப்பிக்
கோலமணிப் பாவையுணக் கூறுவாள்-சேலியற்கண்

மின்னார் புடைசூழ மின்னா புரமதிரப்
பொன்னுரு மேடைப் புறத்தணைந்து-பன்னுந்

துரப்பூவை யார்தனக்குச் சொல்வனபோன் மெல்லக்
கரப்பூவைக் குப்பயிற்றுங் காலை-யரக்காந்தள்

பஞ்சு நிகரும் பதமா திரமீன்று
வஞ்சி யொருபான் மகிழ்ந்திருப்பக்-கஞ்சத்

திருமா லொருபாற் சிறப்பச் சுருதிப்
பெருமான் சிரமும் பிணையும்-பொருமழுவுந்

---

218 தெற்றி-திண்ணை, (மேடை). அத்தாணி-அரசிருக்கை மண்டபம். ஆடரங்கு-நடனசாலை. செழுங்கமலம்-செந்தாமரை. வேறுஅமைத்து-தனித்தனிவகுத்து. நித்திலம்-முத்து.

219 பொன் தசும்பு-பொற்கலசம் (பானை) செய்யகதிர்மணி-மாணிக்கம். பெய்து-பொருந்தி.

220 பால்அடிசில்-பாற்சோறு. கலம்-உண்கலம் (பாண்டம்). பாவை-பொம்மை. சேல்-மீன். இயல்-தன்மை.

221 மின்னார்-மின்னல்போன்ற ஒளியினையுடைய மகளிர்கள். அதிர-ஒலிப்ப. அணைந்து-சேர்ந்து. பன்னும்-கூறும்.

222 துரம் பூவையார்-பொறுப்பு (உரிமை) உடைய நங்கை. மெல்ல-மெதுவாக. கரம்பூவைக்கு-கையின்கண் வைத்து புள்ளினுக்கு. பயிற்றும்-பழக்குவிக்கும். காலை-சமயம். அரக்காந்தள்-செங்காந்தட்பூ.

223 பஞ்சு-செம்பஞ்சு. நிகரும்-ஒக்கும். மாதிரம்-மலை. வஞ்சி-வஞ்சிக்கொடி போன்றவள். ஒருபால்-ஒருபக்கத்தின்கண். கஞ்சம்-தாமரை.

224 திரு-இலக்குமி. மால்-விட்டுணு. சுருதிபெருமான்-பிரமன், (சுருதி-வேதம்). பிணை-மான். சிரம்-தலை. மழு-மழுவாயுதம்.

தீயுந் திரிக்குந் திரிசூல மும்மருணந்
தோயு முளரி தொறுமிலகக்-காயும்
பிறைநிலாக் கான்று பெருங்கங்கை-யாற்றின்
துறைகுலா வுந்தவளச் சோதி-நிறைய
துகிரார் சடிலந் துலங்குமதி யென்ன
வகிராருந் தாமம் வயங்கப் புகல்மறையின்
காரணமா மெங்கோன் கனகமணித் தேர்கடவித்
தோரண வீதிக்கட் டோன்றுதலும்-பாரிற்
பொலியு மிளமிழலைப் பொற்கொடியுமாட
மலியுந் திருமறுகில் வந்து-நிலமுழுது
மின்றி முனியு மிறையோனை வந்திக்குந்
தென்றிக் கரத்துத் தெரிவையர்போல்-வன்றணியும்
அண்ணல் பதமிறைஞ்சி யந்திப் பிறைதவழும்
வண்ணப் பவள வார்ச்சடையுந்-தண்ணளியே
பில்கி யருவிப் பெருகும் விழிமூன்று
மல்கும் வெயில்பயக்கும் வண்டோடும்-கல்கலென

---

225 திரிசூலம்-முத்தலைப் படை. அருணம்-சிவப்பு முளரி-தாமரை. இலக காயும்-விளங்க வீசும்.

226 கான்று-சொரிந்து. சோதி-பேரொளி.

227 துகிர்-பவளம். சடிலம்-சடை. வகிர்-கோதி வகிர்தல். தாமம்-மாலை. வயங்க-விளங்க.

228 காரணம் ஆம்எம்கோன்-உலகிற்குக் காரணமாகும் எம் தலைவன். தோரணம்-மகரதோரணம் (வளைவாகவுள்ளது)

229 இள மழலைப் பொற்கொடி-பேதைப்பருவத்துப் பெண். மலிவு-நிறைவு. திருமறுகு-செல்வவீதி

230 தென்றி-தெற்கு. வல்தணியும்-பாசவன்மையினைத் தணியச்செய்யும்.

231 அண்ணல்-பரமேசுரன். பதம்-திருவடி. இறைஞ்சல்-வணங்கல். வண்ணம்-அழகு. அளி-கருணை.

232 பில்கி-துளித்து. விழிமூன்று-சோமசூரியாக்னியாகிய முக்கண்கள். கல்கலென-கலகல என்ன.

வார்க்கும்வே லாவலயத் தாலநிக ழுங்களனும்
பார்க்குந் தொறும் வியந்து பாராம-னீர்க்கமல

மன்ன கரத்தி லருணன் றனைநோக்கித்
துன்னுஞ் சிறுபூவை சொற்கிள்ளை—யென்னவே

235 யீது விளையாட வின்றெமக்கு நல்கெனவே
கோதையர்பா லாதரவு கொண்டுரைப்பப்-பேதை
[மையால்

மின்னே யிதனை விளம்பினுய் மூவுலகிற்
றன்னே டொவ்வாதபொருட் டன்மையாய்ச்-சின்
[மயமா

யாதியாய் நிட்களமா யற்புதமா யெப்பொருட்கு
மேதுவாய் நிற்கு மிறைவன்கைப்-போதி

லுழையெமக்கு மேவுமோ வொண்ணுதலே யென்று
விழைமல்கு நல்லா ரியம்பி-மழலையிளம்

---

233 ஆலநிகழும்களம்-நீலகண்டம். வியந்து-அவற்றின் அரிய செயல்களை குறித்துச் சிறப்பித்து.

234 அருணன்-மான், அருணம் என்பதன் போலி. துன்னும்-நெருங்கும்.

235 ஈது-இம்மான். கோதையர்பால்-மகளிர்களிடத்து. ஆதரவு-பற்று. பேதமை-அறியாமை.

236 ஒவ்வாத-ஒப்பில்லாத. ஒவ்வாத என்பதன் இடைக்குறை. மூவுலகு-சுவர்க்க மத்ய பாதல உலகங்கள். சின்மயம்-ஞானமயம்.

237 நிட்களம்-தூயமை. ஏது-மூலம் (காரணம்) 236, 237 வது கண்ணிகளில் இறைவனுடைய தன்மை கூறப்பட்டுள்ளமை இன்புறற்குரியது. இறைவன்—எவ்வுயிரிலும் தங்குபவன்.

238 உழை-மான். இழை-அணிகலன். நல்லார்—மகளிர்கள். இயம்பி-கூறி.

புண்டரீக மின்னோடும் பொற்கோயி லுட்புகுந்தார்
வண்டு விசித்து வளையாமல்—வெண்டரளம்
கண்ணிலக நீண்ட கழைக்கார் முகமேந்தி
வண்ண மதனு மருங்குவர-வண்ணலார்
பொற்றா ரிலகப் புனையும்பொற் றேர்கடவி
மற்றோர் மறுகின் மருவினார்-கற்றைப்

## பெதும்பை.

பிறைதிகழும் நெற்றிப் பெதும்பை யொருத்தி
நறைவிரிய விண்ட நளின-மறையு
மழலை யகன்றுரைக்கும் வண்ணப்பைங் கிள்ளை
பழுதி லெழுதரிய பாவை-பொழியும்
பசும்புயல் கண்டாடும் பச்சை மயூர
மிசைந்தாட மிக்க வெகினம்-விசும்பி
லமரர் முதலெவரு மாரா வமுதந்
திமிரநிற வண்டுண்ணாத் தேறல்-கமழ

---

239 புண்டரீகம்-தாமரை. புகுந்தார்-நுழைந்தார்கள். வண்டு விசித்து-வண்டாகிய நாணினால் கட்டி. வளையாமல்-வளைக்காமல்.

240 கண்-கணுக்கள். கழை-கரும்பு. கார்முகம்-வில். மருங்குவர-பக்கத்தில்வர. அண்ணலார்-சிவபெருமான். (கடவூரான்).

241 புனையும்-அலங்கரிக்கப்பட்ட. மற்றோர் மறுகு-வேறொரு வீதி.

## பெதும்பை.

242 பெதும்பை-பதினொருவயதிற் பெண். பிறை திகழும் நெற்றி—பிறைபோல விளங்கும்நுதல். நறை-தேன் (மணம்) விண்ட—முறுக்குநெகிழ்ந்த. நளினம்-தாமரை. அறையும்-கூறும்.

243 மழலைஅகன்று-மழலையுரைநீங்கி. பழுது-குற்றம். பயனின்மையுமாம். அரிய-கூடாத. முடியாத வெனலுமாம் பொழியும்-சொரியும் (துளிக்கும்)

244 பசும்புயல்-நீருண்டமேகம். மயூரம்-மயில். இசைந்து-பொருந்தி. விசும்பு-ஆகாயம். (ஆகுபெயர்.)

245 ஆரா அமுதம்-உண்ணாத வமிழ்து. திமிரம்-கருமை. திமிர-நிறைய் வெனலுமாம். தேறல்-தேன்.

முகைவிரியும் போது முருகுதார் வேய்ந்து
தகரம் புழுகுமிகத் தடவி-யகிலாவி

யூட்டி யுருவிலியு முள்ளந் தடுமாறக்
கூட்டி முடிக்குங் குழலினாள்-வாட்டரவி

லாயமணிச் சோதி யவிருங் குழையளவிச்
சேயரியி னாடுஞ் செறியமுத-நோய்சற்று

முன்னுதவி யத்துயர மூழ்கா துயமருந்து
துன்னுதவு கின்ற துணைவிழியா-ளின்மதுர

250 தண்ணம் பசுந்தேன் றவழு மரக்காம்பல்
வண்ணஞ் சிவந்ததுவர் வாயினாள்-வெண்ணிலவின்

பத்தி விரியப் பரந்தமக ராலயத்தின்
முத்தினிரை யொத்த முறுவலாள்-துத்தியுறு

பைநாகத் துச்சி பதிய வருவியுகு
மைநாக வெற்பு மறிகடலின்-மெய்நாகங்

---

246 போது-அரும்பு. (நெகிழ்வுற்ற நிலையிலுளது.) முருகு-மணம். வேய்ந்து-சூடி. தகரம்-மயிர்ச்சாந்து. ஆவி-புகை.

247 உருவிலி-மன்மதன் (அநங்கன்). உள்ளம்-மனம். தடுமாறல்-நிலைகுலைதல். கூட்டி-வாரி (சீவி).

248 மணிசோதி-மாணிக்கச்சோதி. குழை-காதணி. அளவி-கலந்து. சேயரி-செம்மையான இரேகை. நோய்-பிணி.

249 "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" எனுங்குறட் கருத்தேயாம். துணை-இரட்டை.

250 தவழும்-ஒழுகும். துவர்வாய்-பவள இதழ்.

251 பத்தி-வரிசை. நிரை-வரிசை. முறுவல்-பல், நகையுமாம். துத்தி-படப்பொறி (புள்ளி).

252 பைநாகம்-படத்தினையுடைய ஆதிசேடன். உச்சி பதிய-தலையானது குழிவு அடைய. உகுதல்-சொரிதல். மைநாகம் வெற்பு-மைநாக பர்வதம், இது, பறக்குமலையாம். மறிதல்-மடங்குதல். மெய்-உரு. (வடிவு)

மலையடிகள் நூல்

காணாத வண்ணங் கரந்து புரந்தரனார்
சேணாடு புக்க திறங்கேட்டு-நாணமுற
வின்னலாய்த் தன்றலையை யெட்டியெட்டிப் பார்ப்
[பதுபோற்
றுன்னியடிக் கொண்ட துணைமுலையாள்-பொன்னின்
255 மலரடிக்கு நூபுரமும் வண்ணக் குழைக்கு
விலையில்மணிக் குண்டலமு மென்கைக்-கிலகும்
புரிவளையு மோகிக்கும் போதும் புனைதற்
குரிய தெனவே யுணர்வாள்-விரதியரிற்
கொக்கோக னாரினிது கூறுமத னூன்முழுது
மிக்கோதி னற்பயிற்ற மேவுவா-ளக்குவளைத்
தண்டாரும் புண்டரிகத் தாருங் கழுநீரில்
வண்டாரும் வேறு வகுத்தறிவாள்-விண்டு
நகையவிருந் தாரகையாய் நாடாம னாக
முகையை முகையாய் மொழிவாள்-திகழும்

---

253 புரந்தரனார்-இந்திரன். சேணாடு-விண்ணுலகு. திறம்-நிலை (தன்மை). நாணம்-வெட்கம். இக்கண்ணியில் இந்திரன் சிறகரிந்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

254 ஆய்-ஆகி. எட்டிஎட்டி-அடுக்குமொழி. துன்னி-நெருங்கி. அடிக்கொண்ட-அடிபரந்த. துணை-இரட்டை. "எட்டிப் பார்ப்பவென வெழுந்த இளமுலைகள்'' எனக்கூறுவர் பிரபுலிங்கலீலையாசிரியர்.

255 மணிக்குண்டலம்-மாணிக்கக்காதணி.

256 புரிவளை-முறுக்கினையுடைய வளையல்கள். மோகித்தல்-காமுறல்,(மயங்குதல்.) புனைதற்கு-அலங்கரித்து கோடற்கு. விரதியர்-முனிவர் (விரதவொழுக்கினர் என்பது பொருளாம்).

257 கொக்கோகன்-ஒரு முனிவர். இவர் செய்தது கொக்கோகம் என்னும் பெரிய இன்பநூலாம். பயிறல்-பழகல்.

258 கழுநீர்-செங்கழுநீர்ப்பூ. வகுத்து-ஆராய்ந்து.

259 தாரகை-நட்சத்திரம். நாகம்-புன்னைமரம். முகை-அரும்பு ஐ-உருபு.

கனவெயிலாற் செய்ய கமல மதனை
வனச மெனவே மதிப்பாள்-பனியளக
மஞ்சு தவழ்தவன மாடத்தின் மீதிவர்ந்த
விஞ்சசையர்வா னத்தார் வியப்பக்-கஞ்சக்
கரமலரிற் பைம்பொற் கழங்கேந்தி மானேந்
தொருவன் மறைக்கண்ட மொன்றுந்-திருமால்
புவியிடந்துங் காணாத பொற்றா ளிரண்டு
மவிர்மதியுந் தீயு மரியுங்-கவினி
லொளிரும் விழிக ளொருமூன்றுந் திவ்ய
நளின மனையகர நான்கும்-வளர்தவளப்
பெற்ற முவந்த பெருமான் றிரிபதகை
யுற்ற சடில்முடி யோரைந்து-மெற்றுதிரை

---

260 கனவெயிலால் உண்டாகிய சாலையினை அன்றி, சூரிய னொளியால் மலர்ந்த செந்தாமரையினை. எனக் கோடலு மொன்றும். சிவந்த நீரினைத் தாமரை மலர் என்று கருது வாள் என்பதாம். அளகம்-கூந்தல்

261 கழங்கேந்தி என்பது 269வது காமர் கழங்காடும் காலத் தில் என்னுங் கண்ணியில் முடிதலைக்காண்க. தவனம்-ஆசை. (தவளமாயின் வெண்மையாம்). கஞ்சம்-தாமரை.

262 பொற்கழங்கு-பொன்னாலாகிய அம்மானை. ஏந்தி-எடுத் துக்கொண்டு. மான் ஏந்து ஒருவன்-கடவூர்ப்பரமன். (மான் கரத்தன் என்பது பொருள்.) மறைக்கண்டம்-நஞ்சினை மறைத்த கண்டம். (கண்டம்-கழுத்து).

263 இடந்து-தோண்டி. தாள்-அடிகள். அரி-மான். கவின்-வனப்பு.

264 திவ்யம், என்பது திவ்வியம் திப்பியம் என மருவிவரும். திவ்யம்-உயர்வு. நளினம்-தாமரை.

265 பெற்றம்-இடபம். "பெற்றமூர்ந்த பிரமாபுரமேவிய பெம்மான்" என்பது தமிழ்மறையாம். ஓரைந்து முடி-ஈசா னம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் எனும் பெயரிய முகங்களையுடைய திருமுடியிற்சூடும் ஐ வகை முடிகள். எற்றுதல்-வீசுதல். சடிலம்-சடை.

யோதுங் கடலால முன்னுகர்வோன் சைவத்
தோதுஞ் சமயவித மோராறும்-கீதமொழி

தும்புரு நாரதருஞ் சொற்சுவையா கப்பாட
வெம்பெருமான் கேட்கு மிசையேழுங்-கொம்பில்

மருவு குயில்போல மதுரப் பசுந்தேன்
பருகு மரிபோலப் பாடி-யருகுதொறு

மேமந் தைவீச விசைந்த மணியவிரக்
காமர் கழங்காடுங் காலத்திற்-சோமக்

270 கலையமுத மூரக் கவின்கொண்ட வேணித்
தலைவன் கனகநிறத் தாமன்-குலவும்

பருவப் புயல்வண்ணன் பண்டுபார் கீண்டு
துருவக் கரந்தபதத் தோன்றல்-பெரிய

வரைகளினில் மேம்பட்ட மாதங்க வெற்பி
னிரைபுரையு மெண்டோள் நிமலன்-கரதல

---

266 சிவசம்பந்தம்-சைவம். சமயவிதம் ஓராறு-சைவம், வாமம் பாசுபதம், காளாமுகம், காணுபத்தியம், கௌமாரம் என்பனவாம். கீதம்-இசை.

267 இசைஏழு-ஏழு இசைகள். அவைகட்கு, கைக்கிளை, துத்தம், விளரி, முதலியவாகப் பெயர்களுண்டு. ஏழிசையாய்-ஏழிசைச், சூழல் எ.வ வருதலையாய்க.

268 மதுரம்-இனிமை. பசுந்தேன்-செந்தேன். அரி-வண்டு.

269 ஏமம்-பொன். இசைந்த-பதிக்கப் பெற்ற (அழுத்தின) காமர்—அழகு. சோமன்—சந்திரன்

270 ஊர-நிறைய. (ஏற.) வேணித்தலைவன்-சிவபெருமான். கனகநிறத்தாமன்-பொன்னார்மேனியன், தாமம்-உடல்.

271 புயல்-மேகம். பண்டு-முன்னோர்காலம். துருவுதல்-தேடுதல்.

272 மாதங்கம் வெற்பு-மேருகிரி. வரை-மலை. புரையும்-ஒக்கும். எண்டோள்-எட்டுக்கரம். (தோள்) "எண்டோள் வீசியாடும் ஈசன்" என்பது திருப்பாட்டு. "எட்டுடையான் புயம்" என்பது கோவையார்.

மந்தா மரையி லயன்சிரமொன் றேந்தினோன்
றந்தா வளத்தின் சருமத்தா-னெந்தாயென்
றேத்துவார் தங்கட் கிறவா வரம்புரப்போ
னீற்றணியால் வெவ்வினையை நீக்குவோ-னாற்றக்
கருணைபொழி முக்கட் கடவூரி னாத
னருண நிறவண்ணத் தண்ண-லொருமுனிவ
னெக்காலு மீரெண் பிராயத் தினிதிருக்க
வக்கால னைச்செற்ற வங்கணன்-மிக்கான
மங்குற் குலந்தவழு மாட மணிமறுகிற்
றுங்கத் திருத்தேர்மேற் றோன்றுதலுந்-தங்கச்
சிலையானை நோக்கினாள் சென்றாள்கும் பிட்டாள்
தலையால் வணங்கினாள் சற்றே-யுலையின்
மெழுகா யுருகினாள் வேலா வலயத்
தெழுஞா யிறுபோன் றிலகி-யழகுதரு

---

273 கரதலம்அம் தாமரையில்-தாமரைப்பூப்போன்ற. திருக்கரத்தின் கண். அயன்-பிரமன். தந்தாவளம்-யானை. சருமம்-தோல். எந்தாய் என்பது-எந்தையென்பதன் விளி.

274 இறவாவரம்-சிரஞ்சீவி வரம். இது இவ்வூர்ப் பரமற்கியற்கையாம். புரப்போன்-கொடுப்போன். நீற்றுஅணி-விபூதிக்காப்பு. "வெவ்வினை தீர்ப்பது நீறு" என்பதனை எண்ணுக. ஆற்ற-மிக.

275 அருணம்-செவப்பு. ஒரு முனிவன்-மார்க்கண்டேயர்.

276 எக்காலுமீரெண் பிராயம்-எக்காலத்திலும் ஓரே பெற்றியாய், 16வயதுடன் இருப்பது. இது, சிவபரம் பொருளுக்கியற்கையென்பர். என்றும், பதினாறாய்ச் சிரஞ்சீவியாய் இருஎன்பதுலகப்பெரியார் ஆசி. அக்காலன்-அந்தவியமன்.

277 மங்குல் குலம்-மேகக்கூட்டம். துங்கம்-உயர்வு, தூய்மையுமாம். பரவல் எனவும் பொருளுண்டு.

278 சிலை-வில். உலை-ஊதும்உலை. (தீச்சுவாலையுடையது)

279 மெழுகு-அரக்கு. உருகினாள்-இளகினாள். வேலாவலயம்-கடல். எழுஞாயிறு-உதயகாலசூரியன்.

வண்ணத் திருவுருவி லோர்பான் மகிழ்ந்துறையும்
பெண்ணையிவ ளாரென்று பேசினு-ளொண்ணுதலே

மாதவரிற் பிங்கிருடி மாதேவ னைவலஞ்செய்
போதிற் றனையகற்றும் புன்மையாற்-சோதி

பனிவரையிற் செல்வி பலகாற் பரவி
யினிய தவமியற்ற வெங்கோன்—புனிதமா

மாகத்திற் பாதி யளித்தா னதனுலிப்
பாகத்தி லுற்ருளிப் பாவையெனத்-தோகைக்குத்

தாய ருரைப்பச் சகமெங்குந் தானுக
மேய தவள விடைத்துவச-னேய

வெழின்முழுது நோக்கி யிரங்கி விரகத்
தழல்கவரும் மாதர் தமைப்போல்—விழிகவரப்

பெண்ணணங்கு நிற்பப் பிறைசூடுங் கோடீரத்
தண்ணலோர் வீதி யணுகினு—ருண்ணெகிழப்

280 பெண்ணை-உமாதேவியாரை. இவளாரென்று பேசினுள். ஈண்டு குறிப்புக்கருதத்தக்கது. ஒண்ணுதல்-அன்மொழித் தொகைப்பெயர்

281 பிங்கிருடி-பிருங்கிமுனிவர். இதுமரூஉ. இடைக்குறையுமாம். வலம்செய்போதில்-வலமாகவந்த காலத்தில். புன்மை-தாழ்வு. சோதி-சிவபெருமான்.

282 பனிவரையிற் செல்வி-அபிராமியம்மை.(பார்வதி) இனிய தவம்-செயற்கரியநோன்பு.

283 ஆகம்-சரீரம், இப்பாகம்-இந்தஇடப்பக்கம். பாவை-உமையம்மை(உவமையாகுபெயர்.) தோகைக்கு-பெதும்பைப்பருவப்பெண்ணுக்கு.

284 தாயர்-செவிலித்தாயர். உரைப்ப-கூற. சகமெங்கும் தானுக மேய தவள விடைத்துவசன் என்றும் இயைத்துப் பொருள் கொள்ளலாம்.

285 விரகதழல்-காமாக்கினி. கவர-பற்ற.

286 பெண்ணணங்கு-பெதும்மையாள். (அணங்கு-இலக்குமி) பிறைசூடும் கோடீரத்தண்ணல்-சந்திரசேகரன். உள்நெகிழ-மனமுடைய. கோடீரம்-சடை.

பூங்குழன் மாதுதாய் புண்டரி கக்கரத்தாற்
றூங்கி யணைப்பத் தணந்திட்டா-ளாங்கொருத்தி

## மங்கை

மங்கைப் பருவ மடமாது மாரவேள்
பங்கப் படவளரும் பாலெகினம்-வெங்கனலிற்
பெய்யாத சொன்னம் பிரச மணிபரப்பக்
கொய்யா தவிருங் கொழுங்கமலம்-வெய்ய
புருவச் சிலையைப் புருடர்த முள்ள
முருவத் தனிக்கோட்டு மோவந்-துருவிச்
சிறுகாலிங் காராத தேறல் குயிற்றுக்
குறைவு படாத்தரளக் கோதை-நறியவகி
லூட்டித் தகர மொழுகும் புரிகுழலார்
தீட்டிப் பரிமளிக்குஞ் சிந்தூரம்-வாட்டமிகப்
பெற்றுவிர கத்தா விளைஞர் பெருங்காத
லூற்றமக ராலயத்துக் கோர்மிதவை-யற்று

---

மங்கை

287 பூங்குழல்மாது-பூவினைத்தரித்த கூந்தலினையுடையபெதும்பைப்பெண்ணினை. தணந்திட்டாள்-பிரிந்தாள். மங்கை-பதின்மூன்று வயதுப்பெண். மாரவேள்-மாரனாகிய வேள். பங்கப்படல்-தாழ்வுறல், பால்எகினம்.

288 வெண்ணிற வன்னம். கனல்-தீ. (நெருப்பு)

289 பெய்யாத-போட்டு எடாத. சொன்னம்-பொன். பிரசம்-தேன். கொய்யாது-கிள்ளாது (தரிக்காது)

290 புருவச்சிலை-புருவமாகிய வில், புருடர்-ஆடவர், உருவ-ஊடுருவ(துளைப்ப.) கோட்டும்-வளைக்கும், ஓவம்-ஓவியம்.

291 குயிற்றல்-கோத்தல், (கோவாமுத்தம் என்பது-ஆய்க.) குறைவுபடாத-ஒளிகுன்றாத.

292 தீட்டி-இட்டு. பரிமளிக்கும்-கமழும். சிந்தூரம்-பொட்டு. (செம்பொட்டு.) வாட்டம்-வாடுதல். மகளிர் திலகம், என்பது நோக்குக.

293 மிதவை-மிதப்பது (தெப்பம்) அற்று-உலகப்பற்று நீங்கி.

விரிந்த கரண மிகப்புனித மாக்கு
மருந்தவரை வாட்டு மணங்கு-பரந்துவரி
வண்டாடும் புண்டரிக மாதும் புலோமிசையுங்
கொண்டாட வந்த குலக்கோதை-கண்டுவக்கு

நாவியுஞ் சாந்தும் வருடி நவிலுமளி
லாவியும் நீவி யளிதவழுங்-காவியொடு

சாதி யிணருந் தமனகமுஞ் சண்பகத்தின்
போது மணியும் புரிகுழலாள்-மாதேவன்

கொந்தார் சடையிற் குலவும் பிறைபோன்று
சிந்தூரந் தீட்டுந் திருநுதலாள்-வந்தனைசெய்

யங்கண் மகேச னடியா விடையாவெண்
டிங்கள் புரையுந் திருமுகத்தாள்-பொங்கியொளி

விண்டலரு மம்பொன் மிகுந்த மணிமகர
குண்டலங்கொள் வண்ணக் குழையினாள்-மண்டமர் [செய்

தன்றுவரு மந்தகனை யண்ணல் வெகுண்டதுபோ
லின்று முனியு மிணைவிழியாள்-மின்றவழும்

---

294 விரிந்த-பொறிவழியாகப்பொருளிற் போய் விரிந்த. கரணம்-அகக்கரணம், புறக்கரணம். புனிதம்-தூய்மை அருந்தவர்-செயற்கருந் தவமுடைய முனிவரர். வாட்டும்-வருத்தும்.

295 புலோமிசை-இந்திராணி.

296 சாந்து-சந்தனம். வருடல்-தடவல். நாவி-கத்தூரி அளி-வண்டு. காவி-நீலோற்பலம்.

297 இணர்-கொத்து. தமனகம்-மருக்கொழுந்து.

298 வந்தனை-வழிபாடு.

299 அம்கண்-அருட்கண். இடையா-வருத்தப்படாத (தேய்ப் புண்ணாத) புரையும்-ஒக்கும். ஒளிபொங்கி-ஒளிமிகுந்து.

300 மணிமகர குண்டலம்-ஒருவகைக்காதணி. மண்டுதல்-நெருங்குதல்.

301 அந்தகன்-இயமன். முனிதல்-கோபித்தல்.

வித்துரும மொன்றை மிகுந்த பதப்படுத்திப்
புத்தமுத முள்ளே பொலிவித்தா-லொத்திலகு

மையல்வரு வித்து மதனை மலரம்பா
லெய்யவரு விக்கு மிதழினாள்-துய்யகதிர்

முத்துந் தளவின் முகையுநறு மாதுளையின்
வித்து மெனத்திகழும் வெண்ணகையாள்-சித்தமிகப்

பண்புகலும் வண்டு பயில முகைவிரியும்
வண்குமு தந்திகழும் வாயினாள்-தண்பணையின்

வண்ணஞ் சிறந்த வனப்புடைய தோளினா
ளெண்ணங் கவர விறுமாந்து-சுண்ணம்

புனைந்து மதர்த்துப் பொருகரிக்கோ டொத்துச்
சினங்குலவி முத்தந் திகழ—வனைந்தாங்

கருந்தவர்க்கு மாலாக்கி யவ்வேள் சலாமிட்
டிரங்கவளர் கொங்கை யிணையாள்-பரந்து

---

302 வித்துருமம்-பவளம் பதப்படுத்தல்-பக்குவப்படுத்தல். புத்தமுதம்-புதியவமிர்தம. பொலிதல்-விளங்கல்.

303 மையல்-மயக்கம். மதனை-மன்மதனை. இதழ்-அதரம்,உதடு.

304 தளவு-முல்லை. மாதுளையின்வித்து-மாதுளை விதை.

305 பண்புகலும்-இசை இசைக்கும். பயில-நெருங்க. குமுதம்-அல்லி. பணை-மூங்கில்.

306 எண்ணம்-எண்ணுதல். இறுமாந்து-செருக்குற்று. சுண்ணம்-நறுமணப்பொடி.

307 மதர்த்து-பெருத்து, செழித்து. கரிக்கோடு-யானைத்தந்தம், (கொம்பு) சினம்-கோபம். வனைந்து-தரித்து,

308 மால் ஆக்கி-காமமயக்கத்தினையுண்டுபண்ணி. வேள்-மன்மதன். சலாம்-வந்தனை. "சலாமிடற்கேக்கறு முத்துக்குமாரனை" என்பது குமரகுருபரர் திருவாக்கு. இது இந்திமொழியென்பர். இரங்கல்-வேண்டியிரங்கல், இரக்கங்கொள நிற்றல்.

நிலவுந் தியபவள நேர்சடையா னங்கை
யிலகுந் துடிநே ரிடையாள்-குலவு
மணியிலகி யோங்குமோர் வண்ணமே டைக்கு
ளணியிழையார் தம்மோ டணுகிப்-பணியுலகின்
மன்னன் சிரத்தின் மணியு மரிகரத்தின்
மின்னும் வளையீன்ற வெண்மணியுந்-துன்னுந்
திகையரவச் செம்மணியுந் திக்கெட்டு மேவும்
புகர்முகத்தின் கோடுட் பிறக்கும்-நகைமணியும்
விண்டு நிலவும் விரவிக் கலந்தெறிப்பப்
புண்ட ரிகக்கரத்திற் பொற்பந்துங்-கொண்டு
தகரந்தோய் கூந்தற் சரியப் பிறையே
நிகர்நுதலின் முத்த நிரம்ப-விகலின்
மருங்கு லொசிந்து வணங்க வுரங்கொள்
குரும்பை யசைந்து குலுங்க-விரிந்த
பொலங்கட கங்கள் புலம்ப விலங்குஞ்
சிலம்புக ளென்றுஞ் சிலம்ப-வலைந்து

---

309 நிலவுந்திய பவளநேர் சடையான்-நிலாவீசும்பவளத்தினை யொக்குஞ் சடையுடையானாகிய சிவபெருமான். துடி-உடுக்கை (இடமருகம்) குலவுதல் விளங்கல்.

310 ஓங்கும்-உயரும். அணுகல்-நெருங்கல். பணி-பாம்பு.

311 மன்னன்-நாகராசன் (ஆதிசேடன்) அரிகரம்-திருமால் திருக்கை (வயிணவமரபு.) வளை-பாஞ்சசன்யம். வெண் மணி-முத்து.

312 திகையரவம்-அட்டமா நாகங்கள். புகர்முகம்-புள்ளிமுகத்தினையுடைய களிறு. நகைமணி-ஒளியினையுடையமுத்து.

313 விரவிக்கலந்து-ஒன்றுபட்டு.

314 சரிதல்-தாழ்தல். முத்தம்-வியர்வைமுத்தம்.

315 ஒசிதல்-துவளல். (ஒடிதல்) உரம்-மார்பு. குரும்பை-கொங்கை. (ஆகுபெயர்) சிலம்பு-காலணி, (சிலம்பு-ஒலி.)

316 பொலங்கடகம்-பொன் வளையல்கள். புலம்ப-ஒலிப்ப. அலைந்து-அசைந்து.

வருங்கயல் முன்ன மருண்டு முனிந்து
பொருங்குழை சென்று பொருந்த-விரும்பிய
செந்தா மரைக்கை சிவப்பத் திருவன்னாள்
பந்தாடப் பூவையர்கள் பார்த்துவியந்-திந்தப்
புவியி லுனைப்போற்ற பூவையர் தாமில்லை
யெவருமறி யாருன்போ லீண்டு-நவரத்ன
கந்துக மாடக் கனங்குழா யுன்னருமை
யந்தி நிறத்தண்ண லன்றியே-யிந்த
மதியா லறிவதற்கு வல்லமோ வென்று
துதியா லரிவையர்கள் சொல்லக்-கதுமெனவே
பொன்னவிரும் வண்ணப் புளகமுலைச் செங்கட்
கன்னி மனங்களிக்குங் காலத்திற்-றுன்னும்
பிறையமுத நுண்டிவலை பில்க வதனைக்
கறையரவ முண்டு களிக்குஞ்-செறிபவள
வேணியான் பொற்கிரியை மேனாட் டனுவாக்கும்
பாணியான் மாதுகந்த பாகத்தான்-றாணிற்

---

317 மருண்டு-மயங்கி. பொரும்-மோதும்,

318 திருவன்னாள்-திருமகள் போன்றவளாகிய மங்கைப்பருவத்தாள். பூவையர்கள்-மகளிர்கள்,

320 கந்துகம்-பந்து. அந்திநிறம்-செவ்வானத்தின்நிறம். அந்தி-அந்தத்தினையுடையது. அந்தி-காலையந்தி மாலையந்தி யென விருவகைய. அண்ணல்-சிவபெருமான்.

321 மதி-அறிவு. வல்லமோ-வன்மையுடையேமா? துதி-தோத்திரம். அரிவையர்-மகளிர்கள். கதுமென-விரைவாக, (விரைவுக்குறிப்பு.)

322 பொன்-பொன்னிறம்போன்ற பசப்பு. மனக்களிப்பு-மனமகிழ்ச்சி. காலத்தில்-சமயத்தில்.

323 இக்கண்ணி ஒருவகையான வியப்புடையது. பிறைதுளிக்கும் அமுதினை நஞ்சினையுடைய பாம்பு உண்டு களிக்கும் என வருணிப்பதால்.

324 வேணி-சடை. தனு-வில். பாணி-கை. மாது-அம்பிகை

325 பிறந்த சினமடங்கல் பித்தா யுலக
மிறந்து கெடமுனித லெண்ணிப்-பரந்தெண்காற்
புள்ளுருவாய் வந்தட்ட புத்தேள் புவியயின்ற
வெள்விடையின் மீதேறி மேவினான்-றெள்ளமுத
பூரணகும் பத்துப் பொலிந்தோன் கடவூரன்
றேரண வீதிக்கட் டோன்றுதலும்-வாரிலகச்
செங்கேழ் மணிப்பூண் செறியு மிளமுலையாள்
பங்கே ருகக்கரத்திற் பந்திருப்பத்-தொங்கற்
சரிந்து கருங்கொந் தளநெகிழச் சாபம்
பொருந்துநுத லிற்றரளம் பூப்பச்-சுருங்கு
330 மிடைதுவள நூபுரங்க ளேங்க மடவார்
புடைவிரவத் தண்மயிலிற் புக்காள்-சடைய
ரெழின்முழுது நோக்கி யிளவண்டு கிண்டப்
பொழியு மதுமாலை பூத்த-முழவுத்
திரள்புயமுந் தன்முலையும் பார்த்தா டியங்கி
யுருகி மனநெட் டுயிர்த்தா-ளருகிற்

---

325 சினமடங்கல்-நரசிங்கம். பித்து ஆய்-பித்துற்று, முனிதல் எண்ணி-கோபித்தலைக் கருதி.

326 எண்காற்புள்-வீரசிம்புள். (சரபம்) முன்னரும் வந்துளது. அட்ட-கொன்ற. புத்தேள்-ஈசன். புவியயின்றவெள்விடை-பூவுலகினையுண்டருளிய வெள்ளிய திருமாலாகிய இடபம்-

327 தெள்ளமுத பூரணகும்பத்துப் பொலிந்தோன், இவ்வடி உலாத்தலைவனை, நன்கு புலப்படுத்தும். வார்-கச்சு (இரவிக்கை).

328 கேழ்-நிறம். மணிப்பூண்-மாணிக்கத்தாலாகிய ஆபரணம். பங்கேருகம்-தாமரை. தொங்கல்-மாலை.

329 கருங்கொந்தளம்-கருங்கூந்தல். சாபம்-வில். பூப்ப-உண்டாக.

330 ஏங்க-ஒலிப்ப. புடை-பக்கம். மயிலின்-மயில்போல.

331 கிண்ட-கிளர. முழவு-மத்தளம்.

332 திரள் புயம்-திரண்ட தோள். தியங்கி-திகைத்து. அருகு-சமீபம். மனம் உருகி-மனம் இளகி.

சிலதியரு மன்னையருந் தீஞ்சொற் கிளியை
யலமரலென் ருகத் தணைத்துத்-தலைவனு
மெந்தை பிரானுக் கிதனை யியம்பினர்
முந்துமறை கட்கு முதலாகி-யந்தத்திற்
கண்ணன் கமலத்தோன் கற்பகநாட் டுக்கரசன்
விண்ணமர ரென்பவரை வீட்டியே-மண்முதலா
மைம்பூத முந்துடைக்கு மத்தாவோ வெற்றிதர
வெம்போ தகமுரித்த வித்தகவோ—கொம்பனைய
வெங்கண் மடமாதுக் கித்துயர மீங்களித்தீர்
மங்கை யரைவெறுக்க வல்லீரோ-பொங்கியவுழி
யோது முடியி லொருமானை வைத்தீர்மெய்ப்
பாதியொருத் திக்கும் பகுந்திட்டீர்-மாதவர்தம்
பன்னியரைக் கற்பழித்தீர் பைந்துழாயெந்தையொரு
மின்னுருவிற் ருருவன மேவியே-யன்னமென

---

333 சிலதியர்--தோழிமார்கள். தீம்-இனிமை. அலமரல்-சுழ ற்சி. ஆகம்-மார்பு. தலைவன்-ஆண்டவன்.

334 இதனை-மங்கையாகிய நங்கையார் அடைந்த நிலையினை. முந்துமறை-பழமையான வேதங்கள். முதல்-காரணன் அல்லது முதல்வன்.

335 அந்தம்-சர்வசங்காரகாலம். கண்ணன்-கரியவனுகிய விட் டுணு. கமலத்தோன்-பிரமன். கற்பகநாட்டுக்கரசன்—இந் திரன். அமரர்-தேவர். வீட்டி—கொன்று.

336 துடைத்தல்-அழித்தல். வெம்போதகம்-கொடிய யானை யசுரன். வித்தகம்-சதுரப்பாடு. (வல்லபம்) கொம்பு-பூங் கொம்பு.

337 எங்கள்-எமது. மடமாது-இளம்பெண். துயரம்-வேதனை. ஈங்கு-உலாக்காணவந்த இந்த இடத்தில். அளித்தல்-கொடு த்தல். வல்லீர்-வன்மையுடையீர். ஓ. வினுப்பொருட்டு.

338 ஒருமானை-கங்கையினை. ஒருத்தி-அம்பிகை. மாதவர். தாருவன முனிவரர்.

339 பன்னியர் அவர்தம் மனைவியர். ஒரு மின்னுரு-ஒப்பற்ற மின்னல் வடிவம்.

340 வெய்தமோ கித்தி ரியற்பகையார் பாரிக்கு
மையலாய் நல்கென்று வந்திரந்தீர்-வெய்ய
சிலைமறையோன் றேவி திருவழகு நோக்கி
யுலையின் மெழுகா யுழன்றீ-ரிலகு
மழுவாள ரேயிவண்மேல் வன்பழியுண் டோவண்
டுழுதா ரிவளுக் குதவிற்-பழுதாமோ
வென்று மடவா ரெடுத்துரைப்ப நல்குவர்போன்
மன்றி லுகந்தோர் மறுகொழிந்தார்-குன்றச்
சிறுகான் மெலவீசிற் றீயொக்குந் திங்கள்
மறுகா மெலிய மருவுஞ்-செறியுந்
345 திரையாழி யோதை செவியிற் றெறுமால்
வரவோல மிட்டு மறுகுற்ற-கரியகுயில்
பூம்பாயல் சற்றும் பொருந்தாது சந்தனமுந்
தேம்பாய்பன் னீரெனக்குத் தீயொக்குங்-கூம்பி
யெழுந்த முலைபசக்கு மென்றிவை யாவு
மொழிந்து பரவசமாய் மோகத்-தழுந்து

340 எய்தல்-அடைதல். மோகித்தல்-மோகங்கொளல். பாரி-மனைவி. மையல்-காம மயக்கம், இரத்தல்-யாசித்தல்.

341 சிலைமறையோன்-வில்லாசிரியனாகிய துரோணன். தேவி-கிருபி. உழன்றீர்-திரிந்தீர்.

342 மழுவாளரே-பரசுபாணியரே. வண்டுழுதல்-வண்டு கிண்டல்.

343 எடுத்துரைப்ப-சிறப்பாகக் கூற. நல்கல்-கொடுத்தல், மன்று-பொன்மன்று(சபை) ஒழிந்தார்-நீங்கினார். குன்றம்-பொதியமலை.

344 மறுகா-மறுகி, மனங்குழம்பி. செறியும்-நெருங்கும்.

345 ஓதை-ஓசை. தெறும்-கொல்லும். ஓலமிட்டு-சத்தமிட்டு, கரியகுயில்-கருங்குயில் போல்வாள்.

346 பூம்பாயல்-பூம்படுக்கை தேம்பாய்பன்னீர்-இனிமைமிக்க பனிநீர்(வாசனைநீர்) கூம்பி-குவிந்து.

347 பசக்கும்-தேமலுறும். பரவசம்-தன்வயமிழத்தல். (பரவயமாதல்) உடல்எங்கும்-சரீரமுழுதும். வெம்பகழி-கொடிய பாணங்களை. உய்த்தான்-பிரயோகித்தான்.

மடமங்கை மீதின் மதவேள் முனிவி
னுடலெங்கு வெம்பகழி யுய்த்தான்-கொடியன்னாள்

### மடந்தை

பின்னு மொருத்தி மடந்தை பெருந்தவத்தோர்க்
கின்ன லிழைக்கின்ற வேந்தெழிலாள்—துன்னும்
புளினக் கரைபாற் புணரிக்கட் டோன்று
நளினத் திருக்குமட நங்கை-தளிரியலா
ளையார் மனமிளக நான்முகத்தோன் பூவுலகில்
கையாற் படைத்த கனிவனிதை-கைபெற்ற
சேணில் வருங்கந் திருவர் தலைசாய்ப்ப
வீணை யிசையினின் மேவுகுயில்-காணுவினை
வென்றிக் கழைவணங்கி மேனா ளரற்பொருதோன்
கன்றிக் கலங்கிக் கரங்கூப்பி-நின்று
பரவிப் பரவிப் பதயுகத்தை யென்பா
லிரதியுரு நீயறிக மென்று-விரகங்
கொளவுதிக்குங் கோதை குலிசன் சரீரம்
புளகந் தரமொழியும் பூவை-அளவற்ற
மையல் பெருக்கு மருந்து புவனத்தி
லெய்த வரிய ரசகுளிகை-யுய்யவரு

---

**மடந்தை**

மடந்தை பத்தொன்பது வயதுடைய பெண். ஒருபருவமுறுபெண் எனலுமாம்.

348 பெருந்தவத்தார்-பெருந்துறவிகள்.

349 புளினம்-மணற்குன்று. புணரி-கடல். இயல்-தன்மை.

351 நைதல்-இளகல், வருந்தல். வனிதை-பெண்.

352 கந்திருவர்-யாழோர். தலைசாய்தல்-தலைநாணல் காணு வினை-நினைக்குந்தொழில்.

353 அரற்பொருதோன்-மன்மதன் கன்றி-இரங்கி. பதயுகம் யுகபதம்-இரண்டுஅடிகள், உரு-அழகு. விரகம்-காமவிரகம்.

355 குலிசன்-இந்திரன்.

356 பெருக்கும்-அதிகப்படுத்தும். இரசகுளிகை-இரசமணி.

மாரமுதம் யாரு மழியாப் பசுந்தேறல்
பேரழகி னான்மிக்க பெண்ணணங்கு—கூரும்
பொதும்ப ரிளங்கோட்டிற் பூவண்டு தண்டேன்
றதும்ப விரியுஞ் சலசம்-பதங்கனார்
காலை யுதிப்பக் கதிர்பரக்குந் தன்மைபோற்
கோல மணிபிழைத்த கோலத்தாற்-சால
வெழில்கொண் டகிலாவி யேய்ந்து தகரம்
புழுகு வருடிப் புதிய—கழுநீருந்
சாதி நறும்போதுஞ் சண்பகமுங் கந்திக்குங்
கோதை புனைந்த குழலினாள்—தாதிலகு
மிந்திர நீலக் கொடிநல் விளைஞர்க
ணைந்துருகப் பார்க்கு நயனத்தாள்-கந்தஞ்
செறிந்த மலர்க்குமுதச் செவ்வாயில் விள்ளா
நறுந்தளவங் காட்டு நகையாள்-பிறங்க
லெனப்பணைத்து விம்மி யிறுகி யிளைஞர்
மனத்தருக்கு மாற்றி மதமாத்-தனைக்கறுவிச்
சாந்தந் திமிர்ந்து தரள வடம்பிறையி
னேந்தி யிளகு மிளமுலையாள்-மாந்தளிரின்

---

357 ஆர்-அருமை. பெண்ணணங்கு-பெண் தெய்வம்.

358 பொதும்பர்-சோலை. இளம்கோடு-இளமையான கொம்பு (கிளை) ததும்பல்-நிறைதல். துளித்தல். சலசம்-தாமரை. பதங்கன்-சூரியன்.

359 உதிப்ப-உதயமாக. கதிர்-கிரணம். கோலம்-அழகு.

360 புதிய கழுநீர்-அன்றலரும் செங்குவளைமலர்.

361 தாது-மகரந்தப்பொடி.

362 இந்திரநீலம்-ஒருவகைக்கல். நயனம்-கண்.

363 நகை-சிரிப்பு. பிறங்கல்-மலை.

364 இறுகி-வலிதாகி. மாற்றி-மாறும்படிச் செய்து. மதமா-யானை. கறுவி-கோபித்து.

365 திமிர்தல்-பூசுதல். தரளவடம்-முத்துமாலை. பிறையின்-பிறைச்சந்திரன்போல.

வண்ண மெனுஞ்சாயன் மாத ரொடுமாங்கு
தண்ணம் புனலாடச் சார்குவாள்—சுண்ணந்

திமிர்ந்து முலைப்பாரஞ் செறிய மருங்குல்
சுமந்து பொருமற் றுவளக்—கமஞ்சூன்

முகிலி னிறங்கனிந்து மூசு மணநா
றகிலின் புகையோ டளாவி-நிகரி

லளகஞ் சரிய வணிநுதலின் முத்தி
னிளகுந் துளிமுலையி னெய்தத்-தளிரடியிற்

செஞ்சிலம்பு கொஞ்சத் திகழ்கிண் கிணியார்ப்ப
வஞ்சிறையின் செங்கா லனமென்ன-வெஞ்சமரில்

வெற்றி மிகும்பகழி வேள்வணங்க மெல்லநடந்
துற்ற தடங்கரையி னூடேறி—முற்றுந்

தனித்தனியே பார்த்தாள் தண்ணங் கயத்துப்
புனற்கமல வண்ணப் பொகுட்டிற்-கனற்குழாம்

வைகு மழகு மதுவுண்டு பண்பாடித்
துய்ய களிவண்டு சூழ்வதுவுஞ்-செய்ய

கழுநீரும் புண்டரிகக் காடும் முருகு
பொழிநீல மும்மாம்பற் போதுங்-குழுமிப்

---

366 சாயல்-மென்மை. தண்ணம்-குளிர்ச்சி:

367 செறிய-நெருங்கலால். கமம்-நிறைவு.

368 மூசுதல்-மொய்த்தல். அளாவல்-கலத்தல்.

369 முத்தின்-முத்தினைப்போல. இளகுந்துளி-வியர்வைத்துளி, வடிந்துவிழுந்துளி. தளிர்-மாந்தளிர்.

370 கொஞ்ச-ஒலிப்ப. திகழ்தல்-விளங்கல். கிண்கிணி-சிறுசதங்கை. வெம்சமர்-கடும்போர்.

371 தடங்கரை-பெரியகரை. ஊடு-மேல். முற்றும்-முழுதும்·

372 கயம்-தடாகம். பொகுடு-காய். கனல்-தீ.

373 மதுஉண்டு-தேனைப்பருகி. சூழ்வது-சுற்றுவது.

374 முருகு-மணம், தேன். ஆம்பல்-அல்லி.

பெருகும் பரிமளமும் பின்னும்பார்த் தெங்கோ
னுருவிற் பொலிந்தசில வுண்டு-கருநீலங்
கண்டத்துக் கொப்பாங் கனக நிறக்கமலந்
துண்டத்துக் கொப்பாகச் சொல்லலாம்-விண்டு
சிவந்தகழு நீர்செங்கைத் தீயெனலா மின்னீ
ருவந்த சடைக்கங்கைக் கொப்பாங்-கவந்தனிற்
றுன்னுந் துகிர்க்கோடல் சுற்றுஞ் சடைக்கிணையா
மென்ன நினைந்திருக்கு மெல்லைக்கண்-பொன்றிகழ
வோங்கும் பதாகை யொளிர்மக வான்சிரத்திற்
றூங்குங் கிரீடந் தனையொத்துப்-பாங்கிற்
சிகர மிலங்கச் செழுந்தமனி யத்தி
னிகரில் கவிகை நிமிரப்-புகரி
லருண னிறப்படா மாதவனக் காலை
யிருளகல வுற்றெழுந்தா லென்ன-நிரையிற்
பதிக்கு முழுமணியின் பத்தியாற் சோதி
யுதிப்ப தெனக்கொடுங்கை யுற்று-மதிப்பரிய
செக்கர் விதிப்பச் செறியு மணியொலிப்ப
விக்கயங்க ளெங்கு மெழில்காட்ட-மிக்க
சகத்தி லதிபாரந் தானென் றுரகன்
றிகைப்ப நடக்கும்பொற் றேரி-னுகைத்துப்

---

375 உரு-வடிவு. பொலிந்த-விளங்குகின்ற. கருநீலம்-கருங்குவளை.

376 துண்டம்-நெற்றி. விண்டு-விரிந்து.

377 உவந்த-மகிழ்ந்த. செம்கை-செவந்த திருக்கரம்.

378 துகிர்-பவளம். துன்னும்-பின்னும். எல்லை-காலம்.

379 பதாகை-கொடி. பாங்கு-பக்கம். சிரம்-தலை.

380 தமனியம்-பொன். கவிகை-குடை. புகர்-குற்றம்.

381 உற்றெழுதல்-பொருந்தித்தோன்றல். ஆதவன்-சூரியன்.

328 முழுமணி-இரத்தினம். கொடுங்கை-தேர்க்கொடுங்கை. மதிப்புஅரிய-மதித்தற்கு முடியாத.

383 செக்கர்-சிவப்பு. விதிப்ப-உண்டாக. கயம்-பெருமை.

384 சகம்-உலகம். (தோன்றிநின்றழிவது) அதிபாரம்-மிக்க சுமை. உகைத்து-செலுத்தி. திகைப்ப-திகைப்புற.

பரந்த முகிலின் பணைமுரச மார்ப்பப்
புரிந்து திருநீறு பூசிக்-கரங்கூப்பி
யன்பர் குழாங்க ளரகரவென் றாலிப்பப்
பொன்புவியில் வானோர் புடைசூழ-வென்புருகி
வண்ணச் சுதையின் வடிவந் தனையெடுப்பக்
கண்ணிறைற் போற்றுங் கடவூரன்-விண்ணிரவி
சீத மதியுந் தவழத் திகழ்மாட
வீதி யிடையே விளங்குதலும்-மாதருமங்
குற்றாள் கரங்குவித்தா ளும்பர் பெருமானே
சற்றே யிரங்கித் தளராயோ-பொற்றோகை
யொக்கு மலைப்பாவைக் கொவ்வேனோ நீர்முடிமேல்
வைக்கு மவட்கென் வடிவுண்டோ-தக்கவர்தம்
பன்னியரைக் கைப்பிடித்தீர் பாதகமும் பாராமன்
முன்னியவர் தம்மை விரும்பீரோ-துன்னும்
விகாரத்தை மாற்றி விரகர்க் கினிய
னகோரத்தை யாற்றி யருளீர்-தகாதுமக்கீ

385 புரிந்து-விரும்பி. பூசி-விதிப்படியணிந்து.

386 அன்பர் குழாம்-அடியவர் கூட்டம். ஆலிப்ப-ஆரவாரஞ் செய்ய.

387 சுதை-வெண்மை. போற்றும்-துதிக்கும்.

388 இரவி-சூரியன். தவழ-ஊர. வீதியிடை-வீதிக்கண். மாதர்-மடந்தை.

389 கரம் குவித்தாள்-கைகூப்பினாள் (கும்பிட்டாள்). உம்பர் பெருமானே-தேவர்தம்தேவே. தளராய்-தளர்வாய். எதிர் மறையுமாம். பொன்தோகை-அழகிய மயில்.

390 நீர்-நீவிர். முடிமேல்வைக்குமவள்-கங்கை. தக்கவர்-கர்ம காண்டிகளாகிய தாருகவனத்து முனிவர்கள்.

391 பன்னியர்-பத்தினிமார்கள். கைபிடித்தீர்-கையினைப்பற்றி னீர். முன்னி-கருதி.

392 விகாரம்-வேறுபாடு. விரகர்க்கினியன்-காமுகர்க்கினியனாகிய காமன். அகோரம்-கொடுமை. (சாந்தம்) தகாது-பொருந்தாது. ஈது-இச்செயல்.

தென்றாள் வெதும்பி யிரங்கினா ணெட்டுயிர்த்து
நின்றாள் மற்றொன்று நினைந்திலா-னன்று
புரப்பான்போ லாயிழைபாற் புன்முறுவல் செய்து
சிரப்பான் மதியுடைய செம்மல்-கரப்பான்போ
395 லம்மருகு நீங்கி யயன்மருகு போதலுற
விம்மா துயருற் றிரங்கினாள்-வெம்முனையிற்
றாக்குமத வேளுஞ் சரீரமுழு தும்பகழி
கோக்கும் படிமுகையைக் கொண்டெய்தா-னேக்கிச்
சிலதியரு மன்னையருஞ் செஞ்சொற் கிளியை
யலமரலென் றாகத் தணைத்தே-யிலகியதம்
மாளிகையி லெய்தி மலர்சேர்மஞ் சத்திருத்தி
மூளுவிர கத்தான் முளைத்தகனன்-மீளப்
புனிதமரு வீசுங்கர்ப் பூரத்தி னோடு
பனிநீ ரளாவிப் படீர-மினிதரைத்துக்
400 கோரோ சனைகுங் குமப்பூ மிகக்கலந்து
வாரார் முலையில் வனைந்திட்டார்-தீராமற்

---

393 வெதும்பி-வெம்மையுற்று. இரங்கினாள்-ஏக்கமுற்றாள். மற்றுஒன்றும்-வேறொன்றும். நினைந்திலான்-நினையாதவனாகி. அன்று-அப்பொழுது.

394 புரப்பான்-காப்பாற்றுபவன். ஆயிழைஎன்பது, அன்மொழித்தொகையாய் மடந்தைப்பருவத்துப் பெண்ணையுணர்த்திற்று. சிரப்பால்-தலையினிடத்து, கரப்பான்-மறைப்பவன்.

395 அயல்-பக்கம், (வேறு) போதலுற-செல்ல. விம்மா-விம்மி, செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். விம்மல்-ஏங்கல். முனை-நுனி, கூர்மை.

396 தாக்கும்-அடிக்கும். கோக்கும்படி-தைக்கும் தன்மை. முகை-அரும்பு.

398 தம்மாளிகை-தமது வீடு. மஞ்சம்-இருக்கை, படுக்கை. முளைத்த-தோன்றின. மீள-திரும்ப.

399 மரு-மணம். கர்ப்பூரம்-பச்சைக்கற்பூரம். படீரம்-சந்தனம்.

400 வார்-கச்சு, (இரவிக்கை.) வனைந்திட்டார்-பூசினார்கள் தீராமல்-விடாமல்.

ருதிற் பொலிந்தவருந் தண்டா மரைமுகத்திற்
சீதப் பனிநீர் தெளித்திட்டா-ரோதத்தின்
வெண்டரளம் பூட்டினார் வீசுமலே யச்சிறுகா
லண்டிவர வூடே யனந்திறந்தார்-வண்டுபுனே
மென்கையா ராலவட்டம் வீசினா ரிவ்வாறு
நன்குடைய மாதர் நலத்தாற்றி-மின்புரையுஞ்
சிற்றிடையாள் யாவையுந் தீர்ந்திட்டாண் மற் [றொருத்தி

## அரிவை

யற்புத மான வணியரிவை-விற்கரவேள்
405 கண்களிக்க வந்த கருவூலங் காமரசம்
பண்களிக்கு மின்சொற் பசுந்தோகை-பெண்க
ளரசு விரக வனன்மூளத் தோன்று
முரசு பணிப்பூ ணுருவம்-வரகமல

---

401 சீதம்-குளிர்ச்சி. ஓதம்-பெருக்கு, கடல்.

402 மலேயம்-மலயம் என்பதன் போலி. அண்டிவர-நெருங்கி வர. வண்டு-வளேயல்.

403 இவ்வாறு-இவ்வகை. நன்கு-நன்மை. நலம்-அழகு. புரைதல்-ஒத்தல். யாவையும்-எவையும்.

## அரிவை

அரிவை-ஐந்தாவது பருவப்பெண், 19வயதிற்குமேல் 25 வயது வரையிலும் உள்ள மகளிரை இப்பருவமாதர் எனக் கொள்வர் புலவர்.

404 அற்புதம் ஆன அணி-ஆச்சரியமுறத்தக்க அழகு. வில்கரம் வேள்-கரும்பாகியவில்லேக் கையின்கண் உள்ள மன்மதன். கருவூலம்-சரக்கறை. (பண்டசாலே.)

405 காமரசம்-இன்பச்சுவை. பண்கள் இக்கும்-இசைப் பாட்டுக்களேயும் கரும்பினிரசத்தையும், (வென்ற), இன்சொல்-இனிமையினேப்பயக்கும் மொழி (இனிமையாகியசொல்). பசுந்தோகை-பச்சைமயில். இது, ஆகுபெயராய்ப் பெண்ணேயுணர்த்திற்று.

406 பெண்கள் அரசு-மங்கையர்க்கரசு. விரகம் அனல்-காமாக்கினி. மூளல்-மிகுதல். உரசு-மார்பு. பணி-ப்ாம்பு. பூண்-மணி (நாகரத்தினம்). வரம்-உயர்வு, மேல். கமலம்மின்-செந்தாமரையிலிருக்கும் இலக்குமி.

மின்னுக் கிடந்திலக மின்னோர்க்கு மேம்பட்ட
வன்னப் பெடைநிகரு மாரணங்கு-துன்னரிய
நற்றவர்தாம் பேரின்ப நாடாமற் சிற்றின்ப
முற்றுருவ மாட்டு மொருகோதை-கற்றவர்கள்
பன்னு மதநூல் பகுத்தறியும் பைங்கிள்ளை
யின்னமுத மூற்று மிசைவண்டு-பொன்னவிருங்
காந்தியெனத் தன்மேனி காட்டிக் கலைதேறு
மாந்தருக்கு மால்பூட்டு மாமாது-பூந்தவிசிற்
பாவைக்கு மேலாமிப் பாவை யெனக்கரியோன்
மேவக் கனிந்ததோர் மின்னிடையாள்-காவின்
மணநாறுங் கூந்தன் மடவார்தற் சூழ
விணையாது மின்றி யிலகும்-பணியொளிர

---

407 அணங்கு-தெய்வம், ஈண்டுத் தெய்வ மகளிரையொப்பா ளென்பது பொருள். துன்ன அரிய-நெருங்கற்கு அருமை யாகிய.

408 நல்தவர்-(நற்றவர்) நன்மையினையே நாடிச்செய்யும் தவ ஒழுக்கமுடைய பெருந்துறவிகள். பெருமை இன்பம்-பேரின்பம், சிறுமை இன்பம்-சிற்றின்பம், (சின்னீரவின்பம்) என இதனைப்புகல்வர். குமரகுருபர அடிகள். உற்று-பேரின்பத்தினை வெறுத்து சிற்றின்பத்தினையே பேரின்பமாய் பொருந்தி. மாட்டும்-சிக்கவைக்கும்.

409 மதநூல்-கொக்கோகம். பைங்கிள்ளை-பச்சைக்கிளி. கொஞ்சிக்கொஞ்சிப்பேசலால் இதனைப் பெண்களுக்கு உவமிப் பார் புலவர். இன்னமுது-செவியமுதாம் ஓசை. இசை-பண் ஊற்றும்-சொரியும். அவிர்தல்-விளங்கல்.

410 காந்தி-ஒளி. கலைதேறும்-நூல்களை நுனித்தறிந்து தெளியும் மாந்தர்-புலவர். உம்மை-சிறப்பும்மை. பூந்தவிசு-பூவாகிய ஆசனம்.

411 பாவை-இலக்குமி. கரியோன்-கரிய நிறமுடைய திருமால் மேவ-விரும்ப. கனிந்த-எல்லாவியல்களும் முற்றிய. கா-பொழில்.

412 மணம்நாறும்கூந்தன் மடவார்-இயற்கைமணம் செயற்கை மணமாகியவிருவகை மணமும் வாய்ந்த கூந்தலையுமுடைய பெண்கள். தன்சூழ-தன்னைச்சுற்றிவர. இணை-ஒப்பு. பணி ஒளிர-ஆபரணங்கள் ஒளியினை வீச.

வாடகத்தி ஞற்செய் தரவின் மணிபதித்த
மேடை யதனில் வியந்தேறி-யோடை

புணையுங்காற் கமலப் பொன்னிகரு மின்ன
ரினிதி னிசைவீணை யேந்தி-மனமுருக

வெண்ணுன் கிராகத் தியல்பு தவருமற்
பண்ணுர் குயிலினம்போற் பாட்டிசைப்ப-வுண்
[மகிழ்ந்து

பாடும் விறலியர்க்குப் பைம்பொற் பசும்பூணு
மேடகமு மாமணியு மீந்திட்டுக்-கூடு

புளகமுலைப் பாங்கியர்கள் போற்ற வுறையு
மளவி றிசை யெட்டு மதிரத்-துளிமுகிலி

ஞைந்து முரசந் துவைப்ப வருந்தவத்தோர்
நைந்துருகி யன்பா னனிபரவ-வந்தகனைக்

கன்றி யெழுந்து கழற்ருள் கொடுசாடி
யென்றும் பதிஞ றெனுமாய்-என்றுதவி

413 ஆடகம்-ஒருவகைப்பொன். அரவின்மணி-நாகரத்தினம். பதித்த-அழுத்திய. மேடை-இருக்கை. ஓடை-தடாகம்.

415 கால்-நாளம் தண்டு, இசை வீணை-யாழ்.

415 எண்ணுன்கு இராகம்-முப்பத்திரண்டுவகைப் பண். இயல்பு-இலக்கணம். குயில்இனம்-குயிற்கூட்டம். உள்மகிழ்ந்து-மனமகிழ்வுற்று.

416 விறலியர்-பாடினி (பாண்மகள்). ஏடகம்-புடவை. ஈந்திடல்-வாரிவழங்கல்.

417 பாங்கியர்-சேடியர். உறையும் அளவில்-தங்கியபோழ்தின்கண். திசை எட்டு-எட்டுத் திசைகள். துளிமுகில்-மழைபொழிகின்ற மேகங்கள்.

418 ஐந்து முரசம்-ஐவகை வாத்தியங்கள். துவைப்ப-ஒலிப்ப. அருந்தவத்தோர்-சரியையாதிகளில் நிற்பவர். நனிபரவல்-மிகுதியும் போற்றுதல். அந்தகன்-காலன்.

419 420. ஆகிய இவ்விரு கண்ணிகளிலும் காலனைச்சங்காரஞ் செய்தமை புலப்படா நிற்கும். உதவி-வரந்தந்து.

யம்மா தவனை யளிக்குந் திருக்கடவூ
ரெம்மான் மணிமறுகி லெய்திடலு-மிம்மாது

பதயுகத்தில் ரத்ன பரிபுரங்க ளார்ப்ப
மதிநுதலின் வெண்டரள மல்கக்-கதுவச்

செங்கட் கயல்பிறழச் சிற்றிடையார் தள்ளாட
வங்கட் பெருமா னயன்மேவித்-திங்கட்

பிறையமுதங் கான்று பெருகு முடியு
மறிகுலவுந் தண்டா மரையுஞ்-சிறியமின்னு

மகிழ்ந்துறையு மோர்பங்கும் வானோ ரெவரும்
புகழ்ந்துபர வுஞ்சரணப் போது-மிகுந்த

கண்ணு மனமுங் களிப்பத் தனைநோக்கித்
தண்ணங் கமலப்பொற் றாள்பணிந்தாள்-வண்ணங்

---

420 அம்மாதவன்-அந்த மார்க்கண்டேயன். அளிக்கும்-காக்கும். எம்மான்-எமது பரமகாருணிகரான ஆண்டவனார். இம்மாது-இந்த அரிவைப்பருவமுறு நங்கையானவள்.

421 இரத்தின பரிபுரம்-மாணிக்கங்களை உள்ளீடாகப்போடப்பட்ட சிலம்பெனுமணிகலன். ஆர்ப்ப-ஒலிப்ப. மதிநுதல்-சந்திரனைப்போலு நெற்றி. வெண்டரளம் மல்க-வெண்மையாகிய முத்துப்போலும் வியர்வைத்துளிகள் நிறைய. கதுவ-பற்ற.

422 பிறழல்-கீழ்மேலாகச் சுழலல். சிறுஇடை-சிற்றிடை. அம்கண்பெருமான்-அழகிய கண்ணோட்டமுடைய சிவபெருமான். அயல்-பக்கம். மேவி-விரும்பியடைந்து.

423 கான்று-கக்கி. மறி-மான். குலவும்-உலாவப்பெறும். தண்தாமரை-குளிர்ச்சியுள்ள தாமரையினைப்போலுங் கைகள். மின்-மின்னல் போன்ற அன்னையராகிய அம்பிகையார்.

424 ஓர்பங்கு-ஓர்பாதி. சரணப்போது-திருவடிமலர். மிகுந்த-அவ்வாண்டவனுடைய அவயவத்தழகில் ஆசை மிகுந்த.

425 தனைநோக்கி-சிவபெருமானைப்பார்த்து. வண்ணம்-அழகு.

கூரு மொருபாற் குலாவு மவளன்றிப்
பாரின் மடவாரைப் பாரீரோ ?—சீருரையை

கல்லா லுவந்த கனவிரதம் போமென்றோ
நல்லார் முகம்பார்க்க நாணுற்றீ—ரில்லார்

தாவென் றிரக்கநீர் தாவென்றோ வானுடர்
கோவென் றிவ் வீதி குறுகினீர்-பாவையரை

வேண்டா தவர்போல் விழிகளுற் றும்பாரீ
ராண்டா ரெனும்பேர்க் கழிவன்றோ—வீண்டாளைக்

கொண்டசுகர் போற்றுங் குருவாகி னோமென்றோ
வொண்டொடியார் காத லொழிந்திட்டீர்—பண்டு

குன்றத் தனுவைக் குனிக்கும் புயக்குவட்டிற்
கொன்றைத் தொடையுதவ மாட்டீரோ-வின்று

---

426 ஒருபாற் குலாவு மவள்-உமாதேவியார். பாரின் மடவார்-பூவுலகத்துப் பெண்கள். பாரீரோ-பார்க்க மாட்டீரோ ? சீர் உரையை-சீர்மையாகிய ஞானப்பொருளை

427 கல்லால் உவந்த கனவிரதம்-கல்லாலமர நீழலில் குருமூர்த்தமாக விரும்பி எழுந்தருளியிருந்த மிக்க விரதநெறி. போம்-போகும். என்றோ-என்று கருதியோ. நல்லார்-வனப்புறு பெண்மணிகள். இல்லார்-பொருளில்லாதவர்கள்.

428 தாஎன்று இரக்க-கொடும் என்று யாசிக்க. வானுடர்கோ-தேவர்கட்கு அரசன் (மகாதேவர்). குறுகினீர்-வந்தெய்தினீர். பாவையர்-பாவைபோலு மழகுடைய நங்கையர் என்பது பொருளாம். (உவமையாகுபெயர்)

429 வேண்டாதவர்-விரும்பாதவர். விழிகள்-கண்கள். உற்றும் பாரீர்-பொருந்தியும் பார்க்கின்றிலீர். ஆண்டார்-அடிமை கொள்பவர் (தலைவர்). அழிவு-தாழ்வு (தொலைவு).

430 சுகர்-சுகமுனிவர் (வியாசர்குமாரர்). குரு-அறியாமையினை யொழிக்கும் ஆசிரியர். ஒள்தொடி-ஒளிபொருந்திய வளையல்கள். பண்டு-திரிபுர சங்காரகாலத்து,

431 குன்றத்தனு-மலையாகியவில். குனித்தல்-வளைத்தல். புயக்குவடு-உருவகம், தோள்மலையென்பது பொருள். கொன்றைத்தொடை-கொன்றைப்பூமாலை, மாலையினை விரும்பினுள் என்றபடியாம். இன்று-இப்பொழுது (இஞ்ஞான்று)

விரக விடாய்தீர்ந்து வெம்பி யயர்ந்தா
ளரிவை துயர மறிந்து-புரிகுழலார்
தாங்கிக் கரத்தாற் றழுவி யவளோடு
மோங்குந் தனிமாடத் தூடணைந்தார்-பூங்கணைக
ளேவினா னவ்வே ளிவளு மிகத்துயர
மேவினாள் காதன் மிகச்சோர்ந்தா-ளாவி
பனிநீர் பொழிந்து பசுங்குழவித் தென்ற
லினிதூர வாலவட்ட மேந்தி-யினிதாகத்
தேற்றத் தெளிந்தாளத் திண்டே ருவந்தூரு
மேற்றினா னோர்வீதி யேகினான்-தோற்றிப்
பொருப்பிற் றிகழுமுலைப் பூவை யொருத்தி
திருப்பொற்பின் மிக்க தெரிவை-பெருத்த

---

432 விரகவிடாய்-விரகதாபம். விரகம்-காமநோய். தீர்ந்து-ஒழிந்துவிடற்கு, விரகவிடாய் தீர்ந்துவிடற்கு இன்று உதவ மாட்டீரோ என்று கூட்டிக்கொள்க. வெம்பி-வெதும்பி, இயற்கைநலன் குன்றி. அயர்ந்தார்-தளர்ந்தார். புரிகுழலார்-நெறிப்பினையுடைய கூந்தல் மகளிராகிய சேடியர்கள்

433 தாங்கி-சுமந்து. ஓங்கும்-உயர்ந்த. தனிமாடம்-உவமையில்லாத்தனி மாளிகை. பூங்கணைகள்-பூவம்புகள்.

434 ஏவினான்-எய்தினான். மிகத் துயரம்மேவினாள்-மிகத் துன்பத்தினையடைந்தாள். காதன் மிகச்சோர்ந்தாள்-ஆசை அதிகரித்தலால் அயர்வுற்றாள், ஆவிசோர்ந்தாள் எனக்கூட்டுக ஆவி-உயிர்.

435 பசுங்குழவி தென்றல்-மிகவிளமையாகிய தென்றல், மந்தமாருதம். ஊர-அசைய. ஆலவட்டம், காற்றுவரச் செய்ய.

436 தேற்றத் தெளிந்தாள்-தானே தெளியுமாற்றலின்றித், தெளிப்பத்தெளிந்தாளாயினாள். திண்தேர்-வலிய இரதம். ஏற்றினான்-இடபவூர்தியனாகிய சிவபெருமான் (கடவூரான்). தோற்றி-புலப்பட்டு.

437 பொருப்பின்-மலைபோல. பூவை-நாகணவாய்ப்புள். ஒருத்தி-தெரிவை. பொற்பு-அழகு. தெரிவை-இருபத்தாறு வயது முதல் முப்பத்தொரு வயதுவரையும் உள்ள பருவமுறு பெண்.

## தெரிவை

சிலையும் பசும்புயலுந் திங்கட் கொழுந்து
மிலகியதார் நீலத் திணரு-மலகில்
மாதளையின் முத்து மதுரப் பசுந்தேனுந்
தாதளவுஞ் சேதாம்பற் றண்போதும்-பேதமற
வொன்றிப் பொலிந்தாங் கொளிரும் வதனத்தாள்
தென்றற்றே ரூருஞ் சிலைமாரன்-வென்றிபெற
விரக விகாரத்தால் வெதும்பத் தளிர்க்குஞ்
சுரதாதி நல்குமொரு தோகை-விரிதருநற்
றுத்திப் பணாமுடியிற் றோன்றுமும் மாணிக்க
மத்திக்குட் டோன்றி யவிர்பவள-பத்தியா
யன்று வகுத்த வயனூர்தி யைக்கடிந்து
வென்ற நடையெகின மென்பேடு-என்றும்
பிஞ்சுதவழ் வேணிப் பெருமான் வரையெனலாய்
மஞ்சு தவழும்வளர் மாடத்தி-னஞ்சென்ன

438 சிலையும்-வில்லையொத்த புருவமும். புயல்-மேகம்போன்ற கூந்தல். திங்கட்கொழுந்து-பிறைச்சந்திரன்போன்றநெற்றி நீலத்துஇணர்-நீலோற்பலமலர்க்கொத்துப்போன்ற கண்கள்

439 மாதளையின் முத்து-மாதளை முத்துப்போன்ற பற்கள். மதுரம் பசுந்தேன்-இனிமையாகிய பசிய தேன்போலு மொழி. சேதாம்பல் போது-செவ்வல்லிப் பூப்போலும் உதடு. பேதமற-வேற்றுமையற.

440 ஒளிரும்-விளங்கும். வதனத்தாள்-முகத்தாள். தென்றல்-தென்றற்காற்று. ஊரும்-செலுத்தும். வென்றி-வெற்றி.

441 சுரதம்-புணர்ச்சி. நல்கும்-கொடுக்கும். ஒருதோகை-ஒப்பற்ற மயில்போன்ற சாயலினையுடையாள்.

442 அத்தி-கடல். தோன்றி-முளைத்து. அவிர்பவளம்-விளங்கும் பவளம்.

443 வகுத்த-படைத்த. கடிந்து-நீக்கி. மென்பேடு-மென்மையாகிய பெட்டையன்னம், மெல்லியர் எனும்பொருட்டாம்.

444 பிஞ்சு-மதிப்பிஞ்சு, (இளஞ்சந்திரன்). வரை-கைலைப்பருப்பதம். வளர்மாடம்-உயரிய மாளிகை.

445 கங்குன் மதிசூழ் ககனத் துடுவினம்போ
லங்கணையார் தற்சூழ்ந் தடிபரவச்-செங்கமல
மலர்மெல் லடிசேப்ப வஞ்சி மருங்குல்
குலவுங்கால் வீசுங் கொடிபோ-லலமந்

தொசியப் பிடியெகின மொப்ப நடந்தாங்
கிசையு மணிமேடை யெய்தி-வசியமலர்

தாராட்டுங் கூந்தலார் தாம்வினவச் சித்தசனால்
பாராட்டு மந்தப் பருவத்திற்-சீர்காட்டும்

பச்சிளந் தேன்மொழியும் பங்கே ருகத்தோன்செய்
முச்சகமுங் காக்கு முதல்வனார்-மச்சுகந்த

450 தேரார் கடவூரார் திருமறுகி லெய்திடலும்
வாரார் முலைமாதர் வந்தார்கள்-சீரான

## பேரிளம்பெண்

பேரிளம் பெண்ணொருத்தி பெய்யும் வளையிழந்து
பாரில் விழுந்தாள் பதைபதைத்து-நேரில்

---

445 ககனம்-ஆகாயம். உடுஇனம்-நட்சத்திரக்கூட்டம். அங்கனையார்-மகளிர்கள். தற்சூழ்ந்து-தெரிவையாகிய நங்கையைச்சுற்றி.

446 சேப்ப-செவப்ப. வஞ்சிமருங்குல்-வஞ்சிக்கொடிபோன்ற நுண்ணிடை. குலவுங்கால்-உலாவுகின்ற காற்றானது. அலமந்து-சுழன்று.

447 ஒசிதல்-ஒடிதல். பிடிஎகினம்ஒப்ப-பெண் அன்னத்தினைப் போல. இசையுமணிமேடை-பொருந்திய மாணிக்கமிழைத்தமேடை. வசியம்-கைவசம்.

448 மலர்த் தார்-மலர் மாலை. சித்தசன்-மனத்திலுதிப்பவன், (மன்மதன்).

449 பங்கேருகம்-சேற்றில் முளைப்பது. காரணவிடுகுறியாய் தாமரை மலருக்காயிற்று. பங்கேருகத்தான்-பிரமன். முச்சகம்-மூவுலகம். முதல்வன்-கடவூர்ப்பிரான். மச்சு-மேல்தட்டு.

450 எய்திடலும்-வரலும் (போதலும்). வாரார்முலைமாதர்-தெ

### பேரிளம்பெண்

ரிவை முதலானோர். பேரிளம்பெண்-32 வயது முதல் 40 வயது வரையிலுமுள்ள பருவ மாது.

451 பெய்யும் வளை-போடப்பட்ட வளையல்கள். இழத்தல்-கழலப்பெறல். பதைபதைத்து பாரில்விழுந்தாளெனக்கூட்டுக. பதைபதைத்து-துடிதுடித்து. நேரில்-கண்கூடாக, நேராக.

செவிலியவள் கண்ணுற்றுச் செங்கையி
[னுலணைத்துப்
பவளக்கா றன்னிற் படுவித்துத்-தவளநிறச்

சாமரைகள் வீசச் சரீரம் வெதும்பித்
தேமாவின் றென்றலினுற் றிளைத்துக்-கோமான்

மார்க்கண்டர்க் காக மனமிரங்கி வந்த
சீர்க்கொண்டல் சீரடியைச் சிந்தித்தாள்-பார்க்க

455 ணிறைந்த களிப்புற்ரு ணின்றபெருங் கீர்த்தி
சிறந்த வளத்தோடுஞ் செல்வ-மறந்திகழுந்

தேய நிலைநிற்பச் சீமான் கடவப்போய்
ஞேயதிருத் தேர்நிலையி னின்றதாற்-சேய

கனிவாய் மடந்தையர் கண்டன்ன சொல்லார்க்
கினிவா யருளை யிசைத்து-முனியார்

---

452 செவிலியவள்-செவிலித்தாய் (வளர்ப்புத்தாய்). பவளக்கால்தன்னில்-பவளக்கால்கோத்த படுக்கையில். படுவித்து-படுக்கச்செய்து.

453 தவள நிறச்சாமரை-வெண்சாமரை. வீச-வீசப்பெறலால். தேமா-இனிப்புடைய மாமரம், ஒட்டுமாவென்றலுமாம். திளைத்து-தளர்வுற்று.

454 மனம் இரங்கி-திருவுளமிரங்கி, வந்த-எழுந்தருளி வந்த. சீர்க்கொண்டல்-சிறப்புப்பொருந்திய. மேகம்போல்வான். (கைம்மாறு கருதாமையின்). சிந்தித்தாள்-எண்ணினுள். பார்க்கண்-பூமியின்கண்.

455 களிப்புற்ருள்-மகிழ்ச்சியடைந்தாள். நின்ற-நிலைபெற்ற.

456 தேயம்-தேசம். சீமான்-பெருமான். ஞேயம்-அன்பு, நேயமென்பதன் றிரிபு. நின்றது-நிலையுற்றது. சேய-செவந்த.

457 கனி-கொவ்வைக்கனி. வாய்-உதடு. கண்டு-கற்கண்டு, (ஒருவகை இனிப்புப்பொருள்). சொல்லார்-சொற்களையுடைய மகளிர்கள். இனிவாய்-இனிமையாய். அருளையிசைத்து-அருள்கூறி அருளைப்பொருத்தி. முனியார்-உலகப்பொருளை வெறுக்காதவர்.

கடையூரான் முன்னுங் கடவூரா னெங்கட்
குடையூரான் போந்தா னுலா.

---

458 கடை-இடத்து. ஊரான்-எழுந்தருளாதவன். முன்னும்-கருதும். கடவூரான்-கடவூரெனுந் திருப்பதியுடையவன். எங்கட்கு-எங்களுக்கு. உடைஊரான்-உரிமையாக (உடைமையாக) உள்ள ஊரினையுமுடையவன். உலா போந்தான்-பவனிவந்தருளினான்.

## நூற் சிறப்பு.

இந்நூற் படித்தா ரெழுதினா ரேத்தினார்
தன்னடியைச் சேரத் தயாவருளி-முன்னோனல்
லாசிகள் கூறி யடைந்தான் றிருக்கோயிற்
காசினியோர்க் கோங்கக் களி.

நூல்சிறப்பு-நூலினது மேன்மை.

இந்நூலைக் கற்றவரும், வரைந்தவரும், போற்றினவரும் தன்னுடைய திருவடிகளையடையக் கருணைபுரிந்து, முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளாகிய முதல்வன், நல்ல ஆசிமொழிகளை மொழிந்து, உலகத்தவர்க்கு மகிழ்ச்சி மிகத் திருக்கோயிற்குச் சென்றருளினான் என்பதாம்.

திருக்கடவூருலா மூலமும், அரும்பதவுரையும்
முற்றிற்று.

உ

குருபாதம்.

# தருமபுர ஆதீனம்

## ஆதீன வெளியீடு புத்தகங்களின் விபர ஜாப்தா.

| நெ. | விபரம். | வெளியிடப்பட்ட வருஷம். |
|---|---|---|
| 1 | குருஞானசம்பந்த சுவாமிகள் தாலாட்டு | 1924 |
| 2 | நித்திய கன்மநெறி | 1927 |
| 3 | திருமுல்லைவாயிற்புராணம் | 1927 |
| 4 | திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் | 1927 |
| 5 | சித்தாந்த நிச்சயம் | 1928 |
| 6 | சம்பிரதாய தீபம் | 1928 |
| 7 | வருணாச்ரம சந்திரிகை | 1930 |
| 8 | சிகாரத்தின மாலை | 1930 |
| 9 | திருப்பதிகமும் பஞ்சரத்தினமும் | 1930 |
| 10 | தசமணி மாலை | 1930 |
| 11 | ஞானசம்பந்த குருராய வட்டகமும், சந்திரகலா மாலையும் | 1930 |
| 12 | திருவையாற்றுப் புராணம் | 1930 |
| 13 | சிவானந்தபோதசாரம் | 1931 |
| 14 | சோடச கலாப்பிரசாத சட்கம் | 1931 |
| 15 | சைவசன்யாச பத்ததி | 1932 |
| 16 | சிவபோகசாரம் | 1932 |
| | ஷை இரண்டாம் பதிப்பு | 1936 |
| 17 | சிவப்பிரகாச கட்டளை | 1932 |
| | ஷை இரண்டாம் பதிப்பு | 1939 |
| 18 | தோத்திரப்பாடற்றிரட்டு | 1933 |
| 19 | திருத்துருத்திப் புராணம் | 1933 |
| 20 | ஞானசரிதை | 1934 |
| 21 | முத்தி நிச்சயம் | 1934 |

| | | |
|---|---|---|
| 22 | அறிவானந்த சமுத்திரம் | 1935 |
| 23 | பண்டார மும்மணிக்கோவை | 1937 |
| 24 | இந்துமத பாலபாடம் | 1937 |
| 25 | சிதம்பரச் செய்யுட்கோவை | 1937 |
| 26 | திருவையாற்றுத் தலமகிமைச்சுருக்கம் | 1937 |
| 27 | கிளிவிடு தூது | 1938 |
| 28 | திருமூலப்பால் சிறப்பு | 1939 |
| | ஷை இரண்டாம் பதிப்பு | 1941 |
| 29 | பதி பசு பாசத்தொகை | 1940 |
| 30 | சிவஞானதேசிகர் நான்மணிமாலை | 1940 |
| 31 | திருபுவனத் தலமகிமைச் சுருக்கம் | 1940 |
| 32 | கீர்த்தித் திருவகவல்—மாணிக்கவாசக சுவாமிகள் | 1941 |
| 33 | ஸ்ரீகுருஞான சம்பந்த சுவாமிகளின் வரலாறும் சில பாசுரங்களும் | 1941 |
| 34 | வைத்தீஸ்வரன்கோவில் தேவாரம் திருப்புகழ் | 1941 |
| 35 | திருத்தொண்டத்தொகையும் அசபா நடனப்பதிகமும் | 1941 |
| 36 | குங்கிலியக்கலயநாயனார் அன்பின்திறம் | 1941 |
| 37 | திருக்கடவூர் தேவாரம் திருப்புகழ் | 1941 |
| 38 | திருவையாற்றுத் தேவாரங்கள் | 1941 |
| 39 | புள்ளிருக்கு வேளூர்ப்புராணம் | 1941 |
| 40 | சித்தாந்த சைவ வினாவிடை | 1941 |
| 41 | நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும் | 1941 |
| 42 | ஆச்சாள்புரம் கோவில் வரலாறு | 1941 |
| 43 | திருவையாற்றுக்கோவில் வரலாறு | 1941 |
| 44 | ஸ்ரீ சுப்பிரமணியர் திருவவதாரமும் கந்தர்கலி வெண்பாவும் | 1941 |
| 45 | தருமபுர ஆதீனம் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு திருமுறைத்திருநாள் | 1941 |
| 46 | சிவபூஜா விதி | 1941 |
| 47 | சைவாநுஷ்டான விதி | 1941 |
| 48 | திருக்கடவூருலாமூலமும்அரும்பதவுரையும் | 1941 |